மாமுனிகள் வைபவம்

ஸ்ரீ உ. வே. ஸம்பத்குமாராசார்யர், பேராசிரியர், விவேகாநந்தர் கல்லூரி, மயிலை

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பல ஆசார்யர்கள் விளங்கினாலும் மூவர் முக்யமாகக் கொள்ளப்படுகின்றனர்; அவர்களாகிறார் "ஆமுதல்வன்' என்னும்படி அவதார விசேஷமாயிருந்துள்ள வ்யக்தி விசேஷங்கள்—'முகில் வண்ணனடியை யடைந்துய்ந்த' நம்மாழ்வாரும், அந்த 'மாறனடிபணிந்துய்ந்த' நம்மிராமானுசனும், அவர் திருவடிகளிலே அநந்யசரணரான நம் மாமுனிகளும். அதனால்தான் ஸ்ரீவைஷ்ணவ உலகம் "ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம், ஜீயர் திருவடிகளே சரணம்'' என்று நிச்சலும் அனுஸந்தித்து வருகிறது. நம்மாழ்வாருடைய பெருமையைக் காட்டிலும் எம்பெருமானாருடைய பெருமை சிறந்தது. இவ்விருவருடைய பெருமைகளைக் காட்டிலும் மாமுனிகளுடைய பெருமை மிகச் சிறந்தது ஆகும். எம்பெருமான் கைவிட்டவர்களையும் திருத்தியவர் நம்மாழ்வார். ஓராண் வழியாகப் பூருவர்கள் உபதேசித்துப் போந்த நியமத்தைக் குலைத்துப் பலரையும் உபதேசிக்கும்படி பண்ணி, பலகால் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் கேட்ட பரமார்த்தத்தை ஓலக்கமாக வைத்து உபதேசித்தவர் எம்பெருமானார். பூர்வாசார்ய பரம்பராப்ராப்தமான அர்த்த விசேஷங்களை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்க வேண்டும் என்று பரம காருணிகரான பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த மூன்று ரஹஸ்யங்களுக்கு மட்டும் தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகிய வ்யாக்யானங்களை அருளிச்செய்தவர் நம் மாமுனிகள். ஆதலால் தான் இவ்விருவர் பெருமையிலும் மாமுனிகளின் மேன்மை மேம்பட்டதாகும். மாமுனிகளிடத்தில் ஆசார்ய பதவியை அலங்கரிப்பதற்கு ஏற்ற நற்குணங்கள் அனைத்தும் குடிகொண்டிருந்தன என்றால், இஃது இறையும் அதிசயோக்தி யாகாது.

இவர் ஆழ்வார் திருநகரியிலே திருவவதரித்தார். இவருடைய திருத்தந்தையார் திருநாவீறுடைய பிரான் தாஸர் அண்ணர். கலியுகத்தில் நாலாயிரத்து நூற்றெழுபத்திரண்டாவதாய், சக வருஷத்தில் ஆயிரத்து இரு நூற்றுத் தொண்ணூற்று இரண்டாவதான ஸாதாரண வருஷத்தில் ஐப்பசி மாதத்தில் இருபத்தாறுவது நாளில் சுக்லபக்ஷத்தில் வியாழக்கிழமை சதுர்த்தி கூடின மூல நக்ஷத்திரத்தில் அவதரித்தார்.

ப்ரதிவாதி பயங்கரம் அண்ணவும், எறும்பியப்பாவும் இவ்விஷயத்தை "யதவரண மூலம் முக்தி மூலம் ப்ரஜாநாம் சடரிபு முநித்ருஷ்டாம்நாய ஸாம்ராஜ்ய மூலம் கலிகலுஷ ஸமூலோந்மூலநே மூலமிந்தே ஸ பவது வரயோகி நஸ்ஸமஸ்| தார்த்த மூலம்'' (ச்லோகம் 2) என்றும்,

"யந்மூலமாச்வயுஜமாஸ்யவதார மூலம்
காந்தோபயந்த்ரு யமிந: கருணைக ஸிந்தோ:
ஆஸீத ஸத்ஸ ுகுணிதஸ்ய மமாபிஸத்தா
மூலம் ததேவ ஜகதப்யுதயைக மூலம்''

(ச்லோ. 100) என்றும் தாம்தாம் அருளிய வரவரமுநி சதகம் தன்னில் அருளிச்செய்தார்கள்.

இவர் ஆதிசேஷனுடைய அம்சமாகவும் எம்பெருமானாருடைய அபராவதாரமாகவும் அவதரித்தவர் என்னுமதை

srivatsam
acharya.org

அப்பிள்ளார் ''ஆதியிலே யரவரசை யழைத்தரங்கர் அவனியிலே யிருநூறாண்டிரு நீரென்ன, பாதியிலே உடையவராய் வந்து தோன்றிப் பரமபதம் நாடியவர் போவே னென்ன, நீதியாய் முன்போல நிற்க நாடி நிலுவைதனை நிறைவேற்றி வாருமென்னச் சாதாரண மெனுமாம் வருடந்தன்னில் தனித்துலா மூலநாள் தான் வந்தாரே'' என்று அருளிச்செய்கிறார். மைசூர் அனந்தாழ்வான் ஸ்வாமியும்.

"சேஷ: ஸ்ரீமாந் நிகம மகுடயுக்ம ரக்ஷாப்ரவ்ருத்த:
ஸ்ரீமத் ராமாவரஜ முநிதாம் ஸௌம்ய ஜாமாத்ருதாஞ்ச
விந்தந் த்ருப்யத் விமதபடலீ பாடநோத்தாம ஸூக்தி:
பூயாத் பவ்ய ப்ரதித மஹிமா ச்ரேயஸே பூயஸேந:

என்று அருளிச்செய்தது காணவேணும்.

இவருக்குப் பெற்றோர்களிட்ட திருநாமம் அழகிய மணவாளன் என்பதாகும். இவர் 'திருவாய்மொழிப்பிள்ளை' திருவடிகளிலே ஆச்ரயித்து "தேவுமற்றறியேன்" என்னும்படி இருந்து அவருபதேசத்தாலே திருவாய்மொழி தொடக்கமான எல்லா திவ்ய ப்ரபந்தங்களினுடையவும் அவற்றின் தாத்பர்யமான எல்லா ரஹஸ்யங்களினுடையவும் அர்த்தத்தைக் கற்றார். ''நம்முடைய குரு பரம்பரையாகிற ஹாரத்துக்கு நடுநாயக ரத்னம்போல் விளங்கும் உடையவர் திருவடிகளையே உமக்குத் துணையாகப் பெற்றிடும்'' என்று பிள்ளை காட்டிக்கொடுக்க, மாமுனிகளும் உடையவர் திருவடிகளிலே அதிப்ராவண்யத்தையுடையவரா யிருந்தபடியால் "யதீந்த்ர ப்ரவணர்" என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

நம்முடைய பூர்வாசார்யர்கள் அனைவரும் ''தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம்'' திருப்பதியையே இருப்பிடமாகக் கொண்டு தர்சந நிர்வாஹம் பண்ணிப் போந்தவர்களாதலால் இவரும் அங்கே எழுந்தருளி அழகிய மணவாளனுடைய பரம க்ருபைக்குப் பாத்ரமானார். ப்ரதமாசார்யரான பெரிய பெருமாள் சரமாசார்யரான பெரிய ஜீயரை ஆசார்யனாகக் கொண்ட பெருமை மற்ற ஆசார்யர்களுக்கு இல்லாததொன்றாகும். ஆசார்யத்வ பூர்த்தி இவரிடத்தில் இருந்தமையால் தான் இவரை ஆசார்யனாகக் கருதினான் பெரிய பெருமாள். இவ்விஷயத்தைச் சற்று விவரிக்கிறேன்.

சாஸ்திரங்களில் ஆசார்ய லக்ஷணம் இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. "ஆசினோதி ஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயித்யபி, ஸ்வயம் ஆசரதேயஸ்து ஆசார்யஸ்ஸோபிதீயதே" என்ற ப்ரமாணத்தின்படி ஞானம் அனுட்டானம் இவை இருக்கவேண்டும்; வாக்வன்மை இருக்கவேண்டும். இவைதான் ஆசார்யனுக்கு லக்ஷணம். ஸ்ரீவசனபூஷணத்தில் ஆசார்யனுக்கு இந்த சாஸ்த்ர மர்யாதையிலே லக்ஷணம் சொல்லப்பட்டிருப்பினும் தனியாக ஒரு லக்ஷணத்தைப் பரம காருணிகரான பிள்ளைலோகாசாரியர் ஒரு ஸூத்ரத்தில் தெரிவிக்கிறார்: "நேரே ஆசார்யன் என்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்தவனை" என்பது 315-வது ஸூத்ரம். பகவந் மந்த்ரங்கள் அநேகம். எப்படி பகவானுடைய குணங்கள் எண்ணிறந்தவையோ பெயர்கள் எண்ணிறந்தவையோ அப்படியே மந்த்ரங்களும் எண்ணிறந்தவை. மற்றை மந்திரங்கள் ஸம்ஸாரத்தைத் தாண்டச் செய்யாதவை. ஸம்ஸாரத்தை வளர்க்க உதவி செய்பவை. அவை பெருமையற்றவையாயும் க்ஷுத்ரங்களுமாயு மிருக்கும். இந்த மந்த்ரங்களை உபதேசித்தவனுக்கு ஆசார்யத்வ பூர்த்தி கிடையாது. ஆசார்யன் யார் என்றால்

acharya.org

ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்தவனைத்தான். மந்த்ரம் என்னுமலும், திருமந்த்ரம் என்னுமலும், பெரிய திருமந்த்ரம் என்கை, எல்லாப் பயன்களையும் இம்மந்திரம் கொடுத்தாலும் மற்றைப் பலன்களில் நோக்கு இல்லாமல் மோக்ஷமாகிற பலத்திலே நோக்குடையதாயிருக்கும். வேதாந்தங்கள் எல்லாவற்றினுடைய கருத்துப் பொருள்: பிறவிப் பெருங்கடலைக் கடக்கச் செய்வது. மீண்டும் பிறப்பதற்கு விரும்பாத மக்களுக்குப் புகலிடம் இந்தப் பெரிய திருமந்த்ரம். ஆதலால்தான் இந்த மூலமந்த்ரமானது "மந்த்ராணும பரமோ மந்த்ர: குஹ்யா நாம் குஹ்யமுத்தமம்| பவித்ரம்ச பவித்ராணும் மூலமந்த்ரஸ்ஸநாதந:||" என்றது பாஞ்சராத்ரம். இம்மந்த்ரத்தை உபதேசித்தவனைத்தான் ஆசார்யன் என்று சொல்லவேணும்.

பெரிய திருமந்த்ரத்தை உபதேசிப்பதோடு மட்டுமன்றி அதன் விவரணமான த்வயம் சரமச்லோகம் இவற்றையும் உபதேசித்தவன் ஆசார்யனுவன். திருமந்த்ரத்தின் நடுப்பதமான 'நம: என்பதன் விவரணம் த்வயத்தின் பூர்வவாக்யம். திருமந்த்ரத்தின் கடைசிப் பதமான "நாராயணுய" என்பதன் விவரணம் த்வயத்தின் உத்தரவாக்யம். சரமச்லோகத்தின் பூர்வார்த்தம் த்வயத்தின் முன் வாக்கியத்தின் விவரணம். சரமச்லோகத்தின் பின்பாதி த்வயத்தின் உத்தரார்த்த விவரணம். ஆக த்வயம், சரமச்லோகம் என்ற மற்ற இரண்டு ரஹஸ்யங்களும் ப்ரதம ரஹஸ்யமான திருமந்த்ரத்தோடு வேறுக இல்லாதிருத்தலால் திருமந்த்ரத்தைச் சொல்லவே மற்றவற்றின் உபதேசமும் தன்னடையே சொல்லியதாகத் தேறும். இதனைத் திருவுள்ளம் பற்றித் தான் பெரிய திருமந்திரத்தை உபதேசித்தவனை என்ருர் பிள்ளைலோகாசார்யர்.

ஆகையால் இது ரஹஸ்ய த்ரய உபதேசத்துக்கும் உபலக்ஷணம்.

திவ்ய ப்ரபந்தங்கள் எல்லாமே அதன் விவரணம்தான். ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் நான்கு. அவற்றில் சரம ப்ரபந்தம் திருவாய்மொழி. அது த்வயத்தின் விவரணம். "த்வயார்த்தம் தீர்க்க சரணுகதி என்கிறது ஸாரஸங்க்ரஹத்திலே" என்கிருர் பிள்ளைலோகாசார்யர். திருவாய்மொழிக்கு ஒப்பானதாய் வேருென்று ஒப்பில்லாததான வ்யாக்யானமான ஈட்டை மாமுனிகளைக்கொண்டு ஓதிப் பெருமாள் திருச்செவிசாத்தினன். இத் திருவாய்மொழியின் அர்த்தத்தைப் பெரிய பெருமாள் மாமுனிகளிடத்து மட்டும் கேட்கக் காரணம் அவர் தம்மை நீசனுகச் சொல்லிக் கொண்டபடியால்தான். பின்னும் "பிறர் மினுக்கம் பொருமையில்லாப் பெருமையும் பெற்றேரே" என்று தம்மைத் தாமே கூறிக்கொண்டார். இது அவருடைய விபவ தசையில்; அர்ச்சையிலும் அப்படியே. அவருடைய (திருவுருவம்) அர்ச்சா விக்ரஹம் ஆழ்வார் திருநகரியில், நின்ற திருக்கோலத்தோடும், திருவரங்கத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தோடும் நம் போன்றவர்களால் ஸேவிக்கப்படுகின்றன. "ஆழ்வாரைக் காட்டிலும் நமக்கு என்ன சிறப்பு, ஏற்றம்" என்று எண்ணித் தம்முடைய விக்ரஹத்தைச் சிறிதாக்கிக் கொண்டார் ஆழ்வார் திருநகரியில்; திருவரங்கத்திலோ "எம்பெருமானுர் நல்லாட்சி செய்து பெருமைப்பட்டவர். அவரைக் காட்டிலும் நமக்கு என்ன பெருமை" என்று எண்ணி, அடியார்கள் ப்ரார்த்தனைப்படி, பெரிய திருவுருவம் ஏறியருளப் பண்ணக்கூடாது என்று சிறிதாக்கிக் கொண்டார். "ஆழ்வாரே தம்மை நீசனுகச் சொல்லிக் கொண்டாரே! ("நீசனேன் நிறைவு ஒன்றுமிலேன்") ஆகையால் நாம்

acharya.org

எம்மாத்திரம்'' என்று தம்மை நீசனுகச் சொல்லிக்கொண்டபடியால்தான் பெரிய பெருமாள் இவரை ஆசார்யனுக வரித்தான். த்வய விவரணமான திருவாய்மொழியின் வ்யாக்யானங்களை ஆருயிரப்படி, ஒன்பதினுயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாருயிரப்படி இவற்றுடன் விசதமாக உபந்யஸித்தார். அதுகேட்டு எம்பெருமானும் இவருடைய வாக்வைபவத்தைக் கொண்டாடி இவருக்குத் தலையான ஸ்ரீசைலேசதனியனை ஸமர்ப்பித்தான்.

ராமாவதார காலத்தில் ராமனுகிய பெருமாள் திருவடியின் (ஹநுமானின்) வாக்வைபவத்தைக் கொண்டாடினுன் "நாந்ருக்வேத விநீதஸ்ய நாயஜுர்வேத தாரிண: நாஸாமவேதவிதுஷ: சக்யமேவம் ப்ரபாஷிதும்" என்று வால்மிகி கூறுகிருர். கம்பரும்

இல்லாத உலகத்து எங்கும் இங்கு
இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே
என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
ஆர்கொலிச் சொல்லின் செல்வன்,
வில்லார் தோள் இளையவீர! விரிஞ்
சனே! விடைவலானே!

என்று பாசுரம் பாடினுர்.

எப்படிப் பெருமாள் திருவடியினுடைய வாக் வைபவத்தைக் கொண்டாடினுரோ அதுபோலவே ஆசார்யச்ரேஷ்டரான மாமுனிகளின் வாக் வைபவத்தைக் கேட்டுப் பெருமாளுக்கும் பெருமாளான பெரிய பெருமாள் கொண்டாடி விசதவாக் சிகாமணி என்ற பிருதையும் ஸன்மானித்தான்.

ஒவ்வொருவரும் தம்முடைய பெருமையைச் சொல்லிக் கொள்வதுபோல நம் மாமுனிகளும் தம்முடைய பெருமையை ஆர்த்தி ப்ரபந்தத்தில் ஒரு பாசுரத்தில் அருளிச்செய்கிருர் :

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப்
பெற்ருேம்
திருவரங்கம் திருப்பதியே யிருப்பாகப்
பெற்ருேம்
மன்னியசீர் மாறன்கலை உணவாகப்
பெற்ருேம்
மதுரகவி சொற்படியே நிலையாகப்
பெற்ருேம்
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப்
பெற்ருேம்
முழுதுமவை நமக்குப் பொழுது
போக்காகப் பெற்ருேம்
பின்னை யொன்றுதனில் நெஞ்சு பேராமற்
பெற்ருேம்
பிறர் மினுக்கம் பொருமையில்லாப்
பெருமையும் பெற்ருேமே.

இப்பாசுரத்தை ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் தினமும் அனுஸந்திக்க வேண்டும்.

மாமுனிகள் சிஷ்யர்கள் "அஷ்டதிக் கஜங்கள்" என்மர் :

(1) வானமாமலை ஜீயர்
(2) பட்டர்பிரான் ஜீயர்
(3) திருவேங்கட ராமானுஜ ஜீயர்
(4) கோயில் அண்ணன்
(5) ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன்
(6) எறும்பியப்பா
(7) அப்பிள்ளை
(8) அப்பிள்ளார்

இவர்கள் தவிர அநேக சிஷ்யர்களும் உண்டு.

மாமுனிகள் அருளிச்செய்த க்ரந்தங்கள்:—

ஸ்ரீவசன பூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி, ஆசார்ய ஹ்ருதயம்— இவற்றிக்கு வ்யாக்யானம்,

பெரியாழ்வார் திருமொழிக்கு லோபம் அடைந்த பகுதி மாத்திரம் உரை,
ராமாநுஜ நூற்றந்தாதி உரை,
திருவாய்மொழி நூற்றந்தாதி,
உபதேசரத்தினமாலை,
ஆர்த்தி ப்ரபந்தம்,
யதிராஜ விம்சதி
தேவராஜமங்களம்.

"அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்டமிழ் நூல் வாழ—கடல்
சூழ்ந்த
மன்னுலகம் வாழ—மணவாள மாமுனியே
இன்னமொரு நூற்ருண் டிரும்."

srivatsam

acharya.org

திருவல்லிக்கேணிப் பதிகாநுபவம்

ஸ்ரீ உ. வே. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார், M.A., B.L,
[ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்ஸனம் ஆசிரியர், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17]

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி இரண்டாம்பத்து மூன்றும் திருமொழி, திருவல்லிக்கேணிப் பதிகமாகும். "விற்பெருவிழவும்" தொடங்கி "சுகமினிதாள்வர்வானுலகே" என்று முடிவாகப் பத்துப் பாசுரங்கள் கொண்டது இப்பதிகம். தொண்டைமான் சக்கரவர்த்தி இருந்து அரசாண்ட மயிலாப்பூர் என்னும் படைவீட்டின்—இராசதானியின்—ஒரு பகுதி திருவல்லிக் கேணி. எப்போதும் குளிர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்தது இப்பகுதி. பகவதாஜ்ஞைக்குப் பயந்து சமயத்தில் உதிக்கும் சூர்யனின் வெயில் உட்புகாதபடி குரவம்-குரா முதலான மரங்கள் செறிந்துள்ள சோலைகளில் அம்மரங்களின் பூக்கள் மணம் கமழ வண்டுகள் பூக்களில் தேனைப் பருகி இன்பமிகுதியால் ரீங்காரம் பண்ண, குயில்கள் பாட, மயில்கள் ஆடுகின்றன. சோலைகளில் வாவிகள்—பெரிய துரவுகளான நீர்நிலைகள் உள்ளன. படைவீட்டுக்கு அகழிசூழ்ந்த மதில்களும் படைவீட்டுக்குள், தேராரும் நெடுவீதிகளில் இருபுறமும் மாடமாளிகைகளும் மண்டபங்களும் வரிசையாக அமைந்துள்ளன. மாளிகை மாடங்களில் மாதர்கள் களித்து விளையாடுகின்றனர். பெண்கள் பிராட்டியின் விபூதிகள்—பரிகரமானவர்கள். "ஒருவல்லித் தாமரையாள் சென்று ஒன்றிய சீர் மார்வன் திருவல்லிக்கேணியான்" என்றபடி பிராட்டி ப்ராதான்யமே மிக்கது இத்திருவல்லிக்கேணி திருப்பதி.

இப்பதிகத்திற்குக் கீழ்ப் பதிகத்தில் திருவெவ்வுளில் கிடந்தானை வீரராகவனை அநுபவித்தார். அவ்வெம்பெருமான் ஸ்ரீவைஷ்ணவர்கள் புஷ்பமாலைகள் கொண்டு பூஜித்து ஸ்தோத்ரம்பண்ணலாம்படி ஸுலபன். அவன் திர்யக்கான ஸ்ரீ கஜேந்த்ரனும் மலர்கொண்டு ஏத்தும் படியான ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களையெல்லாம் திருவல்லிக்கேணி நின்றானிடம் நன்றாக அனுபவிக்கலாம்படி காட்டிக்கொடுக்க, ஆழ்வார் திருவல்லிக் கேணியில் எம்பெருமானை அக்குணங்களோடு கண்டு அநுபவித்து அவ்வநுபவத்தை "திருவல்லிக்கேணிக் கண்டேனே" என்று இப்பதிகத்தால் வெளியிடுகிறார். கீழ் சிங்கவேள் குன்றத்தில் அஹோபிலத்தில் வீற்றிருக்கும் நரசிம்மனை அநுபவித்த அநுபவமும், திருவேங்கட மலையில் நிலையார நின்று சரண்யனாய் ஸ்ரீமானான எம்பெருமானை அநுபவித்த அநுபவமும் அங்கேயே திண்கைமா துயர் தீர்க்கப் புள்ளூர்ந்து வந்துதவினதை அநுபவித்த அநுபவமும் தனித்தனியாக அமைந்தது ஆழ்வாருக்கு. ஒரு காலத்தில் தேனையும், பாலையும், கன்னலையும், அமுதையும் ஒன்றாகச் சேர்த்துப் பருகினால் உண்டாகும் விலக்ஷண ரஸாநுபவம் போன்ற ஓர் அநுபவம் திருவல்லிக்கேணியில் ஆழ்வாருக்கு அமைந்தது. திருவல்லிக்கேணியில் ஐந்து திவ்ய தேசம் என்ற வழக்குள்ளது.

கீழ்ப்பதிகத்தில் முதல் பாசுரத்தில் ராமாவதாரத்தை முதலில் அநுபவித்து பின்பு க்ருஷ்ணாவதாரத்தை அநுபவித்தார். இப்பதிகத்தின் முதல் பாசுரத்தில் க்ருஷ்ணாவதாரத்தை முதலில் அநுப

acharya.org

வித்துப் பின்பு ராமாவதாரத்தை அநுபவிக்கிறார். கண்ணனது ஒரேவொரு லீலா வ்யாபாரத்தில் விற்பெருவிழவும், கம்ஸனும் மல்லர்களும் யானையும் யானைப்பாகனும் எல்லாம் உயிரற்று வீழ்ந்தன. “முப்புரம் எரித்தவன்” என்று தன்னைத் தானே மதித்திருந்த ருத்ரனின்—தன் பிதாவான பிரமனின் தலையை யறுத்ததனால் ஆன மஹாபாதகத்தைப் போக்கித் தானே ஸர்வரக்ஷகன் என்பதை ப்ரகாசிப்பித்தான் திருவல்லிக்கேணியான். அவனே ஸ்ரீய: பதி: தேவன். குதிரைகளைக் கடத்தும் கோலைக் கையில்கொண்டு தன்னை ஆச்ரயித்த பாண்டவர்களின் விரோதிகளாகையால் தனக்கு விரோதிகளான துர்யோதனாதியரை அழித்துத் தனது ஆச்ரித பக்ஷபாதம் தோன்ற நிற்கிறவன் பார்த்தசாரதி—ஸ்ரீ கீதாசார்யன். அவனே முன் அவதாரத்தில் சிறிய தாயான கைகேயி சொல்லால் முடிதுறந்து காடேறப்போனான். ஆச்ரிதர்களான பாண்டவர்களுக்காகத் தன் ஸர்வேச்வரத்வத்தை அழிய மாறி ஸாரத்யம் செய்தான். கூனியின் போதனையால் கலங்கின கைகேயி ஸ்ரீராமனிடம் தனது பேரன்பை மறந்து போலியான அன்பு காட்டினாள். அவள் சொல்லையும் கேட்டு நியாயப்ராப்தமான முடியைத் துறந்து காடேறப்போனான். இதல்லவோ ஸௌசீல்ய குணம் என்று ஈடுபடுகிறார் ஆழ்வார். (1)

ஆச்ரித பரதந்த்ரனானவனே, பரதத்வம் என்று இரண்டாம் பாட்டில் அநுபவிக்கிறார். “வேதைச்ச ஸர்வை ரஹமேவ வேத்ய: (கீதை) [எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே] என்று ஸகல வேத ப்ரதிபாத்யனான எம்பெருமான் கண்ணன். அந்த வேதவிஹித கர்மபலன்களை அந்தந்த அதிகாரிகளின் ருச்யானுகுணமாகத் தருகிறவன். ப்ரஹ்ம பாவனையேயுடையவர்களான, ஸாத்விகர்களுக்கும், பொதுவாக முமுக்ஷுக்கள் அனைவருக்கும்—காரணம் துத்யேய: (அதர்வசிஸ்) காரணப் பொருளே த்யானம் பண்ணத்தக்கது) என்று—த்யான விஷயமாய் ஜகத்காரணனான எம்பெருமான் நந்தகோபன் குமரனாய் அவதரித்தவன். அவனே உபாயோபேயமானவன் இதை எனக்குக்காட்டி என்னை ஆட்படுத்திக்கொண்டவன் ஸ்ரீ கீதாசார்யன். (2)

கண்ணனாய் அவதரித்தபோது முதன் முதலில் ஏற்பட்ட ஆபத்தைப் போக்கிக்கொண்டு தன்னை நமக்குத் தந்து நோக்கினவன் என்று பூதநா ஸம்ஹார சரித்தை அநுபவிக்கிறார் மூன்றாம் பாசுரத்தில். பேயான தனக்குப் பொருந்தாத, தாய் வடிவோடு வந்து உலகுக்கே ஆருயிரான கண்ணனை அழிக்க வந்தாள் பூதனை. புருஷோத்தமனான தனக்குப் பொருந்தாத பெண்ணுருவாகி ப்ரயோஜனாந்தரபரர்களான தேவர்களுக்கு உயிர்கொடுக்கும் அமுதத்தைத் தந்தான், பெருமான்: எம்பெருமானது இவ்விரு செயல்களையும் கண்டு வித்யாதரர் முதலானோர் ஸ்தோத்ரம் பண்ணினார்கள். இப்படி அசுரர் வெங்கூற்றமாய் வானவர்தம் இன்னுயிராய் விளங்குமவனான எம்பெருமானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே என்று அநுபவித்தார். (3)

படாதனபட்டு அமுதம் தந்த எம்பெருமானிடம் நன்றி பாராட்டாது பசிக் கோபத்தால் அவனோடேயே எதிர்த்த தேவேந்திரனின் கர்வத்தைப் போக்கின எம்பெருமானின் கோவர்த்தனோத்தரண சரிதத்தை அநுபவிக்கிறார் நான்காம் பாசுரத்தில். கண்ணன் சொல்வதை அப்படியே நடத்திப்போருமவர்கள் ஆயர்கள். அதற்குமேல் ஒன்றும் அறியாதவர்கள். ஆண்டுக்கொருதடவை மழைக்காகத் தேவேந்திரனுக்குப் பூசை செய்

srivatsam

acharya.org

வதற்காகக் காரியங்கள் நடப்பதைக் கண்ட கண்ணன், "கண்முன்னே நிற்கிற இக் கோவர்த்தன மலையல்லவா பசுக்களுக்குப் புல்லும் தண்ணீரும் கொடுக்கிறது. இம் மலைக்குப் படையுங்கள். இது உங்கள் பூசையை அப்படியே ஏற்றுக்கொள்ளும் பாருங்கள்" என்றான். ஆயர்கள் அது சரியே என்று அப்படியே செய்தனர். ஸர்வாத்மாவான கண்ணன் கோவர்த்தனமாய் நின்று அனைத்தையும் கொண்டான். இந்திரன் பசிக்கோபத்தால் கடுமையான கல்மாரி பெய்விக்க கண்ணன் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்து ஆயரையும் ஆநிரையையும் காப்பாற்றினான். பசுவின் ரக்ஷகர்களான கோபர்களோடு வாசியில்லாமல் எல்லாவற்றையும் ரக்ஷிப்பவன் எம்பெருமானே. எல்லாம் அவனுக்கு ரக்ஷ்யங்களே. எம்பெருமான் மழையைத் தடுத்து ரக்ஷித்ததின் பொருள்: மெய்யடியார்களே! எப்பொழுதும் துன்பமாரியைப் பெய்விக்கும் ஸம்ஸாரத்தைத் தடுத்து ரக்ஷிப்பவன் நானே எனப் படுவதேயாம். (4)

முதற் பாசுரத்தில் "பார்த்தன் தன் தேர்முன் நின்றானை" என்று பார்த்தசாரதியான தன்மையை அநுபவித்தார். இவ்வைந்தாம் பாசுரத்தில் அதற்கு முந்தினதான பாண்டவ தூதனைச் சென்ற சரிதத்தை அநுபவிக்கிறார். ஸ்ரீபூமி நீளா நாயகனான கண்ணனே எல்லார்க்கும் வலிய துணையாவான். தன்னையே அண்டின பாண்டவர்க்காகத் தூது சென்று பாண்டவர்கள் சொல்லியதை அங்குச் சொல்லி, அவர்கள் சொல்லியதைப் பாண்டவர்களிடம் சொல்லி இப்படித் தூது நடந்தவன் ஆச்ரிதவத்ஸலனான கண்ணன். இதை ஆழ்வாருக்குக்காட்டி ஆழ்வாரைத் தனக்காக்கிக்கொண்டு அவர் குலத்துக்கெல்லாம் துணையாய் நிற்பவன் ஸ்ரீகீதாசார்யன் ஒருவனே. உலகில் ஒருவருக்கொருவர் துணை என்று துணை பலரைப் பற்றியிருக்கும். இங்கு அப்படியன்று. ஏகநிஷ்டனே கண்ணனே துணையாவான. (5)

கீழ்ப்பாசுரங்களில் அநுபவித்த பாண்டவ தௌத்ய ஸாரத்யங்களுக்குக் காரணமான த்ரௌபதி சரணாகதியை ஆறும் பாசுரத்தில் அநுபவிக்கிறார். மிக்க பெருஞ்சபை நடுவே, துச்சாதனன் த்ரௌபதியை மானபங்கம் செய்ய முயன்ற போது த்ரௌபதி, "கோவிந்தா நீயே புகல் என்னை இவ்வாபத்திலிருந்து காப்பாற்று" எனக் கதறினாள். ஆபத்மிகுதியாலே கோவிந்தநாமத்திலும் உபாய புத்தி வைத்தாளாகையாலே தூரத்திலிருந்தே கண்ணன் கோவிந்த நாமத்தின் பலனாய்ப் புடவையை வளரச்செய்து த்ரௌபதியின் மானத்தை ஸம்ரக்ஷித்துவிட்டான். பிள்ளையின் தவற்றைக்கண்டு திருத்த முடியாதவாறு எல்லாவகையாலும் குருடனான தகப்பன், தமையனும் அரசர்க்கரசனாய், தம்பியை இஷ்டப்படி நடக்க விட்டுக்கண்டு உகப்பவன். ஆகவே துச்சாதனனுக்கு "பருவம், செல்வம், அதிகாரம், விவேகமில்லாமை" என்னும் அநர்த்த காரணம் நான்கும் பூரணமாக இருந்தது. த்ரௌபதியின் துன்பத்தைத் துர்யோதனாதியரின் பெண்டிர்கள் நிரந்தரமாய்ப் பெறும்படி அவர்கள் திருமங்கல்யச் சரடு நீங்கவும் சரணாகதையான த்ரௌபதியின் கைப்பிடித்த பாக்யவான்களான பாண்டவர்கள் ஸுகபோகமநுபவிக்கும்படி த்ரௌபதியின் கழுத்தில் மங்கல சூத்ரம் தங்கவும் அருள்செய்தான் சரண்யனான கண்ணன். ஆகவே பர்த்தாக்களான பாண்டவர்கள் த்ரௌபதிக்கு ரக்ஷகர்களாகவில்லை. பிள்ளையான அர்ஜுனனுக்கு இந்திரன் ரக்ஷகனாகவில்லை. கண்ணனே ரக்ஷகனானான். சிலர் ஒருசமயம் எம்பாரிடம் த்ரௌபதி பர்த்தாக்களை அழையா

srivatsam

acharya.org

மல் கோவிந்தனை அழைத்தது ஏன்? எனக் கேட்டனர். வஸிஷ்டரின் உபதேசப்படி த்ரௌபதி பெரும் ஆபத்து நேருங்கால் பகவானையே நினைக்கவேண்டும் என்று தேறிக் கோவிந்தனை அழைத்தாள் என்று எம்பார் பதில் கூறினார். இதையே மற்றொரு சமயம் சிலர் பட்டரிடம் கேட்க, பட்டர் "பர்த்தாவின் கைப்பிடித்துப் போகும்போதும், இடறி நோவுற்றால் உடனே "அம்மா" என்று அழைப்பது போலவே எல்லா உறவுமுறையான எம்பெருமானின் பெயரை அழைப்பது இயல்பேயல்லவா என்று பதில் கூறினார். இரு ஆசார்யர்களும் ஒவ்வொரு காரணத்தை விளக்கினர். இதில் முரண்பாடில்லை. (6)

முதற் பாசுரத்தில் "சிற்றவை பணியால் முடிதுறந்தானை என்று அநுபவித்த ராமாவதாரத்தை ஏழாம் பாசுரத்தில் விரிவாக அநுபவிக்கிறார். "பரதனும் தம்பி சத்ருக்கனனும்." என்பது ஒரு சேர்த்தி, 'இலக்குமனோடு மைதிலியும்' என்றொரு சேர்த்தி, பெருமாளைவிட்டுப் பிரியில் உயிர் வாழாதவர்கள் பிராட்டியும் இளையபெருமாளும், பெருமாளுக்கு இளையாழ்வார்போல், பரதனுக்கு சத்ருக்கனன் எல்லா வடிமைகளும் செய்து போந்தவன், பரதனைத்தவிர மற்றொன்றிலும் கண் வையாதவன், பாகவதாபிமான நிஷ்டன். இப்படி ராமாயண புருஷர்களின் சேர்த்தியைக் கண்டறிவாரும் கேட்டறிவாருமெல்லாம் இரவு பகலென்னாமல் எப்போதும் பெருமாளை ஏத்தா நிற்பார்கள். ஸம்ஸாரிகளான நாம் நம் காரியங்களெல்லாம் செய்து ஓய்ந்தபோது ஒருசமயம் ராமாயணாதிகளைக் கேட்டுத் துதியா நிற்போம். அறிவாளிகளான பெரியோர் எப்போதும் ராமாயணாதிகளையே அநுபவியா நிற்பார்கள். காலை சூது விஷயமான பாரதத்திலும், நடுப்பகலில் ஸ்த்ரீ விஷயமான ராமாயணத்திலும், இரவில் நவநீதசோரனான கண்ணன் விஷயமான ஸ்ரீமத் பாகவதத்திலும் பொழுதுபோக்குவார்கள். (7)

ராவணாந்தகனை ராகவ ஸிம்மத்தை அநுபவித்து அதற்குப் பூர்வஜன்மமாய் நரசிங்கமாய் ஹிரண்யாந்தகனானவனை அநுபவிக்கிறார் எட்டாம் பாசுரத்தில். சிறுபிள்ளைப் பேச்சு இனியதாய்க் கேட்கக் கூடியதாய் இருக்கும். அதற்குமேல் தன் பிள்ளைப்பேச்சு தந்தையர்க்கு இனியதாய் இருக்கும். இவ்விரண்டும் ஹிரண்யனிடம் மாறாடிவிட்டது. பள்ளிச் சிறுவனான ப்ரஹ்லாதன் கூறினது திருவஷ்டாக்ஷரம் எனும் நாராயண நாமமேயாகிலும் ஆழ்வார் "ஆயிரநாமம்" என்று சிறுவன் ஒரு நாமம் பேசினதே ஆயிரநாமம் பேசினதாக ஈடுபடுகிறார். எல்லோருக்கும் நன்மை பயப்பதான திருமால் திருநாமத்தைக் கூறக் கேட்டதே காரணமாகத் தன் பிள்ளையைச் சீறினான் பிள்ளை என்று பாராமல். காலை ஒருதரம் தேவ, கிருஷ்ண, கோவிந்த என்று கூறினால் அவனுக்குப் பகலிலோ, மாலையிலோ, அல்லது இரவிலோ ஒரு வருத்தமும் உண்டாகாது. எப்போதும் இன்பமே என்ற சிறப்புமிக்க பகவன் நாமம் ஹிரண்யனுக்கு வருத்தம் தருவதாய் இருந்தது. காரணமின்றியே இருப்பதே காரணமாக பகவத் பாகவத விஷயத்தில் த்வேஷப்படுவதான அஸக்யாபசாரத்தால், பிள்ளையிடம் ஏற்பட்ட கோபத்தையெல்லாம் எதிரே நின்ற தூணின்மேல் காட்டி அதைக் காலால் உதைத்தான். அங்கப்போதே பிள்ளை வார்த்தை மெய்யாகும்படி அழகியான் தானே தெள்ளிய சிங்கமாய்த் தோன்றினான். எம்பெருமான் திருநாமத்தைச் சொன்னதே காரணமாக ஹிரண்யன் ப்ரஹ்லாதனைப் பிள்ளையாக எண்ணவில்லை. அதுவே காரணமாக ஆழ்வார் ப்ரஹ்லாதனைத் தன் பிள்ளையாகப் பாவித்துப் "பிள்ளையை" என்றார். (8)

srivatsam

acharya.org

சிறுவனான ப்ரஹ்லாதனுக்கு உதவினது மட்டுமல்லாமல் திர்யக்கான ஸ்ரீ கஜேந்திரனுக்கு உதவின மஹா குணத்தை அநுபவிக்கிறார் ஒன்பதாம் பாசுரத்தில், தன்னிடம் பேரன்பு பூண்ட காட்டிலே இஷ்டப்படி திரியும் மதயானையான ஸ்ரீகஜேந்திரன் எம்பெருமான் திருவடிகளில் தாமரைப் புஷ்பத்தை ஸமர்ப்பிக்கவேண்டி தாமரை பூத்த பொய்கையில பூப்பறிக்க இறங்க அங்குள்ள திர்யக்கான நீர்ப்புழுவான முதலை அதன் காலைக் கவ்விக்கொண்டுவிட்டது. தன் சாப விமோசனத்தை நினைத்து முதலை தன் நிலமான பொய்கையில் வலிமிக்கதாயிற்று. ஆச்ரிதனான கஜேந்திரன் ஒரு நீர்ப்புழுவின் கையிலே அகப்பட்டதே என்று பதறித் திருவடியின் மேலேறி வேகமாக அரைகுலையத்தலைகுலைய மடுவின் கரையில் வந்து யானைக்கு இடரின்றியே முதலைக்கு இடராம்படி திருவாழியை எறிந்தான். முதலைவாய்ப் பட்டுப் புண்ணான யானையின் காலைத் தடவிக்கொடுத்தான். அது பறித்திருந்த பூவைத் தன் திருவடிகளிலே சேர்த்துக் கொண்டான். அந்த கஜேந்திர வரதனைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே என்று தன் அநுபவத்தை வெளியிட்டார். (9)

இப்படித் தொண்டைமான் சக்ரவர்த்தியால் திருப்பணிகள் பல செய்யப்பெற்ற திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதியாய் ஸ்ரீகீதாசார்யனாக விளங்கும் எம்பெருமான் குணங்களை அநுபவித்து அவ்வநுபவத்தால் மிளிரும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடு விளங்கும் ஆழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரத்தையும் பொருளுடன் எப்போதும் பேரன்போடு அநுசந்தானம் செய்யவல்லவர்கள். நித்ய சுகமான வானுலகு எய்துவர். இது பலச்ருதி. (10) கீழ்ப்பதிகத்தில் குறிப்பிட்ட "அண்டமாள்வதாணை அன்றேலாள்வர் அமருலகே" என்ற ஐச்வர்யபலமும் இங்கு அநுவர்த்திக்கிறது. இவ்வுலகில் பகவதாசார்ய கைங்கர்யத்துக்காக ஐச்வர்யமும் ப்ராப்யமே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

acharya.org

திருவொடு மருவிக் கடற்கரை உகந்தவன்

செந்தமிழ் வேதியர் ஸ்ரீ உ. வே. குமாரவாடி சே. இராமாநுஜாசாரியர்

மாலைவேளை; மக்கள் கடற்கரைக்குச் செல்கின்றனர்; வஸந்தத்தின் தூண்டுதலில் தென்றலும் சிறு துளியும் இன்ப நினைவூட்டுகின்றன. அந்தி நேரத்தின் வர்ண ஜாலங்கள் ஆங்காங்கே சிதறிக் கண்ணைக் கவருகின்றன! நீரும் நிலமும் சந்திக்கும் கடற்கரையில் அடிவானத்தின் தொடு விளிம்பின் அழகெல்லாம், கடலுக்கும் வானுக்குமிடை அலையெறிகின்றது. குறிப்பாக, திருவல்லிக்கேணி கடற்கரைக்கு (மரீனா) உலகப் புகழ் உண்டல்லவா? அத்தகைய படி கொண்ட கீர்த்திக்குள்ளே புதைந்து கிடைக்கும் ஒப்பற்ற மூர்த்தியின் உண்மைச் சிறப்பு ஒன்றை இக் கட்டுரையில் காணலாம்.

அளவற்ற அருட்செல்வம், பெறற்கரிய பெருஞ் செல்வம் ஆனாலும், காலடியில் கண்ணுக்குத் தெரியாமல் பூமிக்குள் புதைந்து கிடந்தால் என்ன பயன்? அதன் இருப்பு அறிந்து, சிறப்பையும் உணர்ந்து, பெற்று அனுபவித்தாலன்றோ நாம் இன்புற இயலும்! திருவல்லிக்கேணில் புதையலை முதலில் கண்டு விண்டுரைத்த பெருமை மயிலைப்பேயாருக்கே சேரும்.

'முதலாழ்வார்கள்' என்று பொய்கை, பூதம், பேய் மூவரையும் ஒக்க எடுத்துக் கூறுவது ஸ்ரீ வைஷ்ணவ மரபு. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் முதல் மூன்று திருவந்தாதிகளும், திருக்கோவலூர் இடைகழியில் இம் மூவர் மூலம் முறையே வெளி வந்தன.

'இவ்வுலகு அவ்வுலகு!' என வழங்கும் இரு வேறு உடைமைக்கும் நாதன் சுடராழியான் என்றார் முதல்வர்; அவனது பெயர் நாராயணன் என்றார் நடுவிலவர். அவனே திருவின் நாயகன் என்றார் மூன்றாமவர்.

நாம் நமது அளவுடை ஐம்புலன்களால் காணும் புற உலக அறிவுக்கு, வையத்தையே தகளியாக்கி, வார்கடலை நெய்யாக்கி, கதிரவனையே விளக்காக வைத்துச் சிறப்புச் சேர்த்தார் பொய்கையார்.

அந்த ஞானத்தின் கனிவில் அகத்தில் எழும் அன்பையே அகலாக்கி, ஆர்வம் என்னும் நெய் பெய்து, இன்புருகு சிந்தையைத் திரிசமைத்து, ஆத்மாவின் உருக்கத்தை நெய்யாகவிட்டு, ஞானச்சுடர் விளக்கேற்றி விட்டார் பூதத்தார்.

புறமும் அகமும் ஒருங்கே ஒளிமயமாகத் திகழ, 'திருக்கண்டேன்; பொன் மேனிகண்டேன்' என்று பாடத்தொடங்குகிறார் தமிழ்த்தலைவன் பேயார்.

மங்கல வாசகத் தொடராக முதல் மூன்று பாசுரங்களிலும் பேயாழ்வார் திருவுடன் மருவிய திருமேனி சேர்த்தியையே சுவையுடன் வெளியிடுகிறார்.

நான்காம் பாசுரத்தில் உலகளந்த சேவடியை நினைவு கூர்ந்த ஆழ்வார் மீண்டும் அவன் திருமேனி அநுபவத்திலேயே இழிந்து, அடிவண்ணம், தாமரை என்றும், படிவண்ணம் கடல் நிறமென்றும், முடிவண்ணம் வெய்யோன் ஒளி என்றும் (செ:5) நிறங்களின் அழகைச் சுவைக்கிறார். அவ்வழகில் எழுந்த அலைகளாகவே மேலும் சில பாசுரங்கள் செல்கின்றன. அழகுக்குத் தோற்று நாம் செய்ய வேண்டுவது, நாரணனின் பல்வேறு நாமங்களையும் சொல்லுவதே எனக்கூறி நம் அவயவங்

கள் பெறவேண்டிய பயன்களை எட்டு, ஒன்பது பத்து பாடல்களில்தொடர்கிருர்.

பதினேராம் பாசுரத்தில் தம் அனுபவத்தில் கண்டவன் வேறு யாருமில்லை, "நன்கோதும் நால் வேதத்துள்ளான் .... பயின்று உரைப்பார் நூற்கடலான், நுண் அறிவினன்," என்று கூறி, வேதாந்த விழுப்பொருள் அவனே என்கிருர்.

"சாஸ்த்ர யோநித்வாத்" என்பது வியாஸரின் பிரம்ம சூத்ரம்.

'உளன் சுடர் மிகுசுருதியுள்' என்பது வேதம் தமிழ் செய்த மாறன் மறை.

மறை நான்கும் ஓதி, அறிவுத்தாள் கொளுவி, ஐம்புலனும் தம்மில் செறிவு என்னும் திண்கதவம் செம்மி நன்குணர் வார், பைங்கோத வண்ணன் படி நாள் தோறும் காண்பர்—என்று மறைநூல் காட்டும் நெறியை உணர்த்துகிருர்.

'நெறிகாட்டி நீக்குதியோ' என்ற அச்சம் நேராமல் தன்பாதம் நீட்டி வையம் அளந்த, வேதமும் விதந்து கூறிய திரிவிக்கிரமனின் செயலை நினைவு கூர்ந்து, அவன் பாதம் பற்றி, மாற்பால் மனஞ் சுழித்தால், புன்புல ஆக்கையின்வழி உழல்வதை நீக்கலாம் என்ருர்.

"பணிந்து உயர்ந்த பௌவப்படுதிரைகள் மோத ... அங்கு அனந்தன் அணைக் கிடக்கும் அம்மான்" தம் மனத்து வந்து அணைவதைத் தமது அனுபவ உண்மையாக வெளியிடுகிருர், ஆழ்வார்.

குறிப்பாக, திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அணைமேவிய மந்நாதனுக்குப் பொருந்தும் பாசுரமிது.

இப்பாசுரத்தில்"தன்னை வந்தடையும் அடியாரை எதிர்நோக்கி அணை கோலிக் கிடக்கும் அவனது எளிமையை" நினைவுறுத்தும் ஆழ்வார், அதனை அடுத்து நமக்குக் காட்டிக்கொடுக்கும் "வைத்த மாநிதி" யையும் காணலாம்.

வந்துதைத்த வெண்திரைகள் செம்பவளம்
வெண்முத்தம்
அந்தி விளக்கும் அணிவிளக்காம்-எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர்
மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று.

ஒரு அல்லித்தாமரையாள் சென்று ஒன்றிய சீர்மார்பனின் கடற்கரை சேர்த்தியின் சிறப்பையே நமக்கு ஆழ்வார் சேமவைப்பாக்குகிருர் !

அவனது வடிவழகில் மயங்கிய தாமரையாள் தான் பிறந்த மலரின் மென்மை, தண்மை (குளிர்ச்சி), நறுமணம், செவ்வி (நிறம்). ஒன்றையும் கணிசியாமல், அவன் மார்பையே விரும்பிச் சென்று ஒன்றினள்.

பிராட்டி சேர்க்கையின் சீர்கண்டு அவ்விடம் விட்டுப் பெயரமாட்டாமல், அவளது வால்லப்யத்தில் (வடிவழகிலும், ஸ்பரிசத்திலும்) வளைப்புண்டு, ஓராயிரமாய் உலகேழ் அளிக்கும் பேராயிரம் கொண்டதோர் பீடு உடைமையும் மறந்து, 'திருவல்லிக்கேணியான்' என்பதே பெயராகச் சூழித்துக்கொண்டுவிட்டான் அப்பெருமான்-என்கிருர் பேயாழ்வார்.

கடல் கால் அலைப்ப நின்றவன், அம்மகிழ்ச்சியில் செம்பவளத்திரள் வாயனகி, முத்தும் பவளமும், சீர்செய்து திருமகளைக் கடலரையன் கொடுத்தபோது, இருமருங்கும் கைகொடுத்துக் கடைந்த கடல்வண்ணினின் அகன்ற அழகிதான திருமார்பில் கண்வைத்தாள் ஸ்ரீதேவி விண்ணவர் அமுதுண, அமுதில் வரும் பெண் அமுதான பிராட்டி தேவர்களாகிய தன் குழந்தைகள் பார்த்துக்கொண்

acharya.org

டிருக்கும்போதே, நாயகனின் அகன்று விரிந்த எழில் மார்பையே உறைவாக்கிக் கொள்ள விரைந்து அதில் ஏறி அமர்ந்தாள்!

இதுகண்டு தேவர்கள் வாய்பிளந்து நின்றனர்! "பச்யதாம் ஸர்வ தேவாநாம் யயௌ வக்ஷஸ்தலம் ஹரே :" அப்போது' "தயா அவ லோகிதா தேவா :" என்று, இத்தேவதைகளின் அலமாப்பைப்பாராய் என்று எம்பெருமான், தன் திருவுளத்தாலே நினைந்தான்; அந்நினைவைப் பின் சென்று, தன் தாய்மைக்குச்சேரப் பிராட்டியும், அந்தத் தேவதைகளாகிற குழந்தைகளைத் தன் கருணை நிறைந்த கண்களாலே நோக்கினாள்.

அண்ணலும் நினைந்தான்! அவளும் நோக்கினாள்! அதன் விளைவு இராமாவதார காலத்தில், புறத்தே பிரிந்து இருந்த பிராட்டி, முடிவில் முடிசூட்டு விழாவில் சிம்மாசனத்தில் தன்னுடன்வந்து ஒன்றிய போது இந்திரன் கொடுத்த ஒரு முத்து மாலையைக் கையில் ஏந்தி, மாலையையும், பிராட்டியையும், மாறிமாறிப் பார்த்தான் சக்கரவர்த்தித் திருமகன்.

இங்கிதமறிந்த பிராட்டி அம்மாலையைத் திருவடியைக் குளிர நோக்கிக் கொடுத்தாள்! நாடு புகழும் பரிசை அனுமன் பெற்றனன்.

அஃதேபோன்று கடற்கரை சேர்த்தியில் பிராட்டியைக் கூடிய பெருமானின் முகமலர்த்தியில் அந்தி அழகின் சுவையோடு திருவல்லிக்கேணியான் அருள்திறத்தையும், மணிநிறத்தையும் நாம் அனைவருமே சென்று பெறலாம், சுவைத்து மகிழலாம் என்கிறார் பேயாழ்வார்.

இதையடுத்த பாசுரம் அமையும் விதம் காணீர். இதுவரை நமக்குக் கழிந்த நாட்களும் நல்லவையே. எங்ஙனே எனில் இன்று நாம் வந்து அவனைக்கிட்டி மகிழும் வகையில். அவை கழிந்தவை ஆகிவிட்டபடியால், இனி நாம் 'செங்கண் மால் எங்கள் மால்!' என்ற நாள் நமக்கு எந்நாளும் நன்னாள்!

இறவாத எந்தை இணையடிக்கு ஆளாகி மறவாது வாழ்த்துக நம் வாய்.

சார்வு நமக்கு என்றும் சக்கரத்தான், தண்துழாய்த்
தார்வாழ்வரை மார்பன் தான் முயங்கும்—கார்ஆர்ந்த
வானவரும் மின்இமைக்கும் வண்தாமரை நெடுங்கண்
தேனமரும் பூமேல் திரு.

வாளா கிடந்தருளும், வாய்திறவான்

ஸ்ரீ உ. வே. T. S. ராஜகோபால ஐயங்கார், B.A., L.T.
[கவிரத்ந-கண்டீரவ, செஞ்சொற்கவி, அபிநவ பட்டர்பிரான்]

திருமழிசைப் பிரான் திருவல்லிக் கேணியை மங்களாசாஸநம் செய்துள்ள பாசுரம்.

தாளா லுலக மளந்தவசை வேகொல்
வாளா கிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலேக்கும் மாமயிலே மாவல்லிக் கேணியான்
ஐந்தலைவாய் நாகத் தணை.

[நீள் ஓதம் வந்து அலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான், ஐந்தலைவாய் நாகத்து அணை (அணையில்) வாளா (அசையாமல்) கிடந்தருளும்; வாய் திறவான், (காரணம்): தாளால் உலகம் அளந்த அசைவே கொல் (அசைவோ)?]

பேயாழ்வார் திருக்கோவலூரிலே உலகளந்த நம்பியைக் கண்டு களித்து, "திருக் கண்டேன், பொன்மேனி கண்டேன்" என்று பாடினர். அந்தப் பெருமானது திருவடி நமக்கு "மருந்தும் பொருளும் அமுதமும் தானே" என்றும், அவனது திருமேனி நிறம் (படிவண்ணம்) பார்க் கடல் நீர்வண்ணம், அதாவது பாரைச் சூழ்ந்துள்ள கடலின் வண்ணம் என்றும், அவன் அண்டங்கடந்த நிலை அழகியது என்றும் அனுபவித்து, அப்பெருமானது திருவடிகளிலேயே தம் மனம் ஆழ்ந்து மயங்கிக்கிடக்கும் என்றார்.

அரும்பும்—புனந்துழாய் மாலையான்
பொன்னங்கழற்கே
மனம் துழாய் மாலாய் வரும்.
[துழாய்-ஆழ்ந்து, மாலாய்-மயங்கி].

இவ்வாறு தமது மனத்தில் ஆழ்ந்த பெருமானை வேளுக்கையிலும் வெஃகாவிலும் வணங்கினர். அன்று, நின்று இவ்வுலகம் அளந்த ஆயாசமோ இவன் வேளுக்கையில் இருப்பது (வீற்றிருப்பது) என்று பரிவுகொள்ளுகிறார். நின்றவன் வீற்றிருந்தான் ஆயாசத்தால், வீற்றிருந்தவன் வெஃகாவில் கிடந்தான், மிகுந்த ஆயாசம் தீருவதற்காக. ஆழ்வாரது பரிவு மேலும் ஓங்கியது. இப்பெருமானைத் தமது மனம் அநுஸந்திக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

அன்றிவ் வுலக மளந்த வசைவேகொல்
நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய்—அன்று
கிடந்தானைக் கேடில் சீரானை
முன்கஞ்சைக்
கடந்தானை நெஞ்சே காண்.

வேகவதிக்கரையில் ஆயாசம் தீருவதற்காகப் பெருமான் சயனித்திருப்பதைக் கண்டு பரிந்தார் பேயாழ்வார். இவரது சிஷ்யராகிய திருமழிசைப்பிரான் இவரைக் காட்டிலும் பரிந்து திருவல்லிக் கேணிக் கடற்கரையில் பெருமானது சயனக் கோலத்தை அநுபவிக்கிறார், "தாளால்" என்ற இப்பாசுரத்தில்.

"ஏரார் கோலந் திகழக் கிடந்தாய்", "கிடந்ததோர் கிடக்கை" என்று ஆழ்வார்கள் சயனத் திருக்கோலத்தைக் கண்டு களித்து மனம் உருகுவர். திருமழிசைப் பிரானுக்கு இந்தத் திருக்கோலத்தைக் கண்டதும் கனத்த பரிவு ஏற்பட்டது. ஆழ்வார் பெருமானது முன்னர் நெடுங் காலம் நின்றார். அவன் "வாளா கிடந் தருளும்" — இடம் வலங்கொள்ளாமல்

srivatsam

acharya.org

கிடந்தருளுகிறுன். "வாய் திறவான்"— "ஆழ்வீர் ! வந்தீரா" என்ற வார்த்தையும் சொல்லவில்லை. ஆதலால் ஆயாசம் பெரிதும் கொண்டான் இவன் என்று தேர்ந்து, இந்த ஆயாசத்திற்குக் காரணம் யாதென்று ஊகிக்கின்ருர் ஆழ்வார்.

இந்திரன் இழந்த அதிகாரத்தை அவனுக்கு மீட்டுக்கொடுப்பதற்காகப் பெருமான் வாளுட்டைவிட்டு; தன் உருவைக் குறுக்கிக்கொண்டு, மாவலியிடம் நடந்துசென்று, தனது காரியம் முடியுமோ என்ற பதற்றத்தோடே, "கொள்வன் நான் மாவலி மூவடிமண்", "என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடி மன்னு! தருக" என்று யாசித்துக் கையில் நீர் பாய்ந்ததும், விம்ம வளர்ந்து, ஒரு திருவடியால் இவ்வுலகை அளந்து அளவில்லாத களிப்பால் இவ்வாறு படாதனபட்டதால் ஆகும் இக்களைப்பு என்று கருதுகிறுர் ஆழ்வார். மலர்மகளும் மண்மகளும் கூசிப் பிடிக்கும் மெல்லிய திருவடியைக் கல்லும் மலையும் அடர்ந்த பூமியிலே கூசாதுவைத்து அளந்ததாலன்றே இக்களைப்பு என்பது ஆழ்வாரது ஊகம். திருவடி நோவுகின்றது என்று ஒரு வார்த்தை பணித்தால், ஆழ்வார் ஆயாசந் தீரத் திருவடிகளைத் தடவிக்கொடுப்பார் போலும்.

இந்தப் பெருங்களைப்புத் தீருவதற்காகச் சயனித்துள்ள இடம், "நீள் ஓதம் வந்து அலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணி". வெஃகாவில் கிடந்தது ஆற்றங்கரை; இங்குக் கிடப்பது பெரிய அலைகள் கொண்ட கடற்கரை. பெரிய அலைகள் துடைதட்டி இவனை உறங்கச் செய்வன போலும். அலையின் திவலைகள் திருமேனியில் சேர்ந்து சோர்வை நீக்குவனபோலும்.

பெருமான் பள்ளிகொள்வது "ஐந்தலைவாய் நாகத்து அணை". பெருமானுக்கு என்ன நேருமோ என்று அஞ்சி, எதிரிகள் அணுகாவண்ணம் "விடம் காலும்"— விடத்தை உமிழ்வான் திருவனந்தாழ்வான். இந்த ஆதிசேஷன் காற்றும் வெய்யிலும் தாக்காதவாறு தன் வளைவாலே பெருமானைக் காத்துக்கொண்டிருக்கிறுன்; ஐந்து திருமுகத்தாலே பரிவுடனே ஏத்துகிறுன்; இவனது திருமேனி பெருமானின் ஆயாசத்தைத் தீர்ப்பதற்காகப் பரப்பு, மென்மை, குளிர்ச்சி, பரிமளம் இவை வாய்ந்தது என்று ஒருவாறு கவலை நீங்குகிறுர், ஆழ்வார். இப்பெருமான் ஆழ்வாரது திருவுள்ளத்திற் புகுந்தான்; களிப்புற்ற ஆழ்வார் இப்பெருமானை நாம் குடந்தை, வெஃகா, திருவெவ்வுள், அரங்கம், திருப்பேர், திருவன்பில் ஆகிய திவ்ய தேசங்களிலே கண்டு வணங்கி உய்யக் கூடும் என்றருளிச்செய்கிறுர்.

acharya.org

திரிந்துழலும்

ஸ்ரீ உ. வே. T. S. ராஜகோபால ஐயங்கார்,

[கவிரத்ந-கண்டீரவ, செஞ்சொற்கவி, அபிநவ பட்டர்பிரான்]

அழகிய மணவாளதாஸர் என்கிற திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார் தமது "நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி" என்ற நூலில் திருவல்லிக்கேணியைப் பற்றி அருளிய வெண்பா:

> திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
> புரிந்து புகல்மின், புகன்றால் — மருந்தாம்
> கருவல்லிக் கேணியாம் மாக்கதிக்குக் கண்ணன்
> திருவல்லிக் கேணியான் சீர்.
>
> [புகல்மீன்-சொல்லுவீர்]

திருவல்லிக்கேணியில் உறையும் கண்ணனுடைய சீரை வாயார ஓதினல், அது பிறவிப் பிணிக்கு மருந்து, வைகுந்தத்திற்கு ஏறும் ஏணியுமாம் என்பது கருத்து.

திருவல்லிக்கேணியான் கண்ணன், பார்த்தன் தன் தேர் முன்நின்றவன், ஸ்ரீ கீதையை உபதேசித்து, "மாம் ஏகம் சரணம் வ்ரஜ; அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று சரம உபாயத்தை வெளியிட்டவன்.

இவனைப் பற்றும்போது எவ்வாறு பற்றவேண்டும்? திரிந்து உழலும் சிந்தனையைச் செவ்வே நிறுத்தி. நம்மாழ்வார்

> பிரிந்தொன்று நோக்காது தம்முடைய பின்னே
> திரிந்துழலுஞ் சிந்தனையார் தம்மை

என்றருளியதைப் பின்பற்றியது இந்த முதலடி. நம்மைத் தவிர வேறொருவருமில்லை, என்ற அகங்கார மமகாரங்களால் சரீரங்கள் தோறும் புகுந்து வருந்துவதை அறவே ஒழிக்கலாகும், நமது சிந்தனையை நம் வசப்படுத்தினல். நமக்காக "எதிர் சூழல் புக்குத் திரியும்" பெருமானை நினைப்பதற்கானது நமது சிந்தனை. இவ்வாறு சிந்தனையைக் கட்டுப்படுத்தி, புரிவில், அதாவது அன்புடன் பெருமானின் சீரைப் புகலவேண்டும்.

இவ்வாறு புகல்வதால் விளைவு, நாம் நமது பிறவித் தொடரை அறுக்கலாம். பெருமானுடைய சீர் கருவல்லிக்கு மருந்து, ஓயாது கருப்பத்தில் தோன்றிப் படரும் பிறவிகளை ஒழிப்பதற்கான மருந்தாகும். அன்றி மா கதிக்கு ஏணி ஆம்— ஆனந்த மயமான ஸ்ரீ வைகுண்டத்திற்குச் செல்லப் பயன்படும் ஏணியாம்; நலமந்தமில்லதோர் நாட்டிற்கு நாம் படிப்படியாக எளிதில் ஏறலாம். சீரைப் புகன்றால், "மோக்ஷயிஷ்யாமி, மாசுச:" என்றவாறு வைகுந்த மாநகர் சேருவது எளிது. "பரித்யஜ்ய, வ்ரஜ" என்பது போலே, தீய சிந்தனையைக் கைவிட்டு, பெருமானுடைய சீரை ஓதுவது நாம் செய்யக்கூடியது. செங்கண்மால் "மருந்தும் பொருளும் அமுதும்" ஆவான்; அவன் சீரும் இவ்வண்ணமே.

———

அல்லிக்கேணி நாயகன் கீதாசாரியன் ஏற்றம்

ஸ்ரீ உ. வே. வேங்கடகிருஷ்ண பட்டாசாரியார்,
(பெரியமுறை அர்ச்சகம், திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி தேவஸ்தானம்)

ஸ்ரிய: பதியாய் அவாப்த ஸமஸ்த காமனுய், ஸ்ரீ வைகுண்ட நிகேதநனுய், ஸ்ரீ பூமி நீளா தேவி ஸமேதனுய், அபார காருணிகனுய், நித்ய முக்தாநு பாவ்யனுய் எழுந்தருளியிருக்கும் ஸர்வேச்வரன் அர்ச்சாவதார மூர்த்தியாய் ஸ்ரீ ருக்மிணீ நாயகனுய் வேங்கடகிருஷ்ணன் என்னும் திருநாமம் கொண்டு திருவல்லிக்கேணி என்னும் இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதியாய் ஸேவை சாதிக்கின்றுன். "ஒழிவில்கால மெல்லாம் . . . வழுவிலா வடிமை செய்து" என்கிறபடி கீதாசாரியன் திருவடிவாரத்தில் அருளிச்செயல் கைங்கர்ய பாக்யம் பெற்றுத் திருவல்லிக்கேணி வேத அத்யாபக கோஷ்டி பொலிவுடன் திகழ்கிறது. இவ்வாண்டு இச்சிறந்த கைங்கர்யத்தைக் கொண்டாடும் பெருவிழாவாக ஸ்ரீபார்த்த ஸாரதி ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தில் நிறைந்த விற்பன்னர்களைக்கொண்டு அருளிச்செயல் கோஷ்டி, வேத பாராயண கோஷ்டி கைங்கர்யத்தில் அன்வயித்து எம்பெருமானுக்கு உகப்பான உபசார கைங்கர்யங்களிலும் விமரிசையாக ஈடுபட்டது. இந்த விழாவின் அங்கமாக அனைத்து இல்லங்களிலும் பொக்கிஷம் போன்று விளங்கும் வண்ணம் சிறப்பான மலர் வெளியிட உள்ளது. அடியேனையும் ஒரு பொருட்டாக எண்ணி கோஷ்டியார் நியமனப்படி அடியேன், சிற்றறிவுக்குத் தெரிந்த அளவில் மஹநீயர்கள் ஆக்ஞையைக்கொண்டு விற்பன்னர்களின் சான்றினைக் கருத்தில் கொண்டு சில விஷயங்களை விண்ணப்பித்துக்கொள்கிறேன். குற்றம் நீக்கி குணத்தினைக் கொண்டு அனுக்ரஹிக்கப் பிரார்த்திக்கிறேன்-

எம்பெருமான் "பாத்வஞ்ச ததோ வ்யூஹம் விபவம் சாந்தராத்மகம்| அர்ச்சாவதாரம் சாஸ்த்ரானும் உத்பவம் மோக்ஷ லக்ஷணம்|| என்று கூறியுள்ளபடி பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாம்ய, அர்ச்சாவதார பேதமாக ஐந்து நிலைகளில் பேசப்படுகிறுன். ஸ்ரீ வைகுண்டத்தில் நித்ய விபூதியில் நித்ய முக்தாநு பாவ்யனுய் ஆதிசேஷனை உறைவிடமாகக் கொண்டு ஸ்ரீ பூமி நீளாதேவி ஸஹிதனுய் அனந்த, கருட, விஷ்வக்ஸேனுதிகளுடன் ஸந்ததம் ஸாமகானம் செய்யப் படுபவனுக உள்ள பரத்வ நிலையும்; நித்யானந்தத்தில் இருந்தும் லீலாவிபூதி என்கிற லோக சம்ரக்ஷணத்தின் பொருட்டு தன்னுடைய ஞான விசேஷத்தினுலேயே ஸங்கல்பித்து நடத்தும் திறனிருந்தும் முக்தர்கள் போன்ற பிரம்ம புத்திரர்கள், ஸனத்குமாரர்கள் முதலானேர்களும், ச்வேதத்வீப வாஸிகளும் கண்டானந்திக்கும் வண்ணம் ஆர்த்த ரக்ஷணமாக க்ஷீராப்தியில் அனந்த சயனத்தில் எழுந்தருளியிருக்கும் தன்மையாகிய வ்யூஹ நிலையும் சேதனர்கள் அடைய முடியாதவைகளாகும். மஹநீயர்களுக்கும், சாதுக்களுக்கும் ஸேவை சாதிக்கும் நிமித்தமாக "மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நாரஸிம்ஹ, வாமன, பரசுராம, ராகவ, பலபத்ர, கிருஷ்ண, கல்கி" என தசாவதாரங்கள் கொண்டு தானே செய்து கொண்ட ஸங்கல்பத்தின்படி அந்தந்த யுக தர்மத்தை அனுசரித்து, தர்மவழி நடந்து காண்பித்து அதர்மத்தை அழித்து தர்மத்தை ஸ்தாபித்தருளிய அவதார பேதங்கள் கொண்ட விபவ நிலையும், அந்தந்தக் காலத்தில் உடனிருந்தவர்களுக்கு மட்டுமே பிராப்தமானதாகவும் நம்மால்

acharya.org

அனுபவிக்க இயலாததுமாகவும் உள்ளது. "அந்தர் பஹிச்சதத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" என்கிற பிரமாணப் படி பேதமின்றிக் காணும் பொருள் யாவிலும் ஸ்தூல ஸூக்ஷ்ம நிலையிலிருந்து நிறைந்து ஸனக, ஸனாதனாதிகளாலும் அறியப்படாத நிலை அந்தர்யாமித்வமாகும்.

ஸ்ரீமந் நாராயணன் திவ்ய மங்கள அப்ராக்ருத ஸ்வரூபத்தை சிலா, தாரு, பஞ்சலோகங்கள் கொண்டு செய்யப்பட்ட பிம்பங்களில் மஹரிஷிகள் நியமித்த பகவத் சாஸ்த்ர ஆகம விதிப்படி ஆவாஹனம் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பக்த பராதீனனாக சேதனங்கள் உஜ்ஜீவிக்கும் வண்ணம் அனேக திருக்கோயில்களில் திவ்ய மங்கள ரூபியாய் எழுந்தருளியிருக்கும் நிலை அர்ச்சாவதாரம் எனப்படும். சேதனர்கள் உய்ய உபாயமாய் உபாய பரிக்ரஹம் பண்ணினால் சிலாக்கியமாக இருக்குமென நம் பூர்வர்கள் அருளிச் செய்துள்ளபடி நமக்குத் தஞ்சமாவது அர்ச்சாவதாரம் என்பது திண்ணம். எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்கள் மஹரிஷிகளுக்கும், பக்தர்களுக்கும் பிரத்யக்ஷமாகி ஸேவை ஸாதித்த பெருமையினையும், அவர்களால் ஆராதனம் செய்யப்பட்ட பெருமையினையும், உடையவை. ஶ்ரிய: பதியான ஸர்வேச்வரன் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் "மயர்வற மதிநலம் அருளப் பெற்று", ஆழ்வார்களால் "பின்னானார் வணங்கும் சோதி" என்று கொண்டாடப் பட்டு அருளிச்செயல் ஏற்றம் பெற்று மங்களாசாஸனம் செய்யப்பட்டவை திவ்ய தேசங்கள் எனப்படும். இவைகளில் தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டில் ஒன்றாகத் திருவல்லிக்கேணி எனப்படும் இந்தத் திவ்ய தேசம் சென்னையில் சிறப்புற்று விளங்குகிறது.

இந்த க்ஷேத்திரத்தின் மஹாத்மியம் ப்ரஹ்மாண்ட புராணத்தில் அடங்கிய "ப்ருந்தாரண்ய க்ஷேத்திர மஹாத்மியம்" மஹேச்வர நாரத ஸம்வாதத்தில் பத்து அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளது, இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதர், ஸ்ரீநரஸிம்மர், சக்கரவர்த்தித் திருமகன். ஸ்ரீபார்த்தசாரதி, ஸ்ரீகஜேந்திர வரதர் ஆக ஐந்து எம்பெருமான்கள் ஸ்ரீபேயாழ்வார், திருமழிசைப்பிரான், திருமங்கை மன்னன் ஆகியோரால் மங்களாசாஸனம் பெற்ற பெருமையும் கொண்டவை. மஹாத்மியத்தில் கண்டுள்ளபடி எம்பெருமான் இந்த க்ஷேத்திரத்தில் சேவை ஸாதிக்கும் விஷயம் பற்றிச்சிறிது விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

பார்த்தஸாரதி வைபவம்

வியாஸ மஹரிஷியின் சிஷ்யரான ஆத்ரேய மஹரிஷியின் விருப்பப்படி வியாஸர் ஸ்ரீமந்நாராயணன் ரூபத்தை வாஸுதேவ மூர்த்தியாக உத்தமமான சங்கத்தை வலது கையில் உடையவராகவும் தான முத்திரை கூடிய இடது கையை உடையவராகவும் கொண்ட ஸ்ரீக்ருஷ்ணாவதார மூர்த்தியாக ஸ்ரீ பார்த்தஸாரதி என்கிற திருநாமத்துடன் ஆவாஹனம் செய்து சாஸ்த்ரோக்தமாக ஆராதனம் செய்து ஆத்ரேய மஹரிஷியிடம் கொடுத்து

"ஆத்ரேய ! த்வம் மஹாபாக ! கத்வா
ப்ருந்தாவனம் சுபம்
சுமதேராச்ரமம் ஸௌம்ய வஸநோ
மஹாத்மநா |
தத்ர ரம்யே வநோத்ருசே ஸம்ஸ்தாப்ய
ப்ரதிமாம் இமாம் |
வைகாநஸேந விதிநா ஸ்மர்ச்சயு ஜகத்
குரும் ||"

என்று நியமித்தார். ஆத்ரேயர் அதன் படிக்கே துளஸீகாநநமாயும், மோக்ஷ ப்ராப்தமாயுள்ள ஸுமதி என்கிற ராஜரிஷி தவம் செய்யும் ப்ருந்தாரண்ய க்ஷேத்

acharya.org

திரத்தையடைந்து ருக்மிணியுடன் திகழும் ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி திவ்ய மங்கள அர்ச்சாவதார திருமேனியைப் பலராமர், சாத்யகி, ப்ரத்யும்நர், அநிருத்தர்களுடன் கூடியவராக வைகாநஸ ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்து பலகாலம் ஆராதித்தார். துண்டீர மண்டலத்தைச் சேர்ந்த ஸுமதி என்னும் ராஜா அனேக காலம் திருவேங்கடமுடையானை ஸேவித்து வருகையில் ஒருநாள் சங்கசக்கரதாரியாயிருக்கும் தங்கள் ஸ்வரூபத்தைப் பார்த்தன் தன் ஸாரதியாய் ஸாரத்யம்செய்த ப்ரகாசமான ஸாரத்ய சின்னத்துடன் கூடிய ஸ்வரூபமாக ஸேவை ஸாதிக்க வேண்டுமெனப்பிரார்த்திக்க எம்பெருமானும் மனமுவந்து அளித்த நியமனப்படி ஸுமதியும் ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தையடைந்து ஸ்ரீபார்த்தஸாரதியாகக்கண்டுகளித்ததாக ஐதிஹ்யம். இந்த விருத்தாந்தப்படிக்கே கீதாசாரியன் வேங்கடகிருஷ்ணன் என்னும் திருநாமமும் கொண்டு இங்குப் பிரஸித்தமாகத் திகழ்கிருர்.

மந்நாதர் பிரபாவம்

துளஸீவனத்தில் ப்ருகு, அத்ரி, மரீசி, மார்க்கண்டேயர், ஸுமதி, சப்தரோமா, ஜாலி என்கிற ரிஷிகள் தவம் செய்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீவைகுண்டத்தில் ஏற்பட்ட பிரணயகலகத்தினுல் உண்டான வசத்தினுல் பெரிய பிராட்டியார் க்ஷீராப்தியினின்று ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தையடைந்து கைரவிணிக்கரையில் திவ்ய மங்கள ஸ்வரூபமாகக் குழந்தை வடிவில் விளங்கினுர். அங்குத் தவமிருந்த ப்ருகு மஹரிஷி குழந்தையைத் தன் ஆச்ரமத்திற்கு எடுத்துச்சென்று தன் பத்னியிடமளித்து வேதவல்லி என்கிற திருநாமத்துடன் வளர்த்து வந்தார். லோகக்ஷேமத்தின் பொருட்டு எம்பெருமான் ப்ருகு ஆச்ரமத்தையடைந்தார். மஹரிஷியின் விருப்பத்திற்கிணங்க ஸ்ரீமந்நாராயணன் தன் திவ்ய மங்கள ரூபத்தைக் காட்ட மஹரிஷியும் கண்டு மகிழ்ந்தார். ஆச்ரமத்தில் வேதவல்லி என்னும் பெயரில் வளர்ந்துவரும் கன்னிகை தன் பொருட்டுக் கொடுக்கப்பட வேண்டுமென எம்பெருமான் கேட்டார். மஹரிஷியும் வேதவல்லியை அழைத்து விருப்பமறிய வினுவ, பிராட்டியும் மனமகிழ்ந்து "இவரே என் நாதன்" (மந்நாத:) என்று தன் விருப்பத்தைக் கூற ப்ருகு மஹரிஷியும் பூர்ண மனதுடன் சாஸ்த்ரோத்தமாகப் பிராட்டியை ஶ்ரிய: பதியான சர்வேச்வரனுக்குக் கன்யகாதானம் செய்து கொடுத்தார். இந்த வருத்தாந்தப்படிக்கே மந்நாதன் என்றும், என்னையாளுடையப்பன் என்றும் பெயர் பிரஸித்தம்.

ந்ருஸிஹ்மர் விருத்தாந்தம்

பிரஸித்தராயும், பகவத்ச்ரேஷ்டராயும் அத்ரி மஹரிஷி இந்த க்ஷேத்ரத்தில் எம்பெருமானிடத்து மோக்ஷத்தை இச்சித்து வெகுகாலம் தவமிருந்தார். பரம தார்மீகரான கபில மஹரிஷியின் பௌத்திரர் விகட மஹரிஷி அத்ரி மஹரிஷி ஆச்ரமத்தையடைந்து தான் மரீசி மஹரிஷி பார்க்கவ மஹரிஷியிடம் கூறியதைக் கேட்டபடி மஹாமேரு பர்வதத்தில் தேவ ரிஷிகள், தேவதைகள் மத்தியில் வசிஷ்டர் வாயிலாக ஶ்ரிய: பதியானவர் அத்ரி மஹரிஷிக்கு ஸேவை ஸாதிக்கப்போகும் விஷயம் கூறியதைக் கேட்டு இங்கு வந்த விவரணம் கூறினுர். இருவரும் பல நாட்கள் தவமிருக்கையில் ஒருநாள் தேவேந்திராதி தேவர்களும் சந்துஷ்டியுடன் அங்கு வந்துள்ளதைக் கண்டு வியப்புடன் இருக்கையில் ஒளிவீசும் பொன்மயமான விமானத்தில் அனந்த, கருட, விஷ்வக்ஸேனுதி நித்யசூரிகளுடன், ஸகல தேவதைகளுடனும் பரிவாரங்களுடனும் ஸர்வாபரண பூஷிதராய் ஸ்ரீநரஸிம்மஸ்வரூபியாய் ஸேவை ஸாதித்தார். மனேஹரமான இத்தலத்தில் லோகக்ஷேமார்த்தமாக வாஸம் செய்யத் திருவுள்ளம் கொண்டு பரிபூர்ண பக்தியைச் செய்த மஹரிஷிகளுக்கு மோக்ஷப்ராதனம் செய்து அர்ச்சாரூபியாய் ஸ்ரீநரஸிம்மர் வரப்ரஸாதியாக விளங்குகிருர்.

srivatsam

acharya.org

சக்கரவர்த்தித் திருமகன் ஏற்றம்:

சசபத மஹரிஷிக்கும் ஹேலீ என்கிற அப்ஸரஸாக்கும் குமாரனாகப் பிறந்து குழந்தையாகக் காட்டில் விடப்பட்டு மான் கூட்டங்களிடை குகையில் தனித்திருந்து இயற்கையாகத் தேன் கூட்டிலிருந்து வர்ஷித்த தேனை அருந்தி வளர்ந்தவர் மதுமான் எனத் திருநாமம் பெற்றவர். கார்க்கய மஹரிஷியின் உபதேசத்தால் இராமாவதார வைபவத்தை யறிந்து அவர் ஸ்வப்னம் ஸாதித்தபடியே துளஸீ கானனத்தில் கைரவணி தீரத்தில் அனுஷ்டானங்களை மேற்கொண்டு எம்பெருமானை த்யானித்து பரம தபஸ்வியாக இருந்தார். ஸர்வ ஜகத்காரணனை ஸ்ரீமந் நாராயணன் மஹரிஷி மதுமானுக்குச் சக்கரவர்த்தித் திருமகனாக ப்ராதாக்கள் ஸஹிதராகவும் ஸீதாதேவி ஸமேதராகவும் ஸேவை ஸாதித்து லோக ஹிதார்த்தமாக அர்ச்சா ரூபியாய் இங்கு எழுந்தருளியுள்ளார்.

கஜேந்திரவரதன்: திருவருட்பிரபாவம்:

ஸப்தரோமா என்னும் பிரஸித்தரான மஹரிஷி கருடாரூடராயிருக்கும் வரதனை ஆவாஹனம் செய்து வைகாநஸ ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்து ஆராதித்து பரமபத ப்ராப்தி பெற்றார். மீனமர் பொய்கை மலர் கொய்வான் சென்றிழிந்த கானமர் வேழம் துயர் தீரப் புள்ளூர்ந்து கஜேந்திர வரதனாக இங்கு ஸேவை ஸாதிக்கிறார்.

பூஜா முறை:

மேலும் இவ்வாலய பூஜா முறை வழக்கங்களும், உத்ஸவாதி விசேஷங்களும் சில, அடியேன் அறிந்தபடி விண்ணப்பிக்கின்றேன். ஸ்ரீவைகாநஸ ஸூத்ர பிரணேதா ஸ்ரீ விகநஸர் ஸ்ரீமந் நாராயணனின் மானஸிக புத்திரராக எம்பெருமானை ஆராதிப்பதற்காகத் திருவவதாரம் செய்தார். பகவானால் உபதேசிக்கப்பட்டு விகநஸர் வேத, வேதாந்தங்கள், சாஸ்த்ரங்கள் முதலியவற்றையும் நிஷேகாதி பதினெட்டு ஸம்ஸ்காரங்களைக் கொண்ட ஸ்ரீவைகாநஸ ஸூத்ரத்தையும் தம்முடைய சிஷ்யர்களான அத்ரி, ப்ருஹு, மரீசி, காச்யபர் ஆகியோருக்கு உபதேசித்தருளினர். வைகாநஸர்கள் அனுஷ்டிக்க வேண்டிய நித்திய கர்மா முறைகள், ஆலய நிர்மாணம் முதல் ப்ரதிஷ்டை பூர்த்தியாக விதிகள், நித்திய பூஜா விதிகள், உத்ஸவாதி பூஜா நியமங்கள், முறைகள் இவர்களால் விரிவாக வகுக்கப்பட்டுக் கூறப்பட்ட கிரந்தங்கள் வைகாநஸ ஆகமம் என்று வழங்கப்படுகின்றன. இந்த சாஸ்த்ரம் வேதங்களை மூலமாகக் கொண்டது. மரீசி எட்டு ஸம்ஹிதைகளும், ப்ருஹு பத்து அதிகாரங்களும், அத்ரி நான்கு தந்த்ரங்களையும், காச்யபர் நான்கு காண்டங்களையும் அனுக்ரஹித்துள்ளார்கள். இதில் பல லக்ஷம் க்ரந்தங்கள் (ச்லோகங்கள்) அடங்கியுள்ளன. இவ்விதம் ஸ்ரீவிகநஸர் அருளிய வைகாநஸ ஆகம பூஜை இந்தத் திவ்ய தேசத்தில் நடைபெறுகிறது. மேற்படி பகவத்சாஸ்த்ர விதிப்படி கூறப்பட்டுள்ள த்ருவ, கௌதுக, உத்ஸவ, ஸ்நபன, பலி பேரம் என்கிற பஞ்ச பேராராதனம் என்னும் உத்தம லக்ஷணப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஸந்நிதியில் 1. உஷத் கால பூஜை (விச்வரூபம்), 2. ப்ராதக் கால பூஜை (காலசந்தி), 3. மத்யான்ஹ ஆராதனம் (உச்சிக் காலம்), 4. சந்த்யாராதனம் (மாலை நித்யாநுசந்தானம்), 5. ராத்ரி ஆராதனம், 6. அர்த்த ஜாமம் (அரவணை) என ஆறு கால பூஜை எம்பெருமான் கண்டருளுகிறார். இது ஷட்கால ஆராதனம் எனப் பிரஸித்தம். எம்பெருமானுக்கு மிக்க உகப்பான ஷோடசோபசாரம் என்கிறபடிக்கே, த்யானம், ஆவாஹனம், பாத்யம், அர்க்யம், ஆசமநீயம், மதுபர்க்கம், ஸ்நபனம், வஸ்த்ரம், கந்தம் அக்ஷதம், புஷ்ப, புஷ்பந்யாஸ பீடார்ச்சனம், தூபம், தீபம், நீராஞ்சனம், நைவேத்யம், முகவாஸம் என்கிற பதினாறு வித உபசாரங்கள் கொண்டு இங்கு ஆராதனம் செய்யப்படுகிறது. இத்தகைய உபசார விசேஷத்தால் எம்பெரு

acharya.org

மானுக்கு ஸாந்நித்யம் அதிகம் ஏற்படு கிறது என ஆகம விதியில் கூறப் பட்டுள்ளது.

உத்ஸவ விசேஷங்கள் :

உத்க்ருஷ்டமான சங்கல்பங் கொண்டு எம்பெருமானுக்குச் செய்யும் யக்ஞம் உத்ஸவம் எனப்படும். ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி இங்கு பிரம்மோத்ஸவம், பவித்ரோத்ஸவம், பல்லவ உத்ஸவம், அத்யயனோத்ஸவம், ஜயந்தி உத்ஸவம், ஸமீப்ரஹனோத்ஸவம் (ஆயுத பூஜை-வன்னி மரம்), க்ருத்திகா தீபோத்ஸவம், ஜலப்லாவன உத்ஸவம், வஸந்தோத்ஸவம், தவன உத்ஸவம், கோடோத்ஸவம், நித்யோத்ஸவம், மாஸோத்ஸவம், பக்ஷோத்ஸவம் எனப் பல உத்ஸவங்கள் கண்டருளுகிறார். ஸ்ரீரங்கநாதர் மாசி சுக்லபக்ஷ துவாதசி வைவாஹிக உத்ஸவம், பங்குனி பல்லவோத்ஸவ திருக்கல்யாணமும் கண்டருளுகிறார். ஆனி மீ ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. இந்த உத்ஸவங்கள் வைகாநஸ ஆகமத்தில் கூறியுள்ளபடி காலங்களையும், முறையையும், தென்னாசாரிய சமப்ரதாயத்தை அனுஷ்டித்தும் செய்யப்படுகிறது.

பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம் சேனைமுதன்மையார் எழுந்தருளி ஆராதனம் கண்டு ஆசாரிய வர்ணம், அனுக்ரஹம் அர்ச்சகர் பிரார்த்தனை சூக்தம் கூறியபின் ஆழ்வார் கோவில் சென்று ம்ருத் சங்க்ரஹணம் செய்யப் படுகிறது. சேனைமுதன்மையார் திருவீதி வலமாக வேத, அத்யாபக கோஷ்டியினர் ஸ்வஸ்திவாசனம் கூற ஸந்நிதிக்கு எழுந்தருளுகிறார். யாகசாலா கிரியைகள், நிவேதனம் பூர்த்தியடைந்து, பட்டர் அனுக்ரஹம் கூற, கோஷ்டியார் ததாஸ்து சாதிப்பது வழக்கம் (அனுக்ரஹ முறை). பிரம்மோத்ஸவாங்கமாக ஆசாரிய ரித்விக்வர்ணம், ம்ருத்சங்க்ரஹணம், அங்குரார்ப் பணம், வாஸ்துஹோமம், த்வஜ கருடபிரதிஷ்டை, பேரீதாடனம், கத்யபத்யங்கள், துவஜாரோஹணம் ஆலய விமான பலி நிர்வாபனம், தேவார்ச்சனம், நவதிக் ஸந்தி, விசேஷ ஸ்நபனம், கும்பாராதனம், பிம்ப வஸ்த்ர, புஷ்பாலங்காரம், ஸப்யாக்னிகுண்ட ஹோமம், யாக தீக்ஷா ரக்ஷாபந்தனம், ப்ரதான ஹோமங்கள், உத்ஸவ பலி நிர்வாபனம், திருவீதி உத்ஸவம், வேதபாராயணம். பிரபந்த ஸேவைகள், உத்ஸவாந்த ஸ்நபனம், சயனஸ்தான உபசாரங்கள், புஷ்பாஞ்சலி ப்ரணாமங்கள் முதலான எம்பெருமானுக்கு உகப்பான கைங்கர்யங்கள் பல நடைபெறுகின்றன. மற்றும் தேவ-தேவ்யோ : ஸம்வாதம், நம்மாழ்வார் மத்யஸ்த ஸ்தான அருளிச் செயல்கள், அவப்ருத உத்ஸவம், உத்வாஸந ப்ரபந்தம் என்னும் விடை சாதிக்கும் கைங்கர்யங்கள் பல. பல்லக்கு, ரதோத்ஸவம், கோபுரவாசல் கருட தரிசனம் ஆகிய காலத்தில் ஸ்ரீமந்நாராயணன் ஸேவை செய்பவர்கள் புனர்ஜன்மம் அடைவதில்லை என்கிறபடிக்கே எம்பெருமானின் பரிபூர்ண கடாக்ஷம் பெற்றுத் திகழ்வார்கள் என சாஸ்திரம் கூறுகிறது. பேரீதாடன சப்தத்தால் ஸ்வர்க்கலோக வாஸிகளான தேவர்களுக்கு நன்மையும் பாதாளவாஸிகளான அஸுரர்களுக்கு நாசமும் உண்டாகிறது. மற்றும் லோகக்ஷேமமும், ஸர்வ பாப விமோசனமும் ப்ராப்தமாவதாக ஆகமத்தில் கூறப் பட்டுள்ளது.

பிரம்மோத்ஸவம் துவஜாரோஹணம் ஆகி பட்டர் விமான பலி ஸாதிக்கும் நேரம் எம்பெருமான் ப்ராகாரம் உள்ளே எழுந்தருளும்போது வேத, அத்யாபக கோஷ்டியினர் ஸ்வஸ்திவாசனம் உகப்பான கைங்கர்யம் சாதிக்கின்றார்கள். திருவீதி உத்ஸவம் முடிவுற்று எம்பெருமான் கல்யாணமண்டபம் அடைந்ததும் பட்டர் பிரம்மகோஷம் அனுக்ஞை கூற ததாஸ்து

acharya.org

அனுக்கிரஹம் கோஷ்டியார் சாதிக்கின்றனர். ரதோத்ஸவத்தன்று எம்பெருமான் திருத்தேருக்கு எழுந்தருளுகையில் கோஷ்டியினர் பெருமாளுக்குப் பின்பாக ஸ்வஸ்திவாசனம் சாதித்துக்கொண்டு வருகிறார்கள்.

பவித்ரோத்ஸவம்: இது ஸம்வத்ஸர பிராயச்சித்தமாக நடைபெறும் சாந்தி உத்ஸவம். ஸப்ததினங்கள் நடைபெறும் விசேஷ உத்ஸவம். அங்குரார்ப்பணத் தன்று எம்பெருமான் யாகசாலையில் திருமஞ்சனம், திருவாராதனம் கண்டருளி ஆசாரியவர்ணம் நடைபெறும். பட்டாசாரியர் அனுக்ஞை ப்ரார்த்தனை ஸூக்தம் சாதித்து அருளப்பாடு வேதங்கள், இதிஹாஸங்கள், பகவத்கீதை, ஸ்ரீவிஷ்ணு புராணம், ஸ்தோத்ரரத்னம், ஸ்ரீபாஷ்யம், அருளிச்செயலான திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்கள் என்று அருளப்பாடு கூற, வேத, அத்யாபக கோஷ்டியினர் முறையே அந்தந்த கிரமங்கள் ஸேவிப்பது மிக விசேஷமான உகப்பான கைங்கர்யம். பிறகு யாகசாலை அங்குரார்ப்பணம், பவித்திர பிரதிஷ்டை மறுநாள் கும்பாவாஹனம், திருவாராதனம், ஔபாஸனம், ஸப்யம், பௌண்ட்ரீகம் குண்டங்கள் அக்னி ப்ரதிஷ்டை, ஹோமங்கள், வேதபாராயண, திவ்யப்ரபந்த சேவையுடன் பிரதிதினம் நடைபெறுகிறது. பூர்ணாஹுதி முடிந்து பெருமாள் கும்பத்துடன் மூலஸ்தானம் எழுந்தருளும்போது வேத, அத்யாபக கோஷ்டியினர் ஸ்வஸ்திவசனம் கைங்கர்யம் சாதிக்கின்றனர். சாத்து முறையில் பூர்த்தி நடைபெறும்.

இராப்பத்து உத்ஸவம் ஆரம்பமாகும் வைகுண்ட ஏகாதசியன்று பெருமாள் பரமபதவாசல் திறக்கப்பட்டதும் அர்ச்சகர் ஸ்ரீநம்மாழ்வாருக்குப் பரிவட்டம் மாலை ஸமர்ப்பித்து ஸ்ரீசடாரி ஸாதித்து கோஷ்டிக்கு ஸ்ரீசடாரி ஸாதித்து, பெருமாளருகே எழுந்தருளச் செய்து அர்ச்சகர் அருளப்பாடு, வேதங்கள், இதிஹாசம், பகவத்கீதை, ஸ்ரீவிஷ்ணுபுராணம், ஸ்தோத்ரரத்னம், ஸ்ரீபாஷ்யம், திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்கள் என்று சொல்ல, கோஷ்டியினர் முறையே கிரமமாக ஸேவிப்பது எம்பெருமானுக்கு முகோல்லாசத்தைத் தருவதும் அனைவருக்கும் உகப்பான காட்சியாகவும் அமைந்திருக்கும்.

விசேஷ ஸம்ப்ரோக்ஷண, பிரதிஷ்டை காலங்களிலும் அங்குரார்ப்பணத்தன்று மேலே குறித்துள்ள முறையில் வேத விண்ணப்பம், பிரபந்த விண்ணப்பம் செய்வதும் நடைபெறும். யாகசாலையில் ஹோமங்கள் காலத்தில் வேதபாராயண, பிரபந்த ஸேவைகள் நடைபெறும். பூர்ணாஹுதி நடந்து கும்பம், பிம்பம் மூலஸ்தானத்திற்கு எழுந்தருளுகையில் கோஷ்டியார் ஸ்வஸ்திவாசனம் கூற உடன் வருவது அருங்காக்ஷியாக இருக்கும்.

ஸ்ரீவைகானஸர்களின் சம்ப்ரதாயம் ஸ்ரீராமானுஜரின் விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்திற்கு உடன்பட்டதே. லக்ஷ்மி விசிஷ்டாத்வைதம் என வழங்கப்படும் இது ஸ்ரீமந்நாராயண பரத்வத்தையே சிறப்பாகக் கொண்டது. ஸந்நிதியில் நடைபெறும் அருளிச்செயல் ஏற்றம் வைகானஸ ஆகமத்திற்கு உகப்பாகவே அனுஷ்டிக்கப்படுகிறது. அதன் கிரமத்தைக் கொண்டே அருளிச்செயல் ஏற்றம் மிக்க ஆழ்வார், ஆசாரியாள் பிரதிஷ்டையின் அவரவர்கள் அம்சத்தையனுசரித்து த்யான ஸ்லோகங்களையும் மூர்த்தி மந்த்ரங்களையும் கொண்டு வைகானஸ ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்யப்படுகிறது. எம்பெருமானுக்கு உகப்பான ஆராதனாதி உபசாரங்கள் செய்யப்படுவது போலவே அருளிச்செயல்கள் ஏற்றம் கொண்ட ஆழ்வாராசாரியர்களுக்கும் ஆகம விதிப்படி நித்திய நைமித்திக ஆராதனங்கள்

srivatsam
acharya.org

செய்யப்படுகிறது. ஸ்ரீவைகாநஸ ஆகமம் அருளிச்செயல் ஏற்றத்திற்கும் ஒருமித்த கருத்துக் கொண்டது என்பதை எம்பெருமானுர் திருவவதாரம் செய்த ஸ்தலத்தில் நடைபெறும் வைகாநஸ ஆகம ஆராதனம் துல்யமாக விளக்குகிறது. பிரம்மோத்ஸவ காலத்தில் கூறப்படும் ஸம்வாத பிரயோகங்களில் மணிப்ரவாள நடையில் அமைந்துள்ள தமிழ்நடையிலுள்ள ச்லோகங்களும், உத்வாஸன ப்ரபந்தம் என்னும் விடைசாதித்தல்படலத்திலும் அமைந்துள்ள மணிப்ரவாள நடைகளிலும் அருளிச்செயல் பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன.

மற்றும் உத்ஸவாதி விளக்கங்கள் விரிவானதாக உள்ளது. காலம் மற்றும் அடியேனுக்கு அளித்த நியமனம் இரண்டையும் கருத்தில் கொண்டு இத்துடன் வியாசத்தை முடிக்கிறேன்.

விற்பன்னர்கள் பலர் அரிய கருத்துக்கள் பல பிரகாசிக்கவிருக்கும் இம்மலரில் அடியேன் கலந்து எழுத வாய்ப்பளித்த வேத அத்யாபக கோஷ்டி நிர்வாகிகளுக்கு அடியேன் க்ருதக்ஞைகளை விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

srivatsam

acharya.org

திருவல்லிக்கேணி ஸந்நிதியில் நடைபெறும் திருக்கல்யாணங்களும், விசேஷ உத்ஸவங்களும்

ஸ்ரீ. உ. வே. N. V. கோவிந்தராஜ பட்டாசாரியார்

(சின்னமுறை பரம்பரை அர்ச்சக மிராசுதார்)

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணன் "பரத்வஞ்ச ததோ வ்யூஹம் விபவம் சாந்தராத்மகம். அர்ச்சாவதாரம் சாஸ்த்ராணாம்" என்கிறபடி பரத்வம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்கிற ஐந்து நிலைகளிலே இருந்து இவ்வுலகை ரக்ஷிக்கிறார். இவற்றுள் அர்ச்சாவதாரமே எல்லோரும் ஈடுபட்டுப் பலனடைவதாக உள்ளது என்று கீழ்க் கண்ட அர்ச்சனா நவநீத ச்லோகம் "ஆராதனாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராதனம், பரம் யேநகேந ப்ரகாரேண விஷ்ணோர்ச்சந முத்தமம்| ஆத்மார்த்தம் வா பரார்த்தம் வாக்ருஹ தேவாலயே பிவா அர்ச்சனம் வாஸுதேவஸ்ய லக்ஷ கோடி குணம் பவேத்||" எனக் கூறுகிறது. இவ்வண்ணம் பெருமையுடன் திகழும் ஸ்ரீமந்நாராயணன் லோகக்ஷேமார்த்தம் அர்ச்சாரூபியாய் ஸ்ரீ பார்த்தஸாரதியாக எழுந்தருளியுள்ள நம் ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்திலே நடைபெறும் விசேஷ உத்ஸவங்களையும், திருக்கல்யாணங்களையும் பற்றி அடியேன் சிற்றறிவுக்குத் தெரிந்தவரையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனந்த கல்யாண குணங்களையுடைய ஸ்ரீமந்நாராயணனின் நித்ய கல்யாணகுண வைபவங்களை அர்ச்சாவதாரத்திலே நித்ய விபூதிகளை நாம் கண்டு ஆனந்தித்து வருகின்றோம். ஸ்ரீவைகானஸ பகவத் ஸாஸ்திரத்திலே க்ரஹார்ச்சையும் ஆலயார்ச்சையும் விசேஷமாகச் சொல்லப்பட்டுள்ளன. அதில் 'வைவாஹிகம்' என்கிற திருக்கல்யாண மஹோத்ஸவத்தைப் பற்றியும், தெய்வீகம், சாரீரம் இரண்டுக்கும் க்ரஹ்ய ஸூத்ர ரீதியாக, ச்ரௌதமாக அக்னிகார்யம் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி ஸூத்ர ரீதியாக விவாஹம் எட்டு விதமாக உள்ளது. அதாவது ப்ராம்மம், தேவம், ப்ராஜாபத்யம், ஆர்ஷம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என்று விவரிக்கப்பட்டுள்ளது. தைவீகத்திற்கு ப்ராம்ம விவாஹமும், காந்தர்வ விவாஹ ஸூத்ர ரீதியாகவும் சொல்லப்பட்டுள்து.

நம் ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்திலே எழுந்தருளியுள்ள ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமிக்கும் ஸ்ரீ ஆண்டாளுக்கும் காந்தர்வ விவாஹ ஸூத்ரப்படி மாலை மாற்றல்: மாங்கல்ய தாரணம் மட்டும் ஹோமாதிகள் இல்லாமல் போகியன்று திருக்கல்யாணம் கண்டருளுகிறார்.

ப்ருகு மஹரிஷியின் புத்ரியாக அவதரித்த ஸ்ரீ வேதவல்லி என்கிற திருநாமமுடைய ஸ்ரீ மஹாலக்ஷ்மியை, ச்ரிய: பதியான க்ஷீராப்திநாதனான ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீமந்நாதன் என்கிற திருநாமம் ப்ரகாசிக்க இந்த ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்திலே எழுந்தருளி மாசி மாதம் சுக்ல பக்ஷ துவாதசியன்று ப்ராம்ம விவாஹ ஸூத்ரப்படி, 'வாரணமாயிரம்' என்று ஆண்டாள் அருளிச்செயலில் உள்ளது போல, திருக்காப்பு நாண்தரித்தலும், அக்னியை வலம் வருதலும், அச்சுதனின் கைமேல் கை வைத்துப் பொரியிடலும், அம்மி மிதித்தல், ஸப்தபதி முதலான வேதோக்த வைதீகமான ஹோமாதிகளைச்

srivatsam

acharya.org

செய்தும் பாணிக்கிரஹணம் (திருக்கல யாணம்) செய்துகொடுத்ததாக நம் ப்ரம் மாண்ட புராணம் கூறுகிறது. "ததஸ் தஸ்மிந் திநே ரஸ்து ப்ருந்தாரண்யே மஹாமதி:| மந்நாதம் ப்ரணமேத் விப்ர: ஸ யாதி பரமம்பதம்||" என்கிறபடி யாதொரு புத்திமானான மனுஷ்யனானவன் மாசி மாதம் சுக்லபக்ஷ துவாதசியன்று இந்த க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்ரீ வேத வல்லி ஸமேத ஸ்ரீமந்நாதனை ஸேவிக்கிறானோ அவன் ஸகல ஐச்வர்யத்தையும் அடைந்து அந்தத்தில் பரமபதத்தை அடைவான் என நம் ப்ரம்மாண்ட புராணம் கூறுகிறது.

ஸ்ரீ வேதவல்லித் தாயாருக்கும் ஸ்ரீமந் நாதருக்கும், பங்குனி மாதம் உத்தர பல்குநி நக்ஷத்திரமாகிய ஸ்ரீ வேதவல்லித் தாயாரின் திருநக்ஷத்திரத்திலே காந்தர்வ விவாஹ ரீதியாக ஹோமாதிகள் இல்லாமல் மாலை மாற்றல், மாங்கல்யதாரணம் மட்டும் பங்குனி உத்திர திருக்கல்யாண மஹோத்ஸவத்தில் கண்டருளுகிறார். மேற்படி மூன்று திருக்கல்யாண விபவங்கள் நமது ஸன்னிதியில் ப்ரதி வருஷமும் நடக்க எம்பெருமானின் கடாக்ஷத்தால் நாம் கண்டுகளித்து வருகிறோம்.

உத்ஸவங்களிலே நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாஸோத்ஸவம், ஸம்வத்ஸரோத்ஸவம், பிரம்மோத்ஸவம், ஸ்ரத்யோத்ஸவம், ஸாந்த்ரோத்ஸவம், பல்லவோத்வஸம், பவித்ரோத்ஸவம், வஸந்தோத்ஸவம், கந்தோத்ஸவம், டோலோத்ஸவம், அத்யயனோத்ஸவம், க்ருத்திகாதீபோத்ஸவம், லக்ஷ்மீநாராயணோத்ஸவம், ஜலப்ராவணோத்ஸவம் எனப்பலவிதமான உத்ஸவங்கள் உள்ளன. இவற்றுள் ப்ரதி வருஷமும், ப்ரதிதினமும் தொடர்ந்து நடைபெறும் உத்ஸவம் நித்யோத்ஸவம் எனவும், துர்பிக்ஷம், வியாதி, சத்ரு பயம், பஞ்சம் ஏற்படும்போது அவை நீங்கச் செய்யும் உத்ஸவம் ஸாந்த்ரோத்ஸவம் எனவும், ஸ்ரத்தைகொண்டு ப்ரார்த்தனை மூலம் செய்யும் உத்ஸவம் ஸ்ரத்யோத்ஸவம் எனவும், "பகாரோ பாபநாசாயீ, விகாரோ விக்னசாந்தயே த்ருகாரம் த்ராணநப்ரோக்தம் இதிபவித்ரஸ்ய லக்ஷணம்" என்கிற ஸ்ரீபகவத் சாஸ்திரப்படி ஸர்வபாபங்கள் அகலவும், ஸகல கார்யங்களும் தடங்கல் இல்லாமல் நடக்கவும், லோக க்ஷேமத்திற்காகவும் பவித்ர உத்ஸவம் நடைபெறுகிறது. பிரம்மோத்ஸவத்தில் ஒருநாள் உத்ஸவம் செய்வது சாந்தியை அளிக்குமென்றும், மூன்றுநாள் உத்ஸவம் புஷ்டியை அளிக்குமென்றும், ஐந்துநாள் உத்ஸவம் ஜயத்தை அளிக்குமென்றும், ஏழுநாள் உத்ஸவம் அத்புதத்தை அளிக்குமென்றும், ஒன்பதுநாள் உத்ஸவம் ஸர்வமங்களத்தை அளிக்கக் கூடியது என்றும் உள்ளதால் ஒன்பது நாள் உத்ஸவமே சிறந்தது என ஸ்ரீபகவத் சாஸ்திரம் கூறுகிறது. பிரம்மோற்சவத்தில் துவஜாரோகண உத்ஸவம், கருடோத்ஸவம், சூர்ணாபிஷேக வஸந்தோத்ஸவம், ரதோத்ஸவம், அவரோகண உத்ஸவம் த்வாதசாராதன ஸ்ரீபுஷ்பயாகோத்ஸவம், சிறந்த உத்ஸவங்களாகும். "ரதஸ்தம் கேசவம் த்ருஷ்ட்வா புனர்ஜென்ம நவித்யதே|" என்கிறபடி ரதத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை ஸேவிப்பதால் புனர்ஜென்மம் இல்லை எனத் தெளிவாகிறது. ப்ரதிதினமும் யாகசாலையில் நித்யஹோமத்துடன் ஸர்வதைவத்யம், பாரமாத்மீகம் போன்ற விசேஷ ஹோமங்களும் நடைபெறுவதால் லோக க்ஷேமம், ஸர்வ பாப விமோசனம் ஏற்படுகிறது. மேற்கண்டபடி நம் ஸந்நிதியில் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமிக்குச் சித்திரை மாதம் ச்ரவண நக்ஷத்திரம் தீர்த்தவாரியாகவும், ஸ்ரீநரஸிம்ம ஸ்வாமிக்கு ஆனி மாதம் ச்ரவண நக்ஷத்திரம் தீர்த்தவாரியாகவும் பிரம்மோத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

"ப்ருந்தேத் யக்ஷரயுக்மஞ்ச துலஸீத் யக்ஷரத்ரயம்| ஸங்கீர்த்தயதி யோநாம

acharya.org

தஸ்ய புண்யமநந்தகம் || என்கிறபடி ப்ருந்தா என்கிற இரு அக்ஷரங்களையும், துலஸீ என்ற மூன்று அக்ஷரங்களையும் ஸங்கீர்த்தனம் செய்கிறவர்களுக்கு அந்த க்ஷணமே புண்யமானது கிடைக்கும் என்பதில் ஐயமில்லை என நம் ஸ்தல புராண ச்லோகம் கூறுகிறது. இப்படிப் புகழ் பெற்ற நம் ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ கீதையை அருளிச்செய்த கீதாசார்யனாகவும், ஸுமதி மஹாராஜாவுக்கு ப்ரத்யக்ஷமானவரும், ஸ்ரீவ்யாஸ பகவானால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு ஸ்ரீ ஆத்ரேய மஹரிஷியினால் ஸ்ரீசாஸ்திரமான ஸ்ரீவைகானஸ விதியினாலே ஆராதிக்கப்பட்டவருமான ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமிக்கு வைகாசி மாதத்தில் வஸந்தோத்ஸவமும், ஆவணியில் பவித்ரோத்ஸவமும், ஸ்ரீஜெயந்தி உத்ஸவமும், ஐப்பசியில் ஸ்ரீமணவாளமாமுனிகள் சாற்றுமுறையன்று கைத்தல ஸேவையும், மற்றும் தீபாவளி, அன்னகூட உத்ஸவங்களும், கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை உத்ஸவமும், மார்கழியில் அத்யயன உத்ஸவம் எனப்படும் பகல் பத்து, இராப் பத்து உத்ஸவங்களும், தை மாதத்தில் தைப்பூச உத்ஸவமும், மாசி மாதத்தில் மாசிமகம் உத்ஸவமும், "பஞ்சதீர்த்த ஸமாயுக்த மீத்ருஸீம்தாம் ஸரோவராம் | ஸ்நாநாயாத் கைரவணீம் விப்ரயதீச்சதி ஹரேபேதம் ||" என்கிறபடி பஞ்சதீர்த்தமாகிய இந்திர, ஸோம, அக்னி, மீன, விஷ்ணு தீர்த்தங்களின் மத்தியில் பாவனையான கைரவணி புஷ்கரிணியில், ஸ்பர்சந, ஸ்நாநங்களாலே மனுஷ்யர்களுடைய ஸகல பாபமும் அகலுகிறது எனப்புகழ் பெற்ற நம் கைரவணி புஷ்கரிணியில் ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமிக்கு மாசி அமாவாசை முதல் 3 நாள் தெப்போற்சவமும், மற்றும் ஸ்ரீநரசிம்மர், ஸ்ரீராமர், ஸ்ரீரங்கநாதர், ஸ்ரீவரதர் ஆகிய எம்பெருமான்களுக்கு ஒருநாள் தெப்போற்சவமும், ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமிக்கு ஐந்துநாள் தவனோத்ஸவமும் வெகு விமரிசையாக நடைபெறுகிறது,

ஸ்ரீமன்னாத ஸ்வாமிக்குப் பங்குனிமாதத்தில் பல்லவோத்ஸவம் ஐந்து நாட்கள், பங்குனி உத்திரம் ஸ்ரீவேதவல்லித் தாயாருடன் திருக்கல்யாணம் முடிய நடைபெறுகிறது. இந்த ஐந்து தினங்களும் திருவாய்மொழி மண்டபத்தில் ஸ்ரீமன்னாதஸ்வாமி எழுந்தருளியிருக்க, தினமும் "ப்ருந்தாரண்ய" ஸ்தல மஹாத்மயம் படித்து விளக்கப்படுகிறது.

ஸ்ரீராமருக்குப் பங்குனி மாதத்தில் ஸ்ரீராமநவமி முடிய 9 நாட்கள் உத்ஸவமும், ஸ்ரீவைகுண்டத்திலிருந்து விரைந்து கஜேந்திரனுக்கு, அருள்கூர்ந்த ஸப்தரோமா என்ற மஹரிஷியால் ஸ்ரீவைகானஸ விதிப்படி பிரதிஷ்டை செய்து ஆராதிக்கப்பட்ட ஸ்ரீகஜேந்திர வரதராஜ ஸ்வாமிக்கு வைகாசி மாதத்தில் 10 நாட்கள் உத்ஸலமும், ஸ்ரீ ஆண்டாளுக்கு ஆடி மாதத்தில் திருஆடிப்பூர உத்ஸவமும், மார்கழி மாதத்தில் போகிதிருக்கல்யாணம் முடிய 9 நாள் நீராட்ட உத்ஸவமும், ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமிக்கு தைமாதத்தில் ஈக்காட்டுதாங்கல் உத்ஸவமும் வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

ஸ்ரீவேதவல்லித்தாயாருக்குப் புரட்டாசி மாதத்தில் நவராத்திரி உத்ஸவமும் ஸ்ரீராமானுஜருக்குச் சித்திரை மாதத்தில் 10 நாட்கள் அவதார உத்ஸவமும், ஸ்ரீமணவாளமாமுனிகளுக்கு ஐப்பசி மாதத்தில் 10 நாட்கள் அவதார உத்ஸவமும் வெகு விமரிசையாக நடைபெறுகின்றது.

நம் ஸந்நிதியில் சிறப்பாகப் பணியாற்றிவரும் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி தேவஸ்தான வேத அத்யாபக கோஷ்டியைச் சேர்ந்த ஸ்வாமிகளும் அவர்களது ஸபையும் பல்லாண்டு பரம க்ஷேமத்துடன் வர்த்திக்கவேண்டும் என ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியை ப்ரார்த்தித்து அமைகிறேன்.

acharya.org

ஸ்ரீ பாஞ்சராத்ரம்

[தேனேமலையூர் பாஞ்சராத்ரம் ஸ்ரீவரதராஜ பட்டர்]

கமப்யாத்யம் குரும் வந்தே
கமலாக்ருஹமேதிநம்।
ப்ரவக்தா சந்தஸாம் வக்தா
பஞ்சராத்ரஸ்ய யஸ் ஸ்வயம் ||

ஸ்ரீ பாஞ்சராத்ரம் என்பது பகவத் சாஸ்த்ரம். இதை வெளியிட்டவர் ஸர்வஜ்ஞரான பகவானே இதற்கு ஆதார பூதமாகவும், வக்தாவாகவும் இருப்பதால், இதற்கு தனிப் பெருமை உண்டு. பாஞ்சராத்ரம் என்பதற்குப் பல இடங்களில் பலவிதமாகப் பொருள் தெரிகிறது, புராணம், வேதம், வேதாந்தம், ஸாங்க்யம்' யோகம் என்ன ஐந்து சாஸ்த்ரங்களும் இதன் எதிரில் இரவாகின்றன. இதுவே பகலாய் விளங்குகின்றது என்று பொருள் கொள்ளலாம். பகலில் வஸ்துக்களைக் காண்பது போலாகும், பாஞ்சராத்ர மூலமாகக் காண்பது. இந்த சாஸ்த்ரம் பஞ்சாயுதங்களின் அம்சமான ஔபகாயனர். சாண்டில்யர், பாரத்வாஜர், கௌசிகர், மௌஞ்யாயனர் ஆகிய ஐந்து ரிஷிகளுக்கு ஐந்து தினங்களில் ஸ்ரீவாஸுதேவனால் உபதேசிக்கப்பட்டது.

ஆகமம் பரதம் சில்பம் வைத்யம்
ஜ்யோதிஷமேவ ச ।
பஞ்சசாஸ்த்ராணி ஸம்யோகாத்
பாஞ்சராத்ர மிதி ஸ்ம்ருதம் ||

ஆகமம், பரதம், சில்பம், வைத்யம், ஜ்யோதிஷம் இந்த ஐந்து சாஸ்த்ரங்களும் பாஞ்சராத்ரத்தில் முக்கியமான பாகம் வகிப்பதாகத் தெரிகிறது.

உலகத்திலுள்ளவர்கள் நற்கதி பெற பகவானின் திருவுள்ளப்படி நான்மறைகள் தோன்றின. அதனால் பயன் பெற்றவர்கள் சிலரே. எல்லோரையும் உய்விக்க வேண்டுமென்ற உறுதியுள்ளவன் ஆனதால் அவர்கள் வாழுமிடத்தில் தான் அர்ச்சாவதாரம் என்று விக்ரஹங்களின் வடிவில் அவர்களது விருப்பத்திற்குத் தக அமைத்து அவர்கள் விக்ரஹ வழிபாட்டிற்கு ஆகமங்களைப் படைத்தருளினான். இதை சௌனக பகவான்

ஸுரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ ;
ப்ரஸந்நவதநேக்ஷணம் ।
க்ருத்வா ஆத்மந: ப்ரீதிகரீம்
ஸுவர்ண.ரஜதாதிபி : ||
தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத்தாம்
விசிந்தயேத் ।
விசத்யபாஸ்ததோஷஸ்து
தாமேவ ப்ரஸ்மருபிணீம் ||

என்று அருளியிருக்கிறார். அவ்வாறான ஆகமங்கள் பலவற்றில் வைணவ ஆகமங்கள் வைகானஸம், பாஞ்சராத்ரம் என்ற இரண்டும் முக்கியமானவை. நமக்கு 108 திவ்யதேசங்கள் அமைந்ததுபோல். பாஞ்சராத்ர ஆகமமும் 108 ஸம்ஹிதைகளைக் கொண்டது. நம் திவ்யதேசங்களில் முக்யமானவை நான்கு.

''ஸ்ரீரங்க மங்களநிதிம் கருணா
நிவாஸம்.........யதுசைல தீபம்.''

ஆக ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சி, திருநாராயணபுரம் இந்த நான்கில் திருவேங்கடமுடையான் வைகானஸ ஆகமத்தினால் திருவாராதனம் கண்டருளுகிறார். மற்ற மூன்று திவ்ய தேசங்களும் முக்யாதிகாரிகளான சுக்ல யஜுர் வேத,

srivatsam

acharya.org

காத்யாயன ஸூத்ர, கண்வ சாக அர்ச்சகர்களால் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமப்படி நடைபெறுகிறது. பாஞ்சராத்ர ஆகம ஸம்ஹிதைகளுக்குள் "ரத்னத்ரயம்" என்று சொல்லப்படுகிற 'சாத்வத', 'பௌஷ்கர, ஜயாக்ய ஸம்ஹிதைகளால் திருநாராயணபுரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் ஸந்நிதிகளில் திருவாராதனம் நடப்பதாக ஈச்வர ஸம்ஹிதையில் காணப்படுகிறது. இவை மூன்றும் மூலவேதங்கள்: இவைகளுக்கு விவரணங்களான ஈச்வர பாரமேச்வர, பாத்ம ஸம்ஹிதைகள்தான் தற்காலம் நடைமுறையில் அனுசரிக்கப்படுகின்றன. அவற்றுள் பாத்ம ஸம்ஹிதையில் ஞானம், யோகம், க்ரியை, சர்யை என்ற நான்கு பிரிவுகள் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன,

க்ரியாபாதமும், சர்யாபாதமும் பாஞ்சராத்ரத்திற்கு அஸாதாரணச் சிறப்புமாகும் சர்யா பாதத்தில் திருவாராதனம், நித்யோத்ஸவம், மாஸோத்ஸவாதிகள், ப்ராயச்சித்தாதிகள் எல்லாம் கூறப்பட்டிருக்கின்றன.

அர்ச்சாமூர்த்திகளிலேயே கலியில் மனிதர்கள் எம்பெருமானை மனத்திற்கொள்ள முடியாது.

இந்த பாஞ்சராத்ரத்திற்கு ஸ்ரீ ஆளவந்தார் தமது ஆகமப்ராமாண்ய க்ரந்தத்திலும், ஸ்ரீ பாஷ்யகார் ஸ்ரீ பாஷ்யத்திலும். ஸ்ரீ தேசிகன் தமது பாஞ்சராத்ர ரக்ஷை முதலான க்ரந்தத்திலும் வேதத்திற்குச் சமமாக ப்ரமாணத்தை ஸாதித்திருக்கிறார்கள். ஸ்ரீ தேசிகன் பகவானைக் குறித்து 'சரணாகதி தீபிகை' என்ற ஸ்தோத்திரத்தில்.

த்வாம் பாஞ்சராத்ரிக நயேந ப்ருதக்
விதேந
வைகாநஸேச்சபதா நியதாதிகார:।
ஸம்ஜ்ஞா விசேஷ நியமேந ஸமர்ச்சயந்த
ப்ரீத்யா நயந்தி பலவந்தி திநாநி
தந்யா :॥

என்று வைகானஸர்களும், பாஞ்சராத்ரிகர்களும் உன்னைத் திருவாராதனம் செய்து ஆனந்தமாகக் காலத்தைக் கழிக்கிறார்கள் என்று ஸாதித்திருக்கிறார்.

திவ்ய தேசங்களுக்குள் ஸ்வயம் வ்யக்தம், திவ்யம், ஸைத்தம், ஆர்ஷம், மானுஷம் என்று வகைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதில் நம் ஸம்பிரதாயத்தில் பெருமாள்கோயில் என்னும் காஞ்சி க்ஷேத்ரம் தேவாதிராஜன் ப்ரம்மா செய்த வேள்வியில் அவதரித்ததனால் 'ஸ்வயம் வ்யக்தம்' என்று சொல்லப்படுகிறது.

ப்ரம்மா ஜகத்ச்ருஷ்டி செய்துவிட்டு மன வ்யாகூலத்துடன் இருந்து பிறகு மன நிம்மதிக்காகப் பகவானை ஸாக்ஷாத்காரம் பண்ணவேண்டுமென்று கங்கா மத்யத்தில் நின்று தபஸ் செய்தார். அப்பொழுது ஆகாசவாணி உண்டாகி 'ஹே ப்ரம்மாவே! நீர் ஆயிரம் அச்வமேதங்களை அனுஷ்டித்தால்தான் மன நிம்மதியாகிப் பகவானைக் காணப்பெறுவீர். அப்படி முடியாவிட்டால் ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திற்குச் சென்று ஒரு அச்வமேத யாகம் செய்தால் அது ஆயிரம் அச்வமேத யாக பலன் கொடுக்கும். (ஏகஸ் தத்ர க்ருதோதரம்: வர்த தேது ஸஹஸ்ரச:) என்று சொல்லிற்று' இதைக் கேட்டுப் பரமானந்தம் அடைந்த ப்ரம்மா காஞ்சிக்கு வந்து விச்வகர்மாவை அழைத்து ஹஸ்திகிரியை உத்தரவேதிகையாக்கி இந்த உத்தரவேதிகையில் அச்வமேத யாகம் செய்தார். அப்போது

சைத்ரே மாஸே ஶிதே பக்ஷே சதுர்தச்
யாம் திதௌ முநே।
சோபநே ஹஸ்த நக்ஷத்ரே ரவிவார
ஸமந்விதே॥
வபாஹோமே ப்ரவ்ருத்தே து ப்ராதஸ்
ஸவந காலிகே।
தாது ருத்தர வேத்யந்த: ப்ராதுராஸீத்
ஜநார்தந :॥

srivatsam
acharya.org

என்கிறபடி சித்திரை மாதத்தில் ஹஸ்த நக்ஷத்திரத்தில் தேவாதிராஜன் திருவவதாரம் செய்தருளி ப்ரம்மாவைப் பார்த்து என்ன வரம் வேண்டும் என்று கேட்க, ப்ரம்மாவும் அடியேனுக்கு ஸேவை ஸாதித்தபடி நான்கு யுகங்களிலும் எழுந்தருளியிருந்து எல்லாருக்கும் ஸேவை ஸாதித்து அவர்களுடைய அபீஷ்டங்களைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று ப்ரார்த்தித்தார். தேவாதி ராஜனும்

வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ்ஸ்வயம் |
வரத : ஸர்வபூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே ||

என்று எழுந்தருளியிருக்கிறார். ஆழ்வார்களில் பூதத்தாழ்வார், நம்மாழ்வார், திருமங்கை மன்னன் ஆக மூன்று பேரும் பாடல் அருளியிருக்கிறார்கள். ஆளவந்தார், பாஷ்யகாரரைக் கடாக்ஷித்து அவரும் அவருடைய தர்சனமும் விளங்கவேண்டும் என்று தேவாதிராஜனிடத்தில் "யஸ்ய ப்ரஸாத கலயாபதிர: ச்ருணோதி, பங்கு: ப்ரதாவதி ஜவேந ச வக்திமூக: அந்த: ப்ரபச்யதி ஸுதம்லபதே ச வந்த்யாதம் தேவமேவ வரதம் சரணம் கதோஸ்மி" என்று ப்ரபத்தி செய்தார். ஸ்ரீராமாநுஜரும் சாலைக் கிணற்றிலிருந்து திருவாராதனத்திற்குத் திருமஞ்சனம் ப்ரதி தினம் கொண்டு ஸமர்ப்பித்தார். அமுதனார் ஸ்ரீபாஷ்யகாரரை "தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் பூண்டவன்பாளன்" என்று ஸாதித்திருக்கிறார். திருக்கச்சிநம்பிகள் "தேவராஜாஷ்டகம்" ஸாதித்திருக்கிறார். கூரத்தாழ்வான் 'வரதராஜஸ்தவம்' அருளியிருக்கிறார். ஸ்ரீ தேசிகன் 'வரதராஜ பஞ்சாசத்' அருளியிருக்கிறார். ஸ்ரீ மணவாள மாமுனிகள் 'தேவராஜ மங்களம்' ஸாதித்திருக்கிறார். அதில் முக்கியமானது "ஸ்ரீகாஞ்சீ பூர்ண மிச்ரேண, ப்ரீத்யா ஸர்வாபி பாஷிணே, அதீ தார்ச்சா வ்யவஸ்தாய ஹ்ஸ்த்யத்ரீசாய மங்களம்'[2] அதாவது தேப்பெருமாள் அர்ச்சா சமாதியைக் கடந்து திருக்கச்சிநம்பிகளுடன் ராமானுஜருக்காக ஆறு வார்த்தை ஸாதித்தாரென்பது. ஆறு வார்த்தைகளாவன: 1. அஹமேவ பரம் தத்வம், 2. தர்சனம் பேதயேவச, 3. மோக்ஷோபாய: ப்ரபத்திஸ்யாத், 4. பூர்ணு சார்யம் ஸமாஸ்ரய: 5. தேஹாவஸாநே முக்திஸ்யாத், 6. அந்திம ஸ்ம்ருதி வர்ஜனம் என்பன.

மேலும் இந்தத் திவ்ய தேசத்தில் கருடோத்ஸவம் மிக முக்கியமானது. மூன்றும் திருநாள் காலையில் விசேஷமாக கோபுர வாயிலில் ஸேவை ஸாதிப்பதைப் பற்றி ஸ்ரீதொட்டையாச்சார் என்ற ஆசார்ய ஸார்வபௌமர் ச்லோகங்கள் அருளிச்செய்திருக்கிறார். இங்கு ப்ரம்மோத்ஸவம், ப்ரம்மாவே நடத்தினதால் "ப்ரம்மோத்ஸவம்" என்ற பெயர் மிகப் பொருத்தம்.

acharya.org

யதீந்த்ர ப்ரவணரும் பொன்னடிக்கால் ஜீயரும்

(ஸ்ரீ உ. வே. உபந்யாஸ ரத்நாகர வானமாமலை, திருமலை அனந்தாண்பிள்ளை சடகோபாசாரியர்)

எம்பெருமானாருடைய அபராவதாரமான மணவாள மாமுனிகளின் சிஷ்யர்களுள் முதல்வர் வானமாமலை பொன்னடிக்கால் ஜீயர் என்ற ஒன்றான ராமானுஜ ஜீயர் ஸ்வாமி. மணவாள மாமுனிகளுக்கு எம்பெருமானாரிடம் ஈடுபாடு அதிகம். ஆதலால் அவரை யதீந்திர ப்ரவணர் என்று யாவரும் பாராட்டினர், வானமாமலை ஜீயருக்கு மணவாள மாமுனிகளிடம் அவ்வளவு ப்ராவண்யம் உண்டு. இவர் ஸ்ரீ மணவாள மாமுனிகளை விட்டுப் பிரிவதே இல்லை. இவர் மணவாள மாமுனிகளுக்கு, "நிழலும் அடிதாறும்" ஆனார். மாமுனிகளும் இவரைப்போல் ஆதரித்தார். தம்முடைய சிஷ்யர்களிடம் "நம்மைப் போல இவரையும் நீங்கள் பாராட்டுவீர்" என்று நியமித்தார். மாமுனிகளது பெருமையைப் பலவாறாகக் கேட்ட கோயில் அண்ணன் தமது பரிவாரங்களுடன் மாமுனிகளை ஆச்ரயிக்க வந்தார்.

மாமுனிகள் கோயில் அண்ணனைப் புன்முறுவலோடு ஏற்றுப் பல விஷயங்கள் உபதேசித்து வேண்டியனவெல்லாம் செய்தபிறகு, பக்கத்தில் உள்ளவர்களைக் காட்டி, ஆட்கொள்ள வேண்டும் என்று அண்ணன் விண்ணப்பிக்க, உடனே மாமுனிகள் தமது ஆசனத்திலிருந்து இறங்கி, தமக்கு உண்டான ஏற்றம் எல்லாம் இவரிடத்திலேயே பூர்த்தி என்று வானமாமலை ஜீயரைக் காட்டி, "இவரை ஆச்ரயிங்கள்" என்று நியமித்துப் பொன்னடிக் கால் ஜீயரே! இந்த ஆனத்திலே அமர்ந்து இவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும்" என்று கூற, அவர் மிகவும் தயங்க, நம்முடைய கட்டளை, உடனே செய்யும் என்று கட்டளையிட்டார். உடனே வானமாமலை ஜீயர் தமது ஆசனத்தில் அமர்ந்து மற்றவர்களுக்குத் திருவிலச்சினை ப்ரஸாதித்து மந்திரங்களை உபதேசித்து தாஸ நாமங்களை ப்ரஸாதித்தருளினார்.

இவ்வண்ணமே அரங்கன் மாமுனிகளைத் திருவுள்ளத்திற்கொண்டு, தன்னிடம் "இவ்வாறான ஆசார்யன் உலகத்திலேயே அரிது" என்று நம்பிள்ளையிடத்திலே கேட்க முடியாத ஈட்டை இவரிடத்திலேதான் கேட்கவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டு 'இவருக்கு' ஸ்ரீ சைலேச தயாபாத்ரம்' என்ற தனியனை வெளியிட்டருளினான். ஒருநாள் மாமுனிகளுடன் அவரது அந்தரங்கரான வானமாமலை ஜீயரை அருள்பாடிட்டு நவ பேரனை அரங்க நகரப்பனைக் கையிலே கொடுத்தான். ராமபிரான் விபீஷணனுக்கு அரங்களைக் கொடுத்தது போன்றது இதுவும்.

ஜியர் ஸ்வாமி வானமாமலைக்கு எழுந்தருளி வானமாமலைப் பெருமாளையும், தெய்வநாயகனையும் மங்களாசாசனம் செய்தருளி, சந்நிதியின் முன்பாக ஒரு மடத்தை ஸ்தாபித்து அரங்கநகரப்பனை எழுந்தருளச்செய்து காலக்ஷேபங்களை அருளிச்செய்துகொண்டு எழுந்தருளி வந்தார்.

திருமலையில் கலாபத்தினல் வலசப்பட்டிருக்கும் ஸ்ரீவரமங்கைத்தாயார் ஒரு பெண்ணாகவந்து இவர் கனவிலே, "நான் தெய்வ நாயகனைவிட்டுப் பிரிந்திருக்கிறேன் என்னைக்கொண்டு வந்து இங்கே தெய்வ நாயகனுடன் சேர்த்து வைப்பீர்" என்று அருளிமறைந்தாள். உடனே

acharya.org

ஜீயர் திருக்கண் மலர்ந்து அருகிலே யிருப்பவர்களை எழுப்பிக் கனவைச் சொல்லி, உடனேயே திருமலைக்கு யாத்திரை எழுந்தருளினார். திருமலை அடைந்து திருவேங்கடமுடையானை மங்களாசாஸனம் செய்து கோயில் நிர்வாகத்தினரிடம் இக்கனவைச் சொல்லி, ஸ்ரீவரமங்கைத் தாயாரை எழுந்தருளப் பண்ணித்தர வேண்டும் என்று ஜீயர் ஸாதிக்க அவர்களும் இதேபோல் இதே கனவைச் சொன்னார்கள். நாச்சியார் என்னுடைய தகப்பனார் வருகிறார். அவரிடத்தில் என்னை அனுப்பிவையுங்கள் என்று சொல்ல இதை ஜீயரிடத்தில் அதிகாரிகள் சொன்னார்கள். மனமுகந்து விக்ரஹத்தை ஜீயரிடத்தில் கொடுக்க, திருமலை அனந்தாழ்வான் வம்சத்து ஒரு ஸ்ரீவைஷ்ணவருடன் வனமாமலைக்கு எழுந்தருளினார். வானமாமலையில் ஸ்ரீவரமங்கைத் தாயாருக்கும் தெய்வ நாயகனுக்கும் சிறப்புடன் திருக்கல்யாணம் செய்துவித்தார், இதன் நினைவாகப் பெருமாளும் ஸ்ரீவரமங்கைத் தாயாரும் மூன்று நாள் மடத்துக்கு எழுந்தருளுகிறார். ஒரு தகப்பன் தனது மகளையும் மருமகனையும் தன் வீட்டிற்கு அழைப்பது போல் ஜீயர் ஸ்வாமி தமது சிஷ்யவர்க்கங்களுடன் எதிர்கொண்டு புதிய வஸ்திரங்கள் வழங்கி, குத்துவிளக்குகள் ஏற்றி வைத்து, பூர்ணகும்பத்துடன் வரவேற்றுப் பிறகு திருப்பி அனுப்பும்பொழுது திருப்பணியாரங்களுடன் கௌரவிப்பது இன்றும் கண்ணுக்கு அரியதோர் விருந்தாகும்.

வானமாமலைப் பெருமாள் சந்நிதியில் வானமாமலை ஜீயர் ஸ்வாமி, அழகிய மணவாள பட்டர் ஸ்ரீரங்காசாரியர் இன்றும் கோஷ்டியை நிர்வகித்து வருகிறார்கள். (நாலாயிர) அருளிச்செயல் பங்குனி உற்சவம், சித்திரை உற்சவம், அத்யயன உற்சவம், ஸ்ரீ உடையவர், மணவாள மாமுனிகள் உற்சவங்களில் சேவிக்கப்படுகின்றன. அந்த அந்த ஆழ்வார் ஆசாரியர்கள் திருநக்ஷத்திரங்களில் அவரவருடைய திவ்யப் பிரபந்தம் சேவிக்கப் படுகின்றது. உபயவேதாந்த காலக்ஷேபமும் நன்கு நிகழ்கின்றது.

இந்த ஸந்நிதி எட்டு ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரங்களுள் ஒன்று, இன்றும் இந்த எம்பெருமானுக்கு எண்ணெய்க்காப்பு பிரதிதினமும் நடக்கிறது. ஒரு கோட்டை எண்ணெய்க்காப்பு உற்சவம் வருஷந்தோறும் நடக்கின்றது. அந்த எண்ணெய் மஹா ஔஷதம். இதை யாவரும் உபயோகித்து வருகிறார்கள்.

srivaisam

---

acharya.org

மகரிஷிகள் அளித்த மேன்மை

ஸ்ரீ உ. வே. வித்வான் நியாயசிரோமணி,

[சொல்வேந்தர் பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார்]

மகரிஷிகளும் பாரதநாடும் :

பாரதநாடு புண்ணிய பூமி. இதில் நாம் வாழ்கிறோம். உலகைக் காக்கும் பரம புருஷன் ஸ்ரீமந்நாராயணன்; அவன் சொன்ன சொல் தவறாதவன்; 'ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காகவும், துஷ்டர்களை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன்' என்று கூறினான். அதற்கு ஏற்றவாறு பல அவதாரங்களை மேற்கொண்டு பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ரக்ஷித்ததும் பாரத நாட்டில்தான். பல மகரிஷிகள் இந்நாட்டில் வாழ்ந்தார்கள்; இப்போதும் அமைதி நிறைந்த மலைச்சாரல்களில் வாழ்வதாகவும் கூறுகிறார்கள். அவர்கள் உலகினுக்கு நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். மறைகளைக் காப்பாற்றி வந்தனர்; மறையின் பொருள்களை விளக்கினர். நாட்டு நலனுக்காகப் பல வேள்விகளைச் செய்தனர்; புராணங்களையும் இதிஹாசங்களையும் இயற்றிப் பக்தியை வளர்த்தனர். நல்ல அறிவுரைகளைக் கூறி அரசாட்சி நன்கு நடைபெற அரசர்களுக்கு உதவியுள்ளனர்.

ராம பக்தரான வால்மீகி மஹரிஷி இதிஹாஸ சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தை இயற்றியுள்ளார். வசிஷ்ட மகரிஷி இக்ஷ்வாகு வம்சத்திற்கே குல குருவாக விளங்கி அவ்வமிசத்து அரசர்களுக்குப் பல வகைகளில் உதவி செய்துள்ளார். இவரது அறிவுரையைப்பெற்ற அரசர்கள் நேர்மையாக ஆட்சி புரிந்தார்கள். வசிஷ்டர், வாமதேவர், ஸுயக்ஞர், ஜாபாலி, காச்யபர், கௌதமர், மார்க்கண்டேயர், காத்யாயனர், விசயர் ஆகிய ஒன்பது மகரிஷிகளும் நவமணிகளாக இருந்துகொண்டு தசரதரை ரக்ஷிக்கும் வலிமையான அணியாக விளங்கினார்கள். விசுவாமித்ர மகரிஷி இராமனுக்கு எல்லா அஸ்திரங்களையும் கற்றுக்கொடுத்தார். அகஸ்தியர் பரத்வாஜர் அத்ரி போன்ற மகரிஷிகள் நாட்டின் க்ஷேமத்தைப் பாரித்து யாக யக்ஞாதிகளைச் செய்துகொண்டு தவம் புரிந்து கடமை தவறாமல் வாழ்ந்தார்கள். பரசுராமனே ஒரு மகரிஷிதான். பகவானே ஒரு மகரிஷியாக (பரசுராமராக) அவதாரத்தை மேற்கொண்டானே! மகரிஷிகள் தவ வலிமையால் ஜீவாத்ம பரமாத்ம பேதத்தை நன்கு அறிந்தவர்கள். எம்பெருமானை எப்போதும் ஆராதிப்பவர்கள்!

எம்பெருமானும் மகரிஷிகளுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்றே விரும்பினான். இராமபிரான் வனத்தில் வாசம் செய்த காலத்தே மகரிஷிகளின் ஆச்ரமங்களில் தங்கி அவர்களுக்குப் பணிவிடை செய்து மகிழ்வித்தும் மகிழ்ந்தும் இருக்கிறான். அவர்களுடைய நன்மைக்காக அரும்பாடுபட்டிருக்கிறான். பகவான் வியாஸ மகரிஷியாக அவதரித்து 'ஐந்தாம் வேதம்' என்று புகழும்படியான மாபாரதத்தை இயற்றி இருக்கிறார்.

व्यासाय विष्णुरूपाय व्यासरूपाय विष्णवे ।
नमो वै ब्रह्मनिधये वाशिष्ठाय नमोनमः ॥

acharya.org

என்பது வியாசரின் பெருமையைப் பறை சாற்றுகிறது. பிறந்த நாளிலிருந்தே ப்ரஹ்மஞானத்தைப் பெற்றுப் ப்ரம்ம வித்தாக வாழ்ந்த சுகமுனிவர் தெள்ளமுதம் போன்ற பகவானின் சரித்திரங்களை 'ஸ்ரீமத் பாகவதம்' என்ற நூலாக (கிரந்தமாக) இயற்றித் தந்துள்ளார். வேறு நாடுகளில் ரிஷிகள் வாழ்ந்ததாகவோ, அவர்களால் அந்நாடுகள் நன்மை பெற்றனவாகவோ அறிய முடியவில்லை.

மகரிஷிகளும் ஸ்ரீவைஷ்ணவமும்:

ஸ்ரீமந்நாராயணனே மகரிஷி. எம்பெருமான் நர நாராயணர்களாக அவதரித்தான். நாராயண மகரிஷியாக இருந்து கொண்டு ரஹஸ்யத்ரயங்களில் முதலாவதான வளம் மிக்க திருமந்த்ரத்தை நரனுக்குப் பத்ரிகாச்ரமத்தில் வெளியிட்டார். पुराणोमुनिः என்றுன் ஒரு கவி. பராசரர், வியாஸர். சுகர் ஆகிய மூன்று மகரிஷிகளும் ஒரே குடும்பத்தின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். பராசர மகரிஷி ஸ்ரீமந்நாராயணனின் பரத்வத்தைப் பரக்கக்கூறும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தை அருளியுள்ளார். இது புராணங்களிலேயே மிகவும் சிறந்தது; ஸாத்விக புராணம் ஆளவந்தார் என்னும் மஹாசாரியர் இப்புராணத்தைப் 'புராண ரத்னம்' என்று பாராட்டினுர். பராசரமகரிஷியின் குமாரர் வியாசர். இவரே 'பிரஹ்ம ஸூத்ரம்' என்ற கிரந்தத்தை அருளிச் செய்தார். நமது ஆசார்ய ஸார்வ பௌமரான எம்பெருமானுர் (ராமாநுஜர்) இந்த ஸூத்ரங்களுக்கு (விசிஷ்டாத்வைத பாஷ்யம்) ஸ்ரீபாஷ்யம் அருளியிருக்கிறுர். விசாசரின் குமாரர் சுகமுனிவர் அருளிய பாகவதம் எம்பெருமானின் குணரத்ன கோசம். இவர்களால் வைணவம் ரக்ஷிக்கப்பட்டது. நம்மாழ்வாரையே ரிஷியாகக் கூறுவர். கிருஷ்ண த்ருஷ்ணு தத்வமாக (கிருஷ்ணனின் ஆசையே வடிவெடுத்தவராக) அவதரித்தவர் நம்மாழ்வார். இவர் திராவிடவேதமாகிற திருவாய் மொழியை அருளிச்செய்தார்.

ऋषिं जुषामहे कृष्णतृष्णातत्त्वमिवोदितम् ।।
सहस्रशारवां योऽद्राक्षीत् द्राविडीं ब्रह्मसंहिताम्

என்று பெரியோர் கூறுவர்.

மகரிஷிகளை மாமுனிவர்கள் என்றும் கூறலாம். மாமுனிவர் என்ற திருநாமத்தைப் பெற்றவர்களும் யதிபுங்கவர்களுமான ஆசார்யர்கள் இருவர் உபய வேதாந்தங்களையும் ஸ்ரீவைஷ்ணவத்துவத்தையும் ரக்ஷித்தருளினர். ஒருவர் எதிராச மாமுனிவர்; மற்றொருவர் அவரது அடுத்த அவதார புருஷரான மணவாள மாமுனிகள்; ஒருவர் ராமாநுசமுனி; இன்னொருவர் வரவரமுனி.

ரிஷிகளும் அர்ச்சாவதாரமும்:

எம்பெருமானின் (பகவானின்) விபவாவதாரங்களில் (குறிப்பாக, ராமகிருஷ்ணுவதார காலங்களில்) ரிஷிகள் பலர் வாழ்ந்தார்கள்; ராமாவதார காலத்தில் மிகவும் அதிகம். பெருக்காறுபோலே மிகவும் வேகமாக ஓடிச்சென்ற விபவாவதார காலத்திற்குப் பிறகு, அதிலே தேங்கின மடுக்கள் போல் இருக்கும் (அர்ச்சாவதார எம்பெருமான்களை) அர்ச்சாவதாரத்தை அனுபவிக்கும் பாக்கியசாலிகளாக நாம் இருக்கிறோம். நம் போல்வார் எளிதில் கிட்டிவணங்கும்படியாகப் பின்னுனர் வணங்கும் சோதியாய் எம்பெருமான் ஆங்காங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறுன். ஆழ்வார்களும் ஆசாரியர்களும் இந்த எம்பெருமான்களையே நாம் அனுபவிக்கும் நிதிகளாக நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறுர்கள். அவர்கள் மங்களாசாஸனம் செய்யும்போது பரவ்யூஹவிபவ (அந்தர்யாமி) நிலைகளையெல்லாம் கலந்தே அனுபவிக்கிறுர்கள். 'எய்துபவர்க்கு இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிது' என்றுர்

srivatsam

acharya.org

நம்மாழ்வார். ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பெற்று எழுந்தருளி யிருக்கும் நிலங்களையே திவ்ய தேசங்கள் என்கிறோம்.

உலகில் பக்தர்கள் தீர்த்த யாத்திரை, க்ஷேத்ர யாத்திரை என்று யாத்திரை களாகப் பல இடங்களுக்குச் செல்லுகிறார் கள். இப்போது திவ்யதேச யாத்திரைகள் நடப்பதையும் காண்கிறோம். இவ்வாறு ஒவ்வோரிடத்திற்குஞ் சென்று ஆங்காங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை ஸேவிக்கிறார்கள். அந்தந்த எம்பெருமா னின் பெருமைகளில் ஓரளவாவது அறிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படு கிறார்கள். அவ்வாறு அறிய முற்படும் போது ஒவ்வொரு எம்பெருமானும் ஒவ் வொரு மகரிஷிக்காக, (அவரது வேண்டு கோளுக்கு இணங்கி) அவ்வூரில் வந்து உவந்து வாழ்வதாகவே தெரியவருகிறது. க்ஷேத்திரங்களின் பெருமைகளைக் கூறு கிறது. பிரஹ்மாண்ட புராணம். அதை ஆதாரமாகக் கொண்டே ஸ்தலபுராணங் களும் எழுந்துள்ளன. புராணப் பிரசித்த மாக இருந்தால் அந்தந்த க்ஷேத்திரத்திற் குத் தனிப்பெருமை. ஆழ்வார்களின் மங்களாசாஸனத்தினால் அந்த இடங்கள் திவ்யதேசம் என்ற சிறப்பை எய்து கின்றன.

பிருகு மஹரிஷியின் ஏற்றம் :

எல்லா ரிஷிகளுமே தவம் செய்கிறவர் கள்தான். ஆயினும் தபோபலம் (தவ வலிமை) மிக்கவர்கள் மஹரிஷிகள். அவர் களுள் ஏழு ரிஷிகளைச் சேர்த்து 'ஸப்தரிஷி கள்' என்று பெரியோர்கள் கூறுகின்றனர். அத்ரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌத மர், காச்யபர், ஆங்கீரஸர் ஆகிய எழுவரும் 'ஸப்தரிஷிகள்'. நமது கோத்திரங்களில் இடம் பெற்றவர்கள் ரிஷிகள். சிலர் மூன்று ரிஷிகளின் ப்ரவரத்தைச் சேர்ந் தவர்களாகவும், மற்றும் சிலர் ஐந்து ரிஷி களின் ப்ரவரத்தைச் சேர்ந்தவர்களாகவும், மற்றும் சிலர் ஏழு ரிஷிகளின் ப்ரவரத் தைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பதைக் காண்கிறோம். சோளங்கிபுரத்தில் மலை மேல் எழுந்தருளியிருக்கும் அழகிய சிங்கரை 'ஸப்தரிஷிகள்' தினந்தோறும் ஆராதிக்கின்றனர் என்று கூறுவதுண்டு. அத்ரி முதலான ஸப்தரிஷிகள் காலையிலும் மாலையிலும் கைகளில் உபஹாரமாக 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம் (திருத் துழாய், மலர், பழம், தீர்த்தம்) ஆகிய வற்றை எடுத்துக்கொண்டு திருவேங்கட முடையானை ஸேவிக்க வந்து காத்திருப் பதாக 'ஸுப்ரபாதம்' அறிவிக்கிறது.

இவர்களுள் பிருகு மகரிஷிக்குத் தனிப் பெருமை. மந்வந்தரங்கள் பதினான்கு. இப்போது நடந்து வருவது ஏழாம் மந்வந்தரம். 1. ஸ்வாயம்பூ மந்வந்தரம். 2. ஸ்வாரோசிஷ மந்வந்தரம், 3. ஔத்தம மந்வந்தரம், 4. தாமஸ மந்வந்தரம், 5. ரைவத மந்வந்தரம். 6. சாக்ஷுஷ மந்வந் தரம், 7. வைவஸ்வத மந்வந்தரம், இப் போது நடைபெறுவது வைவஸ்வத மந்வந்தரம். ஸ்வாயம்பூ மந்வந்தரத்தில் மஹாலக்ஷ்மி ப்ருகு மகரிஷியின் புத்ரியாகத் தோன்றினாள். ஸ்வாரோசிஷத்தில் அக்னி யிலும், ஔத்தமத்தில் தீர்த்தத்திலும் (ஜலத்திலும்), தாமஸத்தில் பூமியிலிருந் தும், ரைவதத்தில் வில்வ மரத்திலும், சாக்ஷுஷத்தில் செந்தாமரைப் பூவிலும், வைவஸ்வதத்தில் (இந்த மந்வந்தரத்தில்) திருப்பாற்கடலிலும் மஹாலக்ஷ்மி தோன் றினாள்.

இவ்வாறு மஹாலக்ஷ்மி பிருகு புத்ரி யாகத் தோன்றியிருக்கிறாள்: அதனால் மஹாலக்ஷ்மிக்கு 'பார்க்கவி' என்று ஒரு திருநாமம். கிழமைகளுள் வெள்ளிக் கிழமையைப் பிருகு வாஸரம் என்கிறோம். இது மஹாலக்ஷ்மிக்கே உரிய கிழமை. பிருகுவின் புத்திரரான சுக்கிரனின் பெய ரால் வழங்கப்படும் இக்கிழமையில் ஸந்நிதிகளில் தாயாருக்குத் திருமஞ்

acharya.org

சனம், புறப்பாடு முதலியவை நடைபெறு பெறுகின்றன; விசேஷ அர்ச்சனைகளும் திருக்கல்யாணமும் வெள்ளிக்கிழமைகளில் நடக்கின்றன. பிருகு மஹரிஷியின் ஸம்பந்தம் ஒரு இடத்திற்கு இருக்குமாயின் அங்குப் பிராட்டியின் ப்ராதான்யத்தைக் காணலாம்.

திரு அல்லிக்கேணி:

திரு என்ற சொல்லை அடைமொழியாகக் கொள்ளாமல், திரு உகந்த அல்லிக்கேணி (மஹாலக்ஷ்மி உகந்து வாழும் அல்லிக்கேணி) என்று பொருள் கொள்வது மிகவும் சுவையுடையது. இந்தத் திவ்ய தேசத்தில் முதலில் வந்து தோன்றியவள் 'அல்லித்தாமரையாள்': திருவல்லிக்கேணிக்கு பிருந்தாவனம், பிருந்தாரண்யம், துளஸீவனம், கைரவிணி என்று பல பெயர்கள் இருப்பதை அறிகிறோம். புஷ்கரிணியின் பெயரையே இவ்வூருக்கும் ஏற்பட்டதாகக் கொள்ளலாம். இவ்வூரில் வட கிழக்கில் இந்திர தீர்த்தம், தெற்கில் ஸோம தீர்த்தம், தென் மேற்கில் மீன தீர்த்தம், வடமேற்கில் அக்னி தீர்த்தம், வடக்கில் விஷ்ணு தீர்த்தமும் இருப்பதாக இவ்வூர் ஸ்தலபுராணத்தைக் கொண்டு அறியலாம். இப்போது எல்லா தீர்த்தங்களும் சேர்ந்து 'கைரவிணீ' என்ற புஷ்கரிணியாக(குளகமாக) இருக்கிறது. இதன் கரையில் பிருகு மஹரிஷி தவம் செய்து வந்தார். இவருக்கு மிகவும் அழகிய ஆசிரமமும் அமைந்திருந்தது. பெரிய பிராட்டியார் (மஹாலக்ஷ்மி) ஒரு நாள் இவரது ஆசிரமத்திலுள்ள சந்தனமரத்தடியில் ஒரு குழந்தையாகத் தோன்றினாள். பிருகு மஹரிஷி அக்குழந்தையை எடுத்துவந்து **வேதவல்லி** என்று பெயரிட்டு வளர்த்தார். இவள் மஹரிஷியின் பாதுகாப்பில் நன்கு வளர்ந்து ஆசிரமலக்ஷ்மியாக விளங்கினாள். ஸ்ரீமந் நாராயணன் அரசகுமாரனாக ஆச்ரமத்திற்கு அருகில் வந்து வேதவல்லியைக் கடாக்ஷித்தார். அவளும் ராஜகுமாரனைப் பார்த்துவிட்டுப் பிருகு மஹரிஷியிடம் சென்று இவரே 'மந்நாதன்' (என் நாதன்) என்று கூறினாள். பிருகு மஹரிஷியும் மாசி மாத சுக்லபக்ஷ த்வாதசி நன்னாளில் தன் புத்திரியான வேதவல்லியை மந்நாதனுக்கு (ரங்கநாதருக்குக்) கன்னிகாதானம் செய்து விவாஹத்தை நடத்திவைத்தார். வேதவல்லித் தாயாரின் பிறந்தகம் திருவல்லிக்கேணி; மந்நாதனின் ச்வசுர கிருஹமும் (மாமனார் கிருஹமும்) இதுவே. தனக்கு வேதவல்லியைக் கொடுத்து உபகரித்த பிருகு மகரிஷியை எம்பெருமான் அனுக்ரஹித்து, அவரது பிரார்த்தனைக்கு இணங்கி வேதவல்லித் தாயாரோடு இங்கேயே எழுந்தருளியிருக்கிறார். பிருகு மகரிஷியைப்போல் அத்ரி, மரீசி, புலஹர். ஆத்ரேயர், ஸப்தரோமா, ஜாபாலி, விகடர், முத்கலர் முதலான மகரிஷிகளும் இங்குத் தவம் செய்திருக்கிறார்கள். வியாஸமகரிஷி கீதாசார்யனை பார்த்தஸாரதியின் அழகிய திவ்யமங்கள விக்ரஹத்தைச் செய்து ஆத்ரேயரிடம் கொடுத்தார். ஆத்ரேயர் பார்த்தஸாரதியைப் பிரதிஷ்டை செய்து ஆராதித்துப் பெறற்கரிய பெரும்பயனைப் பெற்றார். அத்ரி மகரிஷிக்காக ஸ்ரீயோக நரசிம்மர் (தெள்ளிய சிங்கப்பெருமாள்) ஸேவை ஸாதித்தார். மதுமான் என்ற மகரிஷிக்காகச் சக்ரவர்த்தித் திருமகனும், ஸப்தரோமா என்ற ரிஷிக்காகக் கஜேந்திரவரதனும் ஸேவை ஸாதித்தார்கள். இந்த ரிஷியின் பிரார்த்தனைக்கு ஏற்றவாறு எம்பெருமான் (மூலவர்) கருடாரூடனாக ஸேவை ஸாதிப்பதை இத்தலத்தில் ஸேவிக்கலாம்.

அளவற்ற ஆசை!

தன்னைச்சுற்றி(த் தன் பெருமைகளைக் கூறும்) ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழவேண்டும்; அவர்களைவிட்டுப் பிரியாமல் இருக்க

acharya.org

வேண்டும் என்பது பகவானின் ஆசை! ஸ்ரீவைஷ்ணவர்கள் நிறைந்த இடம் செல்வம் மல்குமிடமாக அவன் நினைக்கிறான். உலகுக்கு நன்மை ஏற்பட வேண்டும் என்று எப்போதும் நினைப்பவர்கள் ரிஷிகள். அவர்களைவிட்டுப் பிரியாமல் வாழ வேண்டும் என்றும் நினைக்கிறார். இவ்வூரில் ஸ்ரீ அழகிய சிங்கர் அத்ரி மஹரிஷிக்குக் கொடுத்த வரத்தை நினைக்கும்போது அவரது கருணை கண்முன் அலை வீசுகிறது. முனிச்ரேஷ்டரே! நாற்புறமும் துளஸீ வனம்; பல ரிஷிகள் தவம் செய்கிறார்கள். எனக்கு இந்த இடம் மகிழ்வளிக்கிறது. இவர்களை விட்டுப் பிரியாது இங்கேயே இருக்கப் போகிறேன். மக்கள் என்னை ஸேவித்து 'அறியாமை, சினம், துன்பம், பாவம் ஆகியவை நீங்கி எக்காலத்திலும் இன்பம் அடைவார்கள்' என்று பகவான் திருவாய்மலர்ந்தருளினான்.

இவ்வூரில் இருந்த தீர்த்தங்கள் ஐந்து; எம்பெருமானை ஸேவிக்க ஆசைப்பட்டவர்கள் ஐவர் (ஐந்து மகரிஷிகள்) மகரிஷிகளுக்கு ஸேவை ஸாதித்த எம்பெருமான்கள் ஐவர். இப்படி ஐந்து மைந்துமைந்துமாகச் சிறப்புற்றிருக்கும் இடம் திருவல்லிக்கேணி. மகரிஷிகளால் மேன்மைபெற்ற இத்தலத்தின் பெருமைகள் யாரால் அளவிட்டுச் சொல்ல இயலும். பகவானின் குணங்களைப்போல் இத்தலத்தின் சிறப்பும் மனோ வாக்காயங்களுக்கு எட்டாதவாறு எண்திசையும் பரந்து விளங்குகிறது.

srivatsam

acharya.org

வெளிநாடுகளில் வைணவம்

[Dr. K. V. ராமன்]

மிகத் தொன்மைக் காலந்தொட்டே இந்திய கலாசாரம் பல நாடுகளிலும் பரவி வந்துள்ளது. நமது சமயங்கள், மொழிகள், கட்டிடக் கலை, சிற்பக் கலை மற்றும் பல பண்பாட்டுக் கூறுகள் இவை இந்தோனேசியா, மலேயா, கம்போடியா, தாய்லாந்து, பர்மா போன்ற நாடுகளுக்குப் பரவி அங்கு ஒரு கலாசார எழுச்சியைத் தோற்றுவித்தன. அங்கு இந்து மதத்தின் பல கூறுகளும் பௌத்தமதமும் போட்டியின்றி ஒருமைப்பாட்டுடன் வளர்ந்துள்ள அற்புதத்தைக் காண்கிறோம். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வைஷ்ணவம் எவ்வாறு சிறப்புடன் நிலவியுள்ளது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

ஊர்ப் பெயர்கள்:

இந்தியப் பண்பாட்டின் பொக்கிஷங்களாகத் திகழும் இராமாயணமும், மகாபாரதமும் அநாதியாக ஆசிய நாடுகளுக்குப் பரவியிருந்தன. இத்தொடர்பினால் அங்கெல்லாம் பல ஊர்ப் பெயர்கள் நமது பழைய நகரங்களின் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. தாய்லாந்து நாட்டின் பழைய தலைநகரத்தின் பெயர் அயோத்யா ஆகும். அங்கு ஆண்டுவந்த அரசர்களும் ஒன்றும் ராமர், இரண்டாம் ராமர் என்றே பெயர் பூண்டனர். இப்பொழுதும் தாய்லாந்து மன்னரது பெயர் ஒன்பதாம் இராமர் ஆகும். தாய்லாந்து நாட்டின் மற்றொரு நகரத்தின் பெயர் லவபுரி (லோப்புரி) என்பதாகும். இதுபோல ஆரண்யபிரதேஷ், விஷ்ணுலோக், இந்திரலோக், புரிராம், பிரதோம் நகோண் (பிரதம நகரம்) என்ற பல இந்தியப் பெயர்களைக் காணலாம். தாய்லாந்தின் தலைநகரமான பாங்காக்கின் பழையபெயர் ரத்தினகோசம் ஆகும்.

இதுபோல மகாபாரதப் பெயருடன் தொடர்புள்ள சில நகரங்களும் உள்ளன. தாய்லாந்தின் பழம்பெரும் நகரின் பெயர் துவாராவதி (துவாரகை) ஆகும். அதுபோல மதுரா என்ற ஊரும் அங்கு உள்ளது.

கோயில்களும் சிற்பங்களும்:

உலகத்திலேயே மிகப் பெரிய விஷ்ணு கோயில் கம்போடியா தேசத்தில் உள்ளது. யசோவர்மன் என்ற அரசனால் கட்டப்பட்ட இக்கோயிலுக்கு அங்கோர்வாட் என்று பெயர். மிகப் பிரம்மாண்டமான இக்கோவிலில் பல பிராகாரங்களும் கோபுரங்களும் உள்ளன, ராமாயணம் மகாபாரதம், ஹரிவம்சம் போன்ற நூல்களிலுள்ள காட்சிகளை இங்கு ஆயிரக்கணக்கான சிற்பங்களின் மூலம் சித்திரித்திருக்கிறார்கள். குருக்ஷேத்திரத்தில் நடந்த பாரதப்போர் விரிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக்கடைவதை பிரம்மாண்டமான சிற்பமாக இங்கு வடித்துள்ளார்கள். இதைத்தவிர விஷ்ணுவிற்குப் பல சிறிய கோயில்களும் இருந்தன. அநந்த சாயி விஷ்ணு, கஜேந்திர வரதர் போன்ற சிற்பங்கள் அங்குக் கிடைத்துள்ளன. பர்மாவில், பாகன் என்ற ஊரில் ஒரு பழைய விஷ்ணு கோவிலில் முகுந்த மாலையிலிருந்து சில ச்லோகங்கள் கல்

srivatsam
acharya.org

வெட்டாகச் செதுக்கப்பட்டுள்ளன. இது ஒரு காலத்தில் மலைநாட்டைச் சார்ந்த ஒரு வியாபாரி இக்கோயிலுக்கு நன்கொடை அளித்துள்ள செய்தியைக் குறிப்பிடுகிறது.

இந்தோனேசியாவிலுள்ள ஜாவா தீவில் இந்து மதம் மிகவும் செல்வாக்குடன் இருந்தது. அங்கு ஆண்ட அரசர்கள் விஷ்ணுவின் அவதாரமாகவே கருதப்பட்டனர். விஷ்ணு பாதங்களைத் தாங்கிய சிற்பத்தில் அந்நாட்டு மன்னன் பூர்ணவர்மனின் கல்வெட்டு உள்ளது. அதில். அவன் திருவிக்கிரமனின் அவதாரம் என்றும், அவனது பாதங்களே இங்குச்செதுக்கப்பட்டுள்ளன என்றும் அக்கல்வெட்டு கூறுகிறது.

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் திருமாலின் ஊர்தியான கருடனுக்குத் தனி ஏற்றம் அளிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்தில் கருடன் முத்திரையிட்ட சின்னந்தான் அரசாங்கச் சின்னமாகும். எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் கருடனின் கம்பீரமான உருவம் வைக்கப்பட்டுள்ளது. அது மங்களச் சின்னமாகவும் கருதப்படுகிறது. இந்தோனேசியாவின் விமானப் பிரிவுக்கு கருடா ஏர்வேஸ் என்று பெயர்.

இதிகாசங்களின் செல்வாக்கு :

ராமாயணம், மகாபாரதமாகிய காவியங்கள் சம்ஸ்கிருத மொழியின் செல்வமாவன : இவை பரவாத நாடே ஆசியாவில் இல்லை என்றால் அது மிகையாகாது. யாவத்வீபம் என்னும் ஜாவாவில் பேசப்படும் கவி என்ற மொழி சம்ஸ்கிருதச் சொற்கள் அதிகமாகக் கலந்த ஒருவித மணிப்பிரவாள மொழியாக மலர்ந்துள்ளது. இம்மொழியில் எழுதப்பட்ட ராமாயணமும் மகாபாரதமும் இந்தோனிசியாவில் மிகப்பிரபலமாக வழங்கி வருகின்றன. அங்குள்ள பணதரன் என்னும் கோவிலில் ராமாயண சிற்பங்கள் உள்ளன. லாவோஸ் நாட்டில் பிரா அனிருத் என்னும் அரசன் கட்டிய கோவிலில் ராமாயண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. தாய்லாந்து தலைநகரமான பாங்காக்கிலுள்ள பெரிய அரண்மனையில்தான் உலகிலேயே நீண்ட அளவு ராமாயண ஓவிய வரிசைகள் உள்ளன. தாய்லாந்து, இந்தோனிசியா, பாலி போன்ற நாடுகளின் தேசிய நடனங்கள் பெரும்பாலும் ராமாயண காவியத்தை மையமாகக் கொண்டே இயங்குகின்றன. நமது நாட்டு உடைகளும், கிரீடம் போன்ற அணிகலன்களும் அணிந்து அழகாக அசைந்து கைமுத்திரைகளைக் காட்டி அபிநயம் செய்கிறார்கள். ராமாயணத்தில் வரும் பாத்திரங்களுக்குத் தக்கவாறு முகமூடிகள் அணிந்து நடனமாடுகிறார்கள். கம்போடியாவில் ராயல் ராமாயண என்னும் தேசிய நடன கேந்திரத்தில் ராமாயண நடனத்தில் பயிற்சி அளிக்கிறார்கள்.

அதுபோல பாலிநாட்டில் மகாபாரதம் போன்ற புராணங்களைப் பழைய பாலி மொழியில் எழுதி அவற்றைக் கோவில்களில் படிக்கின்றார்கள். தினமும் கம்போடியாவில் (பழைய காம்போஜ தேசம்) ஒரு கோவிலில் ராமாயணம், மகாபாரதம் பாராயணம் செய்வதற்காக ஸ்ரீ சோமசர்மா என்பவர் ஒரு கட்டளை ஏற்பாடு செய்த செய்தியை ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.

---

srivatsam
acharya.org

ஸ்ரீ. உ. வே. திருமலை அனந்தாண்பிள்ளை
ஸ்ரீனிவாஸராகவாசாரியர்



ஸ்ரீ. உ. வே. திருமழிசை வேங்கடாசாரியர்
(1969 முதல்)

srivatsam



ஸ்ரீ உ.. வே. T. S. ராஜகோபால ஐயங்கார்
1969 முதல். கவிரத்ந கண்டீரவ செஞ்சொற்கவி
அபிநவ பட்டர்பிரான் விருது பெற்றவர்.
ஆங்கிலம் கணிதம் வல்லுநர்.
திருக்கண்ணபுரம் ஸந்நிதியிலும் ஈடுபடுபவர்.

ஸ்ரீ. உ.. வே. K. V. பாஷ்யம் ஐயங்கார் (கூரம்)
(1964 முதல் 1974) மறுபடி 1983.
கூரம் ஆழ்வான் ஸந்நிதியிலும் ஈடுபடுபவர்

acharya.org

ஸ்ரீ. உ. வே. P. தெய்வநாயகம் ஐயங்கார்
(1983 முதல்) (அத்யாபகம், வேதபாராயணம்)

ஸ்ரீ. உ. வே. P. சுந்தரராஜ ஐயங்கார்
(1969—1974) மறுபடி 1983

srivatsam

ஸ்ரீ. உ. வே. M. சடகோபாசாரியர்
(1960—1974 மறுபடி 1983)

ஸ்ரீ. உ. வே. T. S. ராமானுஜம் ஐயங்கார்
1983 முதல்

acharya.org

ஸ்ரீ. உ. வே. வாத்தியார் V. நம்பி ஐயங்கார்
1983 வேதபாராயணம்.

ஸ்ரீ உ. வே. T. நாராயண ஐயங்கார் (சிரோன்மணி)
1983 முதல்

ஸ்ரீ உ. வே. அஷ்டகோத்ரம் நல்லான் சக்ரவர்த்தி பார்த்தஸாரதி ஐயங்கார் 1955. 1977 முதல் தொடக்கதாரராகவும், கார்யதரிசியாகவும் செயலாற்றுபவர். மூன்று தலைமுறையாய் ஸ்ரீ உடையவர் கைங்கர்யத்தில் சேவை செய்த மஹான்களின் மரபில் வந்தவர். இங்கு ஸந்நிதியில் கெருடவாகனத்திற்குத் தங்கமுலாம் பிரபையும், பஞ்ச பருவ கேடயமும் ஸமர்ப்பித்த குடும்பத்தைச் சேர்ந்தவர். கோஷ்டிக்கு அவ்வப்போது நேரும் இடையூறுகளை அமைதியாக எதிர்கொண்டு போராடி வென்ற சாத்வீக வீரர். 1982-இல் கோஷ்டியின் சிறப்பு விழாவைத் தனிப்பட நின்று திறம்பட நடத்தியவர். இவர் ஏற்பாடு செய்த ததீயாராதனை விசேடங்கள் மறக்க முடியாதவை. இந்தச் சிறப்பு விழா மலருக்கு அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டுவந்த சிரியவைணவ சிகாமணி. தேர்கடவிய பெருமான்மாட்டு ஆராத பக்தி பூண்டு தொண்டிற்கே கோலம் பூண்டு கோஷ்டிக்கு உயிர்நாடியாய் விளங்குவது மிகையாகாது.

acharya.org



ஸ்ரீ உ. வே. T. S. ராஜகோபால ஐயங்கார் ஸ்வாமி நூல் 'திருவல்லிக்கேணி பெருமான் பொன்னூசல்' வெளியீட்டு விழா, 1976 மாஜி நீதிபதி N. கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார்

srivatsam

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீரங்க நாராயண ஜீயர் ஸ்வாமிக்கு வரவேற்பு (1982)

acharya.org

திருவல்லிக்கேணி ஸ்ரீ உடையவர் கைங்கர்ய ஸபையின் [பிங்கள வருஷத்திய] மலர் வெளியீட்டு விழாவில் மேடையில் பிரமுகர்கள்

srivatsam

ஸ்ரீ உ. வே காஞ்சி P. B. அண்ணஸ்வாமி, முன்னால் ஆளுனர் பிரபுதாஸ பட்வாரி மாஜி நீதிபதி N. கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார்

acharya.org

உடையவர் கைங்கர்ய சபையில் காஞ்சி ஸ்ரீ P. B. A. ஸ்வாமி உபன்யஸிக்கிறார்

srivatsam

மேற்படி கூட்டத்தின் ஒரு பகுதி

acharya.org

முதல் பிரதியை காஞ்சி P. B. A. ஸ்வாமியிடமிருந்து ஆளுநர் பெருதல்

srivatsam

கனமிகு மாநில ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி

காஞ்சி ஸ்ரீ உ. வே. P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

acharya.org



கோஷ்டியில் 760-வது ஆண்டு விழாவில், கடைசிநாள் உபன்யாஸத்தில் காஞ்சி
ஸ்ரீ P. B. A. ஸ்வாமி உபன்யஸிக்கிறார்

srivatsam

குழுமியிருந்த கூட்டத்தில் ஒரு பகுதி .

acharya.org



மற்றொரு பகுதி

மேற்படி கூட்டத்தில் சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசார் உபன்யஸிக்கிறார்

srivatsam



acharya.org



வீனஸ்காலனியில் நடந்த ஸ்ரீ உடையவர் கைங்கர்ய சபையில் காஞ்சி
P. B. அண்ணஸ்வாமி

sriyatsam

மலர் வெளியீட்டில் பிள்ளைலோகம் பாஷ்யகாரர் ஸ்வாமி

acharya.org

1900-இல் இயல் கோஷ்டி (கங்கை கொண்டான் மண்டபம்) (1) உ. வே. வை. மு. அப்பங்கார் ஸ்வாமி, (2) ஷஷ்டி ஜீயர் (காஞ்சி P. B. அண்ணாவின் தாதா), (3) வாத்தியார் ரங்கஸ்வாமி ஐயங்கார்.

srivatsam

பகுகுடும்பி வரதாசாரியர் ஸ்வாமி பகவத் விஷய காலக்ஷேப கோஷ்டி (1930)–ஸ்ரீ. உ. வே. சோளஸிம்மபுரம்ஸ்வாமி, பகுகுடும்பி வரதாசாரியர், P. B. A. ஸ்வாமி, அத்யாபகர்களில் குவளை திருமலை, குவளை அனந்தாழ்வான், P. K. ஸ்ரீராம ஐயங்கார், C. ஸ்ரீனிவாஸ வரதாசாரியர், T. A. வரதாசார்யர், M.M. பார்த்தஸாரதி ஐயங்கார் இவர்களைக் காணலாம்.

acharya.org

சிறுபுலியூர் ஸ்வாமிகளுடன் அத்யாபக கோஷ்டி (1937)
ஸாது ராமானுஜாசாரியர், திருவாலி ராமானுஜாசாரியர்
திருவாலி ரங்கஸ்வாமி, கீழானூர் ரங்கஸ்வாமி



பூர்வாச்சிரமத்தில் ஸாது ராமானுஜாசாரியர் பகவத் விஷய காலக்ஷேப கோஷ்டி (1938) அத்யாபகர்களில் திருவாலி ராமானுஜாசாரியர், கர்ணம் திருமலாசாரியர், ஒரகடம் பார்த்தசாரதி ஐயங்கார் இவர்களைக் காணலாம் (நம்மாழ்வார் ஸந்நிதியில்).

acharya.org

ஸ்ரீ உ. வே. வாகம்ருதவர்ஷி வேளுக்குடி வரதாசாரியர்
சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசாரியரும்

srivatsam

ஆழ்வார் திருநகரியில் வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி
பகவத்விஷய காலக்ஷேபகோஷ்டியில் சதாபிஷேகம் கோவிந்த
நரஸிம்மாசாரியரும், புத்தூர் S. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்காரும்—

acharya.org

உ.வே. அஷ்ட கோத்ரம் வேங்கடாசாரியர்
(பட்டப்பா ஸ்வாமி, ஸ்ரீ பெரும்பூதூர்)

உ. வே. அஷ்டகோத்ரம் ஸ்ரீனிவாஸாசாரியர்
(ஸ்ரீரங்கம் அப்பண்ணா)

1971-இல் காரப்பங்காடு வேங்கடாசார்யர் பரமபதித்தபோது ஸந்நிதி மரியாதை—உ. வே. K. வரதாசாரியர், S. V. வரதராஜ ஐயங்கார் (தர்மகர்த்தா) K. V. அனந்தாசாரியர். மேல்கோட்டை அரையர் ஸ்வாமி.

srivatsam
acharya.org

ஸ்ரீரங்கம்
உ. வே. கோவிந்தா சாரியர் ஸ்வாமி,
1930-இல் ஸ்ரீ பாஞ்சராத்ர
ஆகம புத்தகம் வெளியிட்டவர்

திருமலை திருப்பதி இயல் கோஷ்டி
(1950)

கச்சி கிடாம்பி யாமுனாசாரியர், பரவஸ்து சீனிவாஸாசாரியர் சின்னஜீயர் ஸ்வாமி, புரிசை அனந்தாசாரியர் வீரவல்லி ஸ்ரீனிவாஸவரதாசாரியர் ஸ்வாமி.

acharya.org

ப்ராசீன வழக்கப்படி திருவல்லிக்கேணியில் கங்கைகொண்டான் மண்டபத்திற்கு, ஸ்ரீபார்த்தஸாரதி பெருமாள் சடகோபனை ஏள்ளப்பண்ணி மரியாதை (பஞ்ச முத்திரை) ஸாதிக்கப்படும் மடாதிபதிகள் (ராஜஸன்யாஸிகள்) (1) ஸ்ரீ. வானமாமலை மடம் ஜீயர், (2) ஸ்ரீ. அஹோபில மடம் ஜீயர், (3) ஸ்ரீ. சிருங்கேரி மடம் சங்கராசாரியர்.

ஸ்ரீ. வானமாமலை மடம் ஜீயர்



ஸ்ரீ. அஹோபில மடம் ஜீயர்

ஸ்ரீ. சிருங்கேரி மடம் சங்கராசாரியர்

srivatsam

acharya.org

கைரவிணியின் மகிமை

T. S. ராஜகோபால ஐயங்கார். B.A., L.T.
[கவிரத்ந-கண்டீரவ, செஞ்சொற் கவி, அபிநவ பட்டர்பிரான்]

வைர மினியில்லை மண்ணிற் பிறப்பில்லை
கைர விணிநங் கருத்துளதால்-பையரவில்
மந்நாதன் சிங்கன் வரதனிரா மன்கண்ணன்
இந்நா ளருள்பெய்வ ரிங்கு.

முன்னுரை

திருவல்லிக்கேணியின் பெருமை ப்ரஹ்மாண்ட புராணத்தில் பத்து அத்யாயங்களில் காணலாம். "ஸஹஸ்ரநாமதத் துல்யம் ராமநாம" என்று ராமநாமத்தின் பெருமையைச் சிவபிரான் பார்வதிக்குக் காட்டியதுபோல, இத்தலத்தின் பெருமையை மகேசுவரன் நாரதபகவானுக்கு விவரிக்கின்றான். முன்பு இந்தத் தலத்தில் திருத்துழாய் எங்கும் அடர்ந்திருந்ததால், இது ப்ருந்தாவனம் என்றும் துளஸிவனம் என்றும், முனிவர்களால் பாராட்டப்பட்டு வந்தது. அத்ரி, ப்ருகு, மரீசி, மார்க்கண்டேயர், மதுமான், ஆத்திரேயர் போன்ற ரிஷிகள் இதில் நெடுங்காலம் தவத்தில் தோய்ந்து சித்திபெற்றனர். க்ஷீராப்தியிலிருந்து பெரிய பிராட்டியார் ப்ருகு முனிவரின் திருமகளாக அவதரிக்க, க்ஷீராப்தி நாதன் அவளைத் திருமணஞ் செய்து கொண்டு, இங்கே மந்நாதன் என்று திருநாமமேற்றுக் சயனித்துள்ளான். சிங்கப்பிரான் தேவலோகத்திலிருந்து திவ்ய விமானத்துடன் எழுந்தருளி அத்ரி பகவானுக்குக் காட்சி அருளி இங்கேயே வீற்றிருக்கலானன். அவ்வப்போது தவத்தினருக்கு ஸேவை அருளிய பெருமான் ஸ்ரீராம பிரானகவும், கஜேந்த்ர வரதனகவும், பார்த்தஸாரதியாகவும் உலகினர் உய்வதற்காக இங்கே எழுந்தருளியிருப்பதால், இத்தலம் மேலும் சிறப்புற்றது.

இந்த திவ்யதேசம் கைரவிணி என்று ரிஷிகளால் பாராட்டப்பெற்றது. கைரவம் என்பது செவ்வல்லி. அதாவது ஆம்பல் வகை. இங்குள்ள தடாகத்தில் கைரவம் அடர்ந்திருந்ததுபற்றி, கைரவிணி என்ற பெயர் இதற்கு நிலவியது. தடாகம் என்பது: பொய்கை, கேணி, ஆவி, தடம்... எனவே கைரவிணி என்பது திருவல்லிக்கேணி ஆயிற்று. வாட்டாறு. சிற்றாறு ஆகிய ஆறுகளின் கரையில் அமைந்துள்ள தலங்கள் திருவாட்டாறு, திருச்சிற்றாறு; பெருங்குளம், வெள்ளக்குளம் என்ற தடாகங்களினருகில் அமைந்துள்ள தலங்கள் பெருங்குளம் (திருக்குளந்தை), திருவெள்ளக்குளம்; இதுபோல் கைரவிணிக் கரையில் இலங்கும் திவ்யதேசம் திருவல்லிக்கேணி ஆயிற்று.

கைரவிணிபற்றிச் சிவபெருமான் கூறுவது

கைரவிணி என்ற இந்தத் தடாகம் இயற்கை வனப்பு வாய்ந்தது என்றும் தெள்ளிய நீர் அடர்ந்துள்ளது. நீர்ப் பரப்பில் தாமரை, ஆம்பல். நீலம் படர்ந்திருக்கின்றன. தடாகம் மானஸ ஸரஸ்போல் திகழ்கின்றது.

அன்னமும் கரண்டமும் அரியச கோரமும்
இன்னன இணைவினில் எங்கணும் அடரவே
பொன்வரி வண்டினம் பொங்கரில் படிந்துமன்
இன்னிளி இசைத்திடும் இக்கயக் கரையிலே.

சந்தனம் பூழிலும் சாலமும் சண்பகம்
உந்துதே மாவொடும் ஓங்குகூ விளையொடும்
கந்தமார் கொடியினம் கனத்தடர் கரையதே
நந்தனம் போன்றதால் நாண்மலர் குலுங்கிட.

[கரண்டம் - நீர்க்காக்கை, சகோரம்– சக்கரவாகம், பொங்கர் - சோலை, இளி- இசை; பூழில் - அகில், சாலம் – தேக்கு, கூவிளை-வில்வம்.]

புனிதநீர் பொங்கும் இப்பொய்கையைக் காணும்போதே தீவினைகள் யாவும் நீங்கும். இத்தூநீரில் சிறிதளவு பருகினுலும் பெறற்கரிய பேறு பெறலாம். இப்பொய்கையிற் குடைந்தாடுபவருக்கு நரகமேயில்லை, மறு பிறவியுமில்லை.

இதில் நீராடும்போது ஓதவேண்டிய மந்திரத்தை வஸிஷ்டபகவான் பின்வருமாறு வெளியிட்டுள்ளான்:

அபஹர மம துரிதாநி ப்ரதிச த்வம்
நிருபமாம் யசோலக்ஷ்மீம் ।
பகவதி கைரவிணி! த்வாம் ப்ரணமாமி
ஜநார்தநப்ரியே! சுபகே!

[பெருமை வாய்ந்த கைரவிணியே! ஜநார்தனனது விருப்பிற்குரியவளே! சோபனையே! எனது பாவங்களைப் போக்குவாய், நிகரற்ற கீர்த்திச் செல்வம் அளிப்பாய்].

இப் பொய்கையின் பேரெழிலைக் கண்டுகளிப்பவரும், இதன் தெள்ளிய நீரைச் சிறிது கரத்திலேந்திப் பருகுபவரும், இதன் கரையில் வாழ்ந்துகொண்டு, "இதுவன்றோ வாழ்க்கை!" என்று உகப்பவரும் பெருமானது திருவடியில் சேர்ந்து என்றுங் களிப்புறுவர்.

இப்பொய்கைக் கரையின்பால் என்று
மோங்கும்
எழில்தன்னைக் கண்டுள்ளம் களிப்பார்
தாமும்
இப்புனலில் சிறிதேனுங் கரத்தி லேந்தி
இறைவன்தன் பேரோதிப் பருகு வாரும்
இப்புனலில் அலையெறியுங் கரையில் தோய்ந்து
இதுவன்றோ வாழ்வென்றே வாழ்வார்
தாமும்
தப்பரிய பவம்நீங்கி மரையாள் தோயும்
தடமார்வன் தன்கழல்பால் படிவர் தாமே.

தீர்த்தங்கள் :

கைரவிணியின் கரையிலுள்ள தீர்த்தங்கள் யாவை என்றும், அவற்றில் நீராடிச் செய்யக்கூடிய தானம் யாது என்றும் பரமசிவன் நாரத பகவானுக்கு விரித்து அருளினன்.

இந்தத் தீர்த்தங்கள் கைரவிணியிலேயே உள்ளன என்பது பெரியோர்களுடைய கருத்து.

வடகிழக்கில் ஐந்திர தீர்த்தம்: இதில் நீராடிப் புத்திரப்பேறு பெறலாம்; பெருமானது உகப்பிற்காகச் செய்யக்கூடிய தானம், சிறந்த குதிரை. தெற்கில் உள்ளது. சோம தீர்த்தம்; இதில் நீராடிச் செய்யக்கூடிய தானம்: தயிர், வெண்ணெய், ஆடைகள். தென்மேற்கில் மீன தீர்த்தம்; இதில் நீராடிச் செய்யக்கூடிய தானம்: முத்து, பவளம், தேன். வடமேற்கில் அக்நி தீர்த்தம், இதில் நீராடினுல் திடமான வாழ்வு பெறலாம், தேடரிய புகழும் சேரும். வடக்கில் விஷ்ணு தீர்த்தம் இதில் நீராடினுல் எத்தகைய தீவினையும் சூரியனைக் கண்ட பனிபோல் உருமாய்ந்து விடும்.

விசுவாவசுபெற்ற நலம்

விசுவாவசு என்ற கந்தருவன் ஒருநாள் ஆகாய மார்க்கமாகத் தெற்கில் சென்றுகொண்டிருந்தான். விந்திய மலையின் தென்பாகத்தில் ஒரு பொய்கைக் கரையில் தவஞ் செய்துகொண்டிருந்த துர்வாஸ முனிவன் மேல் அவனது நிழல் பட்டது. முனிவன் சிறி, "உடலிலி ஆவாய்" என்று சபித்தான்.

சீறித் திவிழித்துச் செப்பும் தவமுனிவன்,
'தேறில் இதுசெய்யாய் செருக்கில் கந்தருவா!
பாரில் படிந்தவெனைப் பாராது படர்ந்தனையால்
மாறி உடலிலியாய் விழுவாய் மண்மிசையே,"

sriva[t]sam
acharya.org

11. That the holy rice dedicated to the god Perumal at noon under the denomination of Thasaudrycuttala, exclusive of the fixed shares to the church, should be distributed among Thasaudry braminys or travellers, but the same is not subject to be distributed to the congregation.

12. The fixed rates of soodunterm, or what the worshipping braminys and servants of the church are entitled to out of the different sorts of thaliga, viz.,

To Acharcals	1/16
,, Soyempakee	1/16
,, Paresaracum	1/64
,, Thasanumbee	1/32
,, Conicopilly	1/16
Total	3/16

srivatsam

From the residence of 13/16 Woobayacaren, the person who bears the expense of the feast, is entitled to have 8/16, and the remaining 5/16 to be distributed to the congregation.

The different sorts of cakes which are made 60 pieces per each pady is to be distributed as follows, viz.,

To Acharcals	2½
,, Paresaracum	1/2
,, Soyempakee	2
,, Thasanumbee and Conicopillay	1
,, Poligar	1
Total	7

acharya.org

From the remaining 53 woobayacaren is to have 20 & 33 is to be distributed to the congregation. If the god Perumal be carried out in procession two pieces to Brahmons attending to divine service called Yeyalpadu, three to Streepathum thangies of three villages, and the remaining to be distributed to the congregation.

13. That the Soyenbakee is to dress the holy rice and cakes with care and attention, that no bits of stones or paddy be mixed therewith, and with great purity in due time and without delay or neglect.

The holy rice and cakes should weigh as follows :—

Holy rice of each Thalica.

That the weight of Tha-theyothanum is.	8	Visses.
That the weight of Pooleyagara is.	$7\frac{1}{2}$	,,
That the weight of Succara Pongal is.	$7\frac{1}{2}$	,,
And all the other Thaligays.	6	,,

Cakes.

Each Thosay is	12	Pollums
Each Appem is	12	,,
Each Vada is	4	,,
Each Auteresem is	5	,,

That if the Thaliga weight $\frac{1}{4}$ viss less or more and the cakes called Thosay and Appem one pollum more or less, vada and autheresem half pollum less or more, it is not to be considered as material difference in the weight.

8th January 1800.

Translation of a muchulka or penalty bare executed by Nadaveyel Narrain Pillay the church-warden of the pagoda of Triplicane, dated 1st Mausy in the year of Siddadri or 10th February 1800.

Whereas William Petree, Esq., President & c., Members of the Board of Revenue at Fort St. George, have been pleased to furnish me with the above Regulations for the future distribution of teartum and prasadum or holy-water and meal &c., in the pagoda of Triplicane with directions to carry on the business of the church, accordingly I do hereby strictly to abide by the said Regulations or in default thereof shall pay a fine of one hundred pagodas to the Honorable Company for each and every deviation proved against me therefrom that may to the satisfaction of the Board of Revenue.

Given with my free will and consent on the day above written.

Sd/-

NEYDAVAYEL NARRAIN.

Order Thereon -

Ordered that the Regulations proposed by the Committee be published and affixed in the pagoda and that the church-warden and his manager be required to enter into muchulkas binding themselves to abide by the regulations and that they be ordered to attend the Board for that purpose on Monday the 10th instant.

(True Copy)

Sd/-

W. S. MEYR,
Ag. Secretary

acharya.org

The following are a few stone inscriptions in the temple

a) 234 of 1903 (Tamil) belonging to Danti Varman (779–830). On a stone built into the floor at the entrance into the Grabhagraha of the Parthasarathy Swamy Temple. A record in the twelfth year of the Pallava King Danti Varma Maharaja. Records that the temple priests mortgaged one of the fields of the temple, that the offerings to the God in consequence fell short and that a certain Pugalthunai Visaiyaraiyan redeemed the field and arranged for the usual quantity of rice offerings every day. (This inscription corroborates the testimony of Thirumangai Alwar's Pasuram attributing the foundation of the temple to the Thonda King (i.e.) Pallava.)

b) 235 of 1903. (Tamil) on the north of the Central shrine in the same temple. A record of the Vijianagara King Vira Venkatapathi Maharaja (Venkata I–1586–1614) is S. 1527 Vikari. Refers to the King as seated on a jewelled throne at the city of Perumkondai.

c) 236 of 1903 (Tamil) On the South base of the same shrine. A record of the Vijianagara Vira Venkatapathi Deva Maharaja I (1586–1616) in S. 1525, Sobakrit. Refers to the King as seated on a Jewelled Throne in the city of Perungondai and to the consecration of an image of Thirumazhisai Alwar and a gift of twenty Varahas to this shrine.

d) 237 of 1903 (Telugu) On the same base as above. A record of the Vijianagaram King Rangaraya Deva Maharaj I (1578–86) in S. 1507, Tharana. Records the gift of the villages of Sembiam and Nidambaram (Nadumbarai) besides a garden by Thirumala Nayaningaru, the General of Ramaraja Venkatapathi Raju (Venkata I). The revenue from these two villages was 180 Rekha Chakra Gadyana. and from the garden 20 Chakra Gadyana.

e) 238 of 1903 (Tamil) on the north base of the same shrine. A multilated record in the forty ninth year of the Pandya King Maravarman alias Tribuvana Chakravarthi Kulasekhara Deva. A record of a sale of land and mentions God Thelliasinga Nayanar.

srivatsam

f) 239 of 1903 (Tamil) On the same base as above. A record of the Vijianagara king Mahamandaleswara Virapratapa Sadasivadeva Maharaja in S. 1486 Raktakshi. Records that a private individual built certain portions of the temple, namely shrines of Pallikonda Perumal, Krishna, Vedavalli Nachiyar, Thiruvoymozhi mantapam, the kitchen and the Prakara wall and set up a number of images and granted three villages – Pudupakkam, Vepery and Vesharupadi (Vyasarpadi)

g) 240 of 1903 (Tamil) On the east and north bases of the mandapam in front of the same shrine. A record of the

acharya.org

Vijianagara King Virapratapa Vira Venkatapathi Deva Maharaja-I (1586-1616) in S. 1527-Krodana.

(h) 241 of 1903 (Tamil) On a stone built into the floor of the same mantapam. A fragmentary record of the Chola King Thribuvana Viradeva (Kulotung-III) which is last mentions Thiruvamiyur in Kottumadu.

(i) 242 of 1903 (Tamil) On another stone built into the same place. A fragmentary record in the twenty-third year of the Chola King Rajaraja Deva. Four other similar fragments are built into this mantapa and a number of other portions of the temple.

srivatsam

acharya.org

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸுப்ரபாதம்

கௌஸல்யா-ஸுப்ரஜா ! ராம ! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே ।
உத்திஷ்ட நரசார்த்தூல ! கர்தவ்யம் தைவமான்ஹிகம் ॥
உததிஷ்டோத்திஷ்ட கோவிந்த ! உத்திஷ்ட கருடத்வஜ ! ।
உத்திஷ்ட கமலாகாந்த ! த்ரைலோக்யம் மங்களம்குரு ! ॥

வந்தே ப்ருந்தாவனுந்தே மணிகணவிலஸத் ஸௌத ஹர்ம்யே க்ருஹாட்யே
ஸம்ராஜத் கைரவிண்யாஸ் தடபுவி-க்ருமணித்-கோபுரே ஸாலரம்யே
ஆநந்தாக்யே விமானே முநிகண-விநுதம் பார்த்தஸூதம் ச ராமம்
ரங்கேசம் ஸ்ரீந்ருஸிம்ஹம் கஜவரவரதம் ஸ்ரீக்ஷிதிப்யாம் ஸமேதம் ॥ 1

மாத : ஸ்ரீர்ஜகதாம் அசேஷஜகதாம் நாதஸ்ய பர்த்து : ப்ரியே
தத்வக்ஷஸ்தலநித்ய-வாஸிநிஸதா ஸ்ரீவேதவல்யாஹ்வயே ।
ப்ருந்தாரண்ய-நிவாஸியோகி-ஸதநே ஸம்பூய வாராங்கிதே
மங்நாதாமர பூருஹேண ஸஹிதே நைசம் ப்ரபாதம் சுபம் ॥ 2

ஸ்ரீமத்வேதலதாம் ச்ரிதாம்ருதலதாம் ப்ருந்தாவநே ஸம்ஸ்திதாம்
ஸம்யக் த்ருஷ்ட பராவரேண முநிநா ஸம்வர்த்திதாம் தத்ஹிதாம் ।
லப்த்வா தாம் ஸமுபேத்ய துக்தஜலதே தத்தத்நாமா வஸந்
மன்னுதாச்ரித கல்பபூருஹ விபோ ! தே ஸுப்ரபாதம் ஹரே ! ॥ 3

ஸமஸ்த கல்யாண குணைகதாம்ந:
ஸ்வசக்தி லேசோத்ருத பூதலஸ்ய ।
ப்ரஹ்லாத பக்தே: பரிவர்த்தகஸ்ய
மங்நாதநாம்ந: தவ: ஸுப்ரபாதம் ॥ 4

ஸ்ரீமத் கைரவிணீ ஸரோவரதடே நித்யம் தப: குர்வதே
ஸம்யக்ஞானவதாம் வராய ப்ருகவே தத்வா த்வபீஷ்டம் பரம் ।
லப்த்வா தஸ்ய ஸுதாம் ஜகத்ரயமுதே தஸ்மை ப்ரஸந்நஸ்ய தே
மங்நாதாத்யஹி ஸுப்ரபாதமகிலாந் த்ராதும் ப்ரஸீத ப்ரபோ ॥ 5

ஸ்ரீமந் தராபர-விமோசன-தீக்ஷிதம் த்வாம்
ஸம்போதயந்தி விதிசங்கர-சக்ர-முக்யா: ।
ஸ்வாமிந் ஜகத்ரயவிபோ ! யதுவம்சநாத !
ஸ்ரீ பார்த்தஸூத பகவந் ! தவ ஸுப்ரபாதம் ॥ 6

acharya.org

பாஸ்வாந் விகாஸயதி பங்கஜகுட்மலாநி
பத்மாகரேஷு பரிகூஜித ஸாரஸேஷு ।
கூஜந்தி பஞ்ஜரசுகா: ஸஹ ஸாரிகாபி:
ஸ்ரீபார்த்தஸூத பகவந் தவ ஸுப்ரபாதம் ॥ 7

வீணாம் ப்ரக்ருஹ்ய முனிவாஹனயோகிவர்யோ
கானம் கரோதி ஸஹ தும்புரு-நாரதாத்யா: ।
ஸங்கீத வாத்ய-நிபுணா: தவ ஸுப்ரபாத-
காதா: படந்தி யதுநந்தந! ஸுப்ரபாதம் ॥ 8

ப்ரஹ்மாதய: ஸுரபதி ப்ரமுகா திகீசா:
ஸ்வஸ்வாதிகார-நியதாஸ் தவ ஸைந்யநாதா: ।
ஸம்ப்ரார்த்தயந்தி தவ ஸத்ம புரோவிபாகே
ஸ்ரீபார்த்தஸூத! பகவந்! தவ ஸுப்ரபாதம் ॥ 9

கோபாங்கனாஸ் தவ ஹி மங்களகீதகாநி
காயந்தி காமசர பீடித-காத்ர-யஷ்ட்ய: ।
கோபால-பாலக குலாநி விஸ்ருஜ்ய வத்ஸாந்
த்வாம் ப்ரார்த்தயந்தி யதுசேகர! ஸுப்ரபாதம் ॥ 10

ஸ்நேஹப்ரதிஸ் நுத-பயோதர பாரயுக்தா:
காவ: ஸ்வவத்ஸஸஹிதா: பரிதோஷயுக்தா: ।
வத்ஸாந் விஸ்ருஜ்ய ச பய: பரிதோஹயந்தி
கோபாலகாஸ் தவ யதூத்வஹ ஸுப்ரபாதம் ॥ 11

srivatsam

ப்ருந்தாவநே விஹரதாம் பசுபாலகாநாம்
ரக்ஷார்த்தமாத்த வரவேத்ர ஸுசங்கபாணே! ।
ப்ராத்ரா ஸமேத ஸுமநோஹர பூஷணார்ஹ!
ப்ரோத்திஷ்ட பார்த்த-ரதபாலக! ஸுப்ரபாதம் ॥ 12

ப்ருந்தாவநாந்தர மனோக்ஞ-வநாந்தரேஷு
நாநா தருப்ரவரஶோபி-ஜலாஶயேஷு ।
கூஜத்-விஹங்கம கணேஷு மதுவ்ரதாநி
காயந்தி பார்த்தரத நாயக! ஸுப்ரபாதம் ॥ 13

மந்தார-குந்த வரகைதக-மாதவீநாம்
ஆமோத நிர்பர வநாந்தர-நிஸ்ருதோஸௌ ।
மந்தாநில: ப்ரஸரதி ப்ரவர: ப்ரபாதே
ஸ்ரீபார்த்தஸூத! பகவந்! தவ ஸுப்ரபாதம் ॥ 14

ஸம்புல்ல-கைரவ-ஸரோவர நீரஸம்ஸ்தா
ஹம்ஸாஸ் ஸசக்ரமிதுனைஸ் ஸஹ ஸாரஸைஸ்ச ।
தீரே து தேசிககணைஸ் ஸஹ ஸம்விவாதாந்
தந்வந்தி பார்த்தரததநாயக! ஸுப்ரபாதம் ॥ 15

acharya.org

தத்தேசிகா: ஸகலசாஸ்த்ரவிதாம் வரிஷ்டா:
த்வத்ப்ரோக்த திவ்ய-சரமார்த்த-நிவிஷ்டபாவா ।
காஸார யோகி-முக தேசிக ஸூக்தி-நிஷ்டா:
திஷ்டந்தி கிங்கரக்ருதௌ தவ ஸுப்ரபாதம் ॥ 16

ஸ்ரீபட்டநாத-க்ருதிபிஸ் தவ மங்களாநி
ஶம்ஸந்தி தேசிகவராஸ் த்வமிதப்ரபாவா: ।
கோதாஸு ஸூக்தி ப்ரபி ப்ரவிபோதயந்தி
ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! தவ ஸுப்ரபாதம் ॥ 17

ஸூர்யோதயே க்ரஹகணாஸ் த்விதரேஸுரேந்த்ரா:
ஆஜ்ஞாம் தவைவ நிஜவைபவ ஸம்ப்ரயுக்தா: ।
ஸம்ப்ரார்த்ய தோஷிது மிஹாத்ய ஜகத்பதிம் த்வாம்
திஷ்டந்தி பார்த்தரத நாயக ! ஸுப்ரபாதம் ॥ 18

நித்யார்ச்சநாம் ரசயிதும் விவிதோபஹாராந்
வஸ்தூநி வஸ்த்ரவர திவ்ய விபூஷணாநி ।
ஸங்க்ருஹ்ய வைதிகசிகாமணய: ப்ரபாதே
திஷ்டந்தி பார்த்தரதபூஷண ! ஸுப்ரபாதம் ॥ 19

காச்மீர கேஸரயுதம் ஹரிசந்தநஞ்ச
கஸ்தூரிகாஞ் ச கனஸாரவரம் க்ருஹீத்வா ।
த்வாரி ஸ்திதாஸ் தவ ஹி தாஸகணாஸ் ஸமஸ்தா:
ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! தவஸுப்ரபாதம் ॥ 20

ஸம்புல்ல பங்கஜ-நவோத்பல கைரவாணி
ஸச்சம்பகை: மருவகை: க்ருதமாலிகாநி ।
ஸங்க்ருஹ்ய தாவக ஸமர்ச்சந மாதரேண
திஷ்டந்தி கர்த்து மனகாஸ் தவ ஸுப்ரபாதம் ॥ 21

பாக்யாதிகாஸ் தவ பதாப்ஜநிவிஷ்ட-பாவா:
பீதாம்பராண் யபரிமேய விபூஷணாநி ।
ரத்நாநி காஞ்சநயுதாநி ஸமர்ப்பயந்தி
ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! தவ ஸுப்ரபாதம் ॥ 22

ப்ராத: ப்ரயுக்த-நவநீத பய: பலாநி
முத்கான்ன லட்டுக மனோஹர-மிச்ரிதாநி ।
ஶோபாயநாநி ச ஸமர்ப்பயிதும் யதந்தே
ஸ்ரீவைஷ்ணவாஸ் தவ யதூத்வஹ ! ஸுப்ரபாதம் ॥ 23

பேரீ-ம்ருதங்க-படஹானக கோமுகாதி-
வாத்யாநி கோஷயதி தாஸகணாஸ் தவாக்ரே ।
திஷ்டந்தி நர்த்தனபரா: கணிகாஸ் ஸமஸ்தா:
ஸ்ரீபார்த்தஸூத ! பகவந் ! தவ ஸுப்ரபாதம் ॥ 24

srivatsam
acharya.org

ஹஸ்தீந்த்ர-மூர்த்நி த்ருத-காஞ்சந-கும்பதீர்த்தம்
சத்ராவ்ருதம் வித்ருத-சாமர-யுக்ம மாராத் ।
ஸ்ரீமந்! ப்ரபோ! தவஹி மங்கள மஜ்ஜநாய
ஸ்ரீபார்த்தஸூத! பகவந்! தவ ஸுப்ரபாதம் ॥ 25

ஏகாந்திநஸ்ச விமலாசய-யோகிவர்யா:
அத்யாபகாஸ் தவ பதாப்ஜ நிவிஷ்டபாவா: ।
திஷ்டந்தி ஸந்நிதி முபேத்ய பவத் பதாப்ஜே
ஸேவார்த்தம் அர்ஜுநஸகே தவ ஸுப்ரபாதம் ॥ 26

த்வத்ஸேவநைய ஸகல த்ரவிடாகமாநாம்
வக்தா பராங்குசமுநி: ஸ்வபத ப்ரபந்தை: ।
ராமாநுஜோபி க்ருதநித்ய ஸமஸ்த க்ருத்ய:
த்வத் த்வாரி திஷ்டதி விபோ தவ ஸுப்ரபாதம் ॥ 27

உத்திஷ்ட லக்ஷ்மணகுரோ! ஸஹஸீதயாத்ய
தர்மம் விவர்த்தய விபோ! ஜய பாலயாஸ்மாந் ।
தாஸாந் குருஷ்வ ஸஹஸா தவ கிங்கராம்ஸ்ச
தே ஸுப்ரபாதம் அதுநா ரகுவம்சநாத! ॥ 28

ஸ்ரீமந் கஜேந்த்ர-வரதாச்ரித-பாரிஜாத
ஸ்ரீவைநதேய புஜமூல விபூஷணாட்ய ।
இந்த்ராதி.தேவகண-பூஜித பாதபத்ம
ஸ்ரீமந் வரப்ரத! ஸுரேச்வர ஸுப்ரபாதம் ॥ 29

ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ! ஜகதாம் ஜநிஹேதுபூத
ஸம்பாலநாந்த கரணைரிஷு ஜாகரூக ।
அந்த: ப்ரவிச்ய ச நியந்த்ருதயா பவாஸ்மாந்
ஸ்ரீமந்! ந்ருஸிம்ஹ! பகவந்! தவஸுப்ரபாதம் ॥ 30

ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ! தவ மங்களமஸ்து நித்யம்
ஸூர்யேந்து-தாரக-ஸமான மஹ: ப்ரரோஹை: ।
நைசம் தம: ப்ரஸர மாந்தர மப்யபாஸ்தம்
ஸ்வாமிந்! ந்ருஸிம்ஹ! பகவந்! தவஸுப்ரபாதம் ॥ 31

காவ்யோபி பூர்வதிசி ஸம்ஸ்தித பர்வதஸ்தோ
வாசாம்பதிர் ஹி மகரோஸ் தமிதோ பபூவ ।
பக்ஷீ நிநாதமபி பஞ்ஜரக: கரோதி
ஸ்ரீமந்! ந்ருஸிம்ஹ! பகவந்! தவ ஸுப்ரபாதம் ॥ 32

ஸ்ரீபார்த்தஸாரதி-ரகூத்தம வேதவல்லீ-
மந்நாதஸௌம்ய நரஸிம்ஹ வரப்ரதாநாம் ।
யே ஸுப்ரபாதமநிசம் ப்ரபடந்தி தேஷாம்
ப்ரஹ்மேச்வராத்யஸுலபம் ஸுலபம் பதம் ஸ்யாத் ॥

acharya.org

ஸ்ரீ பார்த்தஸாரதி மங்களம்

ச்ரிய: காந்தாய கல்யாண-நிதயே நிதயேர்த்திநாம் ।
ப்ருந்தாரண்ய நிவாஸாய பார்த்தஸூதாய மங்களம் ॥

லக்ஷ்மீ ஸவிப்ர மாலோல-ஸுப்ரு-விப்ரம-சக்ஷுஷே ।
சக்ஷுஷே ஸர்வலோகாநாம் பார்த்தஸூதாய மங்களம் ॥

நித்யாய நிரவத்யாய நித்யாநந்த சிதாத்மநே ।
ஸர்வாந்தர்யாமிநே ஸ்ரீமத்பார்த்தஸூதாய மங்களம் ॥

ஸ்வதஸ்ஸர்வவிதே ஸர்வபக்த ஸர்வஹிதேஷிணே ।
ஸுலபாய ஸுசீலாய பார்த்தஸூதாய மங்களம் ॥

பரஸ்மை ப்ரஹ்மணே பூர்ணகாமாய பரமாத்மநே ।
ப்ரயுஞ்ஜே பரதத்வாய பார்த்தஸூதாய மங்களம் ॥

ஆகாரத்ரய மிச்ராணும் ஆத்மநாமநுபச்யதாம் ।
அத்ருப்த்யம்ருதரூபாய பார்த்தஸூதாய மங்களம் ॥

ப்ராயஸ் ஸ்வசரணௌ பும்ஸாம் சரண்யத்வேந பாணிநா ।
ஸ்வயம்தர்சயதே ஸ்ரீமத் பார்த்தஸூதாய மங்களம் ॥

srivatsam

ஸ்ரக்பூஷாம்பரஹேதூநாம் ஸுஷமாவஹ மூர்த்தயே ।
ஸர்வார்த்தி-சமநாயாஸ்து பார்த்தஸூதாய மங்களம் ॥

ஸ்ரீவைகுண்டவிரக்தாய ஸ்ரீமத் கைரவணீ தடே ।
ருக்மிண்யா ரமணாயாஸ்து பார்த்தஸூதாய மங்களம் ॥

ஸ்ரீமத்ஸுந்தரஜாமாத்ரு முநி-மாநஸவாஸிநே ।
ஸர்வலோக நிவாஸாய பார்த்தஸூதாய மங்களம் ॥

ஸ்ரீமத் ப்ருந்தாவநாந்தஸ்த மங்களா பரணாங்க்ரயே ।
மங்களாநாம் நிவாஸாய பார்த்தஸூதாய மங்களம்॥

acharya.org

திருவல்லிக்கேணி விஷயமாக ஆழ்வார்களின் மங்களாஸாஸநப் பாசுரங்கள்

[பேயாழ்வார்—மூன்றாந் திருவந்தாதி 16–ஆம் பாசுரம்]

வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்*
அந்தி விளக்கு மணிவிளக்காம்*—எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன்*
திருவல்லிக் கேணியான் சென்று.

[திருமழிசையாழ்வார்—நான்முகன் திருவந்தாதி 35-ஆம் பாசுரம்]

தாளா லுலகமளந்த வசைவே கொல்*
வாளா கிடந்தருளும் வாய்திறவான்*—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்*
ஐந்தலைவாய் நாகத் தணை.

திருமங்கையாழ்வார்—பெரிய திருமொழி 2-ஆம் பத்து 3-ஆம் திருமொழி

விற்பெருவிழவும்—பதிகம்

srivatsam

விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச்*
செற்றவன் தன்னைப் புரமெரி செய்த சிவனுறு துயர்களை தேவை*
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு பார்த்தன் தன்தேர் முன் நின்றானைச்*
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 1

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை விழுமிய முனிவர் விழுங்கும்*
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக் குவலயத்தோர் தொழுதேத்தும்*
ஆதியை அமுதை என்னையாளுடை அப்பனை ஒப்பவ ரில்லா
மாதர்கள் வாழும்*மாடமா மயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 2

வஞ்சனை செய்யத் தாயுரு வாகி வந்தபேய் அலறிமண் சேர*
நஞ்சமர் முலையூடு உயிர்செக வுண்ட நாதனைத் தானவர் கூற்றை*
விஞ்சை வானவர் சாரணர் சித்தர் வியந்துதி செய்யப் பெண்ணுரு வாகி*
அஞ்சுவை யமுதம் அன்று அளித்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 3

இந்திரனுக் கென்று ஆயர்கள் எடுத்த எழில்விழவில் பழ நடைசெய்*
மந்திர விதியில் பூசனை பெறாது மழைபொழிந்திடத் தளர்ந்து, ஆயர்
எந்தம்மோடு இனவா நிரை தளராமல் எம்பெருமான்! அருளென்ன*
அந்தமில் வரையால் மழைதடுத் தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 4

acharya.org

இன் துணைப்பதுமத்து அலர்மகள் தனக்கும் இன்பன் நற்புவிதனக்கு
இறைவன்*
தன்துணை ஆயர்பாவை நப்பின்னை தனக்கு இறை மற்றையோர்க் கெல்லாம்
வன்துணை* பஞ்ச பாண்டவர்க் காகி வாயுரை தூது சென்றியங்கும்
என் துணை* எந்தை தந்தைதம்மானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 5

அந்தகன் சிறுவன் அரசர் தமரசற் கிளையவன் அணியிழையைச் சென்று*
எந்தமக்கு உரிமை செய்யெனத் தரியாது எம்பெருமான்! அருளென்ன*
சந்தமல் குழலா ளலக்கண் நூற்றுவர்தம் பெண்டிரும் எய்தி நூலிழப்ப
இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 6

பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனோடு மைதிலியும்*
இரவுநன் பகலும் துதிசெய்ய நின்ற இராவணாந்தகனை எம்மானை*
குரவமே கமழும் குளிர்பொழி லூடு குயிலொடு மயில்கள் நின்றால*
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 7

பள்ளியி லோதி வந்ததன் சிறுவன் வாயில் ஓராயிர நாமம்*
ஒள்ளிய வாகிப் போத ஆங்கதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனாகிப்
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்பப் பிறையெயிற் றனல்
விழிபேழ்வாய்*
தெள்ளிய சிங்க மாகிய தேவைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 8

srivatsam
மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையி னோடு சென்றிழிந்த*
கானமர் வேழம் கையெடுத் தலறக் கராஅதன் காலினைக் கதுவ*
ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழி தொட்டானைத்*
தேனமர் சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 9

மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும் மண்டபமும்*
தென்னன் தொண்டையர் கோன்செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி
நின்றானை*
கன்னி நன் மாட மங்கையர் தலைவன் காமருசீர்க் கலிகன்றி*
சொன்ன சொல்மாலை பத்துடன் வல்லார் சுகமினி தாள்வர் வானுலகே. 10

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து புகன்மின் புகன்றால்—மருந்தாம்
கருவல்லிக் கேணியா மாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர்.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்
'நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி'

acharya.org

இரண்டு ப்ரஹ்ம உத்ஸவங்களிலும் 8-ஆவது நாளன்று திருமங்கை மன்னன் திருவேடுபறியில் வாசிக்கும் பட்டோலை

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

ஸ்ரீய:பதியாய், ஸ்ரீவைகுண்ட நிவாஸியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், அஸங்க்யேய கல்யாணகுண நிதியாய், அநந்த கருட விஷ்வக் ஸேனாதி ஸேவ்யனான ஸ்ரீமந் நாராயணன் "க்ஷீரார்ணவ நிகேதந:" என்கிறபடியே, க்ஷீரஸாகர சாயியாய், அனந்தரம் சேதனோஜ் ஜீவனார்த்தமாக, "பரித்ராணாய ஸாதூநாம் விநாஸாயச துஷ்க்ருதாம்" என்று துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தம், திருவல்லிக்கேணி என்னும் திவ்ய க்ஷேத்திரத்திலே 'ஸ்ரீபார்த்தஸாரதி (தெள்ளிய சிங்க) ஸ்வாமியாய், திருவவதாரஞ் செய்து நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம் முதலான உத்ஸவங்கள் கண்டருளா நிற்க "குரவமே கமழும் குளிர்பொழிலூடு குயிலொடு மயில்கள் நின்றால" என்கிறபடியே, கோகிலகூஜித கோமளமான வஸந்த (க்ரீஷ்ம) ருதுவில் சித்திரை (ஆனி) மாஸ ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளா நிற்க, ஹ்ருஷ்ட புஷ்டஜநாகீர்ணமான எட்டாந் திருநாளில், சயனசமயத்தில் சதுர்க்கதி யுக்தமான துரகாதி ரூடனாய், 'வேட்டையாடி வருவானை பிருந்தாவனத்தே கண்டோமே' என்கிறபடியே வேட்டை மார்க்கமாய் எழுந்தருளாநிற்க, வாளும் வில்லும் கொண்டும் வகுத்த தலைக்கட்டும் விழித்த கண்ணுமாய், திருமங்கை மன்னன் வந்து சந்தடியே புகுந்து திருவால வட்டங்களையும், திருவெண்கொற்றக் குடைகளையும், திருவெண்சாமரங்களையும் ஸந்நிதி திருவண் பந்தங்களையும் பறித்து ஓரிடத்திலே ஒளித்து, பின்பு இருள் மூடிக்கிடக்க, திருப்படிகம், திருப்பரிவட்டம், திருவாபரணம்-முதலானதுகளையும் பறித்துக் கொண்டு ஒளித்துப் போக காடாந்தகாரமாகையாலே குதிரை நடந்து போகாமலிருக்க, அருகே இருப்பவர்கள் அர்ச்சகர் முதலானோர் தம்தம் உடைமைகளையும் பறிகொடுத்து, கூக்குரல் நடத்தா நிற்க, அவ்வூர்த் தலையாரித் தலைவன் ராஜ பயத்தால் சடக்கென வந்து, போன உடைமைகளையெல்லாம் கொண்டு வருகிறேன் என்று சொல்லி கைவிளக்கு போட்டுக்கொண்டு, அந்த சந்தடியிலே கள்வன் அடி தொடர்ந்து பார்த்து நடவாநிற்க, ஒரு மூலையிலே ஒளித்து நிற்கும் திருமங்கை மன்னனைப் பிடித்துக்கொண்டு வந்து அகிலாண்டகோடி ப்ரம்மாண்ட நாயகனான ஸ்ரீபார்த்தசாரதி (தெள்ளிய சிங்க) ஸ்வாமி திருமுன்பே நிறுத்தி, அந்தத் திருக்கோயில் கணக்கப் பிள்ளையை அழைத்துத் திருமாலை திருப்பரிவட்டம் சாத்தி "களவு போன உடைமைகளுக்குக் கணக்கு சொல்" என, அந்தக் கணக்கப்பிள்ளை சொல்லும் விவரம்:—

		வராகன்
1.	ஸ்வாமி சாத்திக்கொண்டிருந்த பொன் நிறப்பாகை	100
2.	பாகையில் சொருகு முத்து துலா 1-க்கு	200

srivatsam
acharya.org

		வராகன்
3.	காதில் முருகு பச்சை ரவை	1,700
4.	முத்து சவுக்களி ஜோடு 2-க்கு முத்து சவுக்களி 40-க்கு	4,000
5.	நவரத்னம் இழைத்த கண்டாபரணம்	10,000
6.	தோள்வளை	1,500
7.	யஜ்ஞோபவீதம்	1,000
8.	கல் இழைத்த அட்டிகை	500
9.	பச்சை நடுநாயகம் துரா பதக்கம் முத்தும் கொலுசும் உள்பட	5,000
10.	கல் இழைத்த இருதலைபக்ஷி பதக்கம்	2,500
11.	கோத்த முத்து தாவடம் சரம், 15: சரம் 1-க்கு முத்து 400-ம் கிரயம்	14,000
12.	மாணிக்கக் கணையாழி, மோதிரம்	10,000
13.	வைரமிழைத்த தாயத்து 1க்கு	5,000
14.	நவரத்னம் இழைத்த அரைஞாண்	6,000
15.	திருவடிகள் வீரவண்டையம்	5,000
16.	பொற்காம்பு ரத்ன கவசம் உள்பட வெண்பட்டுக் குடை 2–க்கு	2,000
17.	வெள்ளித் தீவட்டி 4-க்கு	100
18.	மரகதம் இழைத்த அங்குபடி	1,000
19.	காம்புடைய திருவெண்குடை	100
20,	திருவால வட்டம்	100
21.	மயில் விசிறி, தங்கப் படிகம், கேடயம், பெரிய கத்தி, கடாஹி ஆகியவைகளின் நீர்க்கமான முடிப்பு ஆக	30,000
22.	ஸ்தலத்தார், தாலத்தார் முதலான ஸ்வாமி பரிஜனங்கள் சில்லறை தட்டு முட்டு குறையையும் அவரவர்கள் என் கையில் எழுதிவைத்தபடி கிரயம்	20,000

ஆக, ''தினுசுகள் எல்லாம் கொண்டு வந்து இப்பொழுது ஒப்புவிக்கக்கடவாய். இல்லையெனில் கணக்கில் உள்ளபடி விலை கொடுக்கக் கடவாய்'' என்று தலையாரித் தலைவன் தண்டிக்க போக, ஸ்ரீ பார்த்தசாரதி (தெள்ளிய சிங்க) ஸ்வாமி கடாக்ஷத்தினாலே ஞானம் பிறந்தவாறே, திருமங்கை மன்னன் அந்தத் தலையாரித் தலைவனையும் கூட்டிக்கொண்டு அனைத்துக் கொத்துப் பரிவாரத்துடன் திருவால வட்டம் முதலான உடைமைகள் ஒன்றிலும் குறையாமே கொண்டுவந்து ஒப்புவிக்க, பின்னர் ஸ்ரீ பார்த்தசாரதி (தெள்ளிய சிங்க) ஸ்வாமி திருமங்கை மன்னனுக்குத் திருப்பரிவட்டம் திருமாலை ஸ்ரீசடகோபன் முதலானவைகளைச் சாதித்தருளி "வாடினேன் வாடி" என்கிற திவ்ய ப்ரபந்தம் கேட்டருளத் திருவுள்ளம் பற்றினார்.

srivatsan

acharya.org

திருக்கார்த்திகைத் திருநாள் பட்டோலை

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் ।
யதீந்த்ர ப்ரணவம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥
ஏதத்ரைலோக்ய நிர்மாணத்ராண ஸம்ஹார காரணம் ।
ஸ்ரீமத்ரங்கநாதஸ்ய சாஸநம் சாச்வதம் பரம் ॥

ஸ்வஸ்தி ஸ்ரீவிஜயாப்யுதய சாலிவாகன சகாப்தம் . . . . . க்கு ஸ்வஸ்தி கல்யப்தம் . . . . க்கு ப்ரபவாதி சதாப்தம் . . . . க்கு . . . . வருஷம் கார்த்திகையில் கார்த்திகை நாள் "பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற" ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி நம் சடகோபனுக்கு நினைந்து அனுப்பும் சாஸனம்.

மார்கழி மாதத்து சுக்லபக்ஷம், ப்ரதமையில் முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ் நம் திருமாமணி மண்டபத்தில் கோப்புடைய சீரிய சிங்காதனத்தின் மேல் நாமும் நம் நாச்சிமார்களும் வீற்றிருந்து உம்முடைய பாட்டுக்களும் கலியன் உள்ளிட்டார் பாட்டுக்களும் கேட்கத் திருவுள்ள மானோம். அன்றளவும் நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழியாமல் இருக்கும் படிக்கு "பெருமானரையில் பீதக வண்ணவாடை கொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே" என்கிறபடியே உடுத்துக்களைந்த பீதக வாடையும் சூடிக்களைந்த துளபமும் சாத்திக்களைந்த மாலையும் மிடற்றுக்கு எண்ணெயும் நம் தழையிடுவான் கையில் வரக்காட்டினோம்—ஸ்வீகரிக்கவும்.

srivatsam

acharya.org

இராப்பத்து சாத்துமுறையன்று ஆழ்வார் திருவடிதொழுதபிறகு அநுஸந்தானம்

ஸ்வஸங்கல்பாநு விதாயி ஸ்வரூப ஸ்த்திதி ப்ரவ்ருத்தி ஸ்வசேஷதைக ஸ்வபாவ ப்ரக்ருதி புருஷ காலாத்மக விவித விசித்ராநந்த போக்ய போக்த்ருவர்க்க போகோப கரண போகஸ்த்தாந ரூப நிகில ஜகதுதய! விபவலயலீல! ஸத்யகாம! ஸத்ய ஸங்கல்ப! பரப்ரஹ்மபூத! புருஷோத்தம! மஹாவிபூதே! ஸ்ரீமந்நாராயண! ஸ்ரீ வைகுண்டநாத! அபாரகாருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய ஔதார்ய ஐச்வர்ய ஸௌந்தர்ய மஹோததே! அநாலோசித விசேஷாசேஷ லோக சரண்ய! ப்ரணதார்த்திஹர! ஆஸ்ரித வாத்ஸல்யைக ஜலதே! அநவ்ரத விதித நிகிலபூத ஜாதயாதாத்ம்ய! அசேஷ சராசரபூத! நிகில நியமந நிரத! அசேஷ சிதசித்வஸ்து சேஷி பூத நிகில ஜகதாதார அகில ஜகத்ஸ்வாமிந்! அஸ்மத் ஸ்வாமிந்! ஸத்யகாம! ஸத்ய ஸங்கல்ப! ஸகலேதர விலக்ஷண அர்த்திகல்பக! ஆபத்ஸக! ஸ்ரீமந் நாராயண! அசரண்ய சரண்ய அநந்ய சரண: த்வத் பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே.

லோக ஸம்ரக்ஷணார்த்தமாக நம்மாழ்வாரை ஸாதித்தருளவேணும்
சேதந ஸம்ரக்ஷணார்த்தமாக நம்மாழ்வாரை ஸாதித்தருளவேணும்
நம்மாழ்வாரை ஸாதித்தருள வேணும்—தந்தோம்—தந்தோம்.

யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்தர:।
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர் த்ருவா நீதிர் மதிர் மம॥
ப்ருந்தாரண்ய நிவாஸாய பலராமாநுஜாய ச।
ருக்மிணீ ப்ராணநாதாய பார்த்தஸூதாய மங்களம்॥

srivatsam

acharya.org

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி முதலானோர் கட்டியம்

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி திருமஞ்சன ஸ்நபந காலத்தில் அநுஸந்திக்கும் கட்டியம்

நாயந்தே நாயந்தே—

அக்ரேக்ருத்வா கமபி சரணம் ஜாநுநைகேந திஷ்டந்
பச்சாத் பார்த்தம் விவலநஜுஷா சக்ஷுஷா ப்ரேக்ஷமாண: ।
ஸவ்யே தோத்ரம் கரஸரஸிஜே தக்ஷிணே ஜ்ஞாநமுத்ராம்
ஆபிப் ப்ராணோ ரதமதிவஸந் பாதுநஸ் ஸூதவேஷ: ॥

ஏஷநாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: ।
நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம் ॥

தாஸாமாவிரபூத் சௌரி: ஸ்மயமாந முகாம்புஜ: ।
பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாந் மந்மத மந்மத: ॥

1. ஆழ்வார்கள் மடலெடுக்கும் அழகுடைய பெருமாள்;
2. ஆய்ச்சியரைப் பணிகொண்ட மணவாளப் பெருமாள்;
3. ஆழ்ந்தாரைக் கரையேற்ற அவதரித்த பெருமாள்;
4. ஆனைக்கன்றருளையீந்த அருளாளப் பெருமாள்;
5. ஆழிகொண்டன்றிரவி மறைத்து அருள்செய்த பெருமாள்;
6. ஆனைமறித்தழகாலே வெல்ல வல்ல பெருமாள்;
7. ஆழ் கடலைக் கடைந்தமரர்க் கமுதூட்டும் பெருமாள்;
8. ஆழ்வார்க்குப் பின்னெறியை அளித்துகந்த பெருமாள்;
9. நந்தெய்வ சிகாமணிப் பெருமாள்.

1. திருவுக்கும் திருவாகிய வானிளவரசான தேவர் அடலாயர்தங் கொம்பினுக்கு விடை கொண்டு நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தராய், நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பழகைப் பின்னானார் வணங்க வந்து, திருமடந்தை மண்மடந்தை இருபாலுந்திகழச் சிங்காதனத்தின் மேல் தண்டாமரை சுமக்கச் செங்கமலக் கழலும் சிற்றிதழ்போல் விரலுமாய் அடிச்சோதி நீ நின்ற தாமரையா யலர்ந்ததுவோ என்னும்படி நிலையார நின்றவழகும்,

2 கறையினார் துவருடுக்கைக் கடையாவின் கழிகோற்கைச் சறையினாராய் பசுநிரை மேய்ப்புகந்து கன்று மேய்த்தினிதுகந்த வாத்ஸல்யம் விளங்கும்படி நல்லங்க முடையதோர் கோலூன்றி நின்ற வழகும்,

3. முடிச்சோதியாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ என்று கோவிந்தாபிஷேகத்தால் திருமுடியில் நல்தரித்த ஸ்வாமித்வ ப்ரகாசமாய் கதிராயிரமிரவி கலந்தெறித்தா லொத்த நீண்முடியும்,

srivatsam

acharya.org

4. "ஸவிலாஸ ஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்" என்கிறபடியே முறுவ லெடுத்த கலமென்றலாய் ஸ்வாமித்வபலோபதாக ஸௌசில்ய ப்ரகாசகமான ஸ்மயமான முகாரவிந்தமும்,

5. அலர்ந்து குளிர்ந்திருக்கிற விரண்டு தாமரைப் பூக்களை மதத்தாலே அமுக்கியாடுகிற இரண்டு வண்டொழுங்கு போலிருக்கிற தன்கைச்சார்ங்க மதுவே போலழகிய திருப்புருவ வட்டங்களும்,

6. "பதிம்விச்வஸ்ய" என்கிற ப்ரமாணம் வேண்டாதே அனைத்துலகுமுடையவரவிந்த லோசனனென்று ஸர்வேச்வரத்வ சிஹ்நமாய் மிதோபத்தஸ்பர்த்தஸ்ப்புரித ஸபரத்வந் த்வலலிதங்களான திருக்கண்களும்,

7. கஸ்தூரீ கலிதோர்த்வ புண்ட்ர திலகம்" என்று திருநெற்றியில் சாத்தின கஸ்தூரித் திருநாமமும்

8. "மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ" என்று நித்ய ஸந்தேஹ ஜநக மான கோலநீள் கொடி மூக்கினழகும்,

9. அதினுடைய பல்லவோல்லாஸம் போலிருக்கிற திவ்ய கபோலங்களும்,

10. "அதினுடைய நவகுஸுமம் போலேயாய் பன்னிலா முத்தந் தவழ் கதிர் முறுவல் செய்து" என்கிறபடியே பூரண சந்திரன் முழுநிலாவைச் சொரிந்தாற்போல் திருமுகத்தினொளியை ப்ரவஹிக்கிற ஸ்மித விலாஸமும்,

11. "சிலாஜ்ஜடீ பூயதே" என்று அந்த ஸௌசில்ய காஷ்டாபூத ஸௌலப்ய ப்ரகாச மாய் அலவலைமை தவிர்த்த அழகனென்றும் ஆதரம் பெருக வைத்த அழக னென்றும் குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழிலெழு கமலப் பூவழகரெ ன்றும், அநுகூல ப்ரதிகூல விபாகமற ஆண் பெண் வாசியறுத்து மற்றொன்றினைக் காணமல் கண்டவர் தம் மனம் வழங்க ஸகல மநுஜநயந விஷயதாங்கதமாய் மகமென்று தொட்டுக் காட்டின வெளுத்திலைத்த திருமேனியும்,

12. "அர்ச்சக பராதீநாகிலாத் மஸ்திதி:" என்று அர்ச்சக பாரதந்த்ரியத்தைத் தன்னை யிட்டுப் பார்த்தஞ்சின வச்சமறத்திருக்கையில் ஜ்ஞாந சக்தி ப்ரகாசகமா யெடுத்துப் பிடித்த திவ்யாயுதங்களும்,

13. அனைத்துலகுமுடைய வரவிந்தலோசன னென்று சேஷித்வ ஸூசகமாய் கரிய வாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி ஆழ்வார்களளவும் நீண்டவை யெறிந்த நெடு நோக்கினழகும்,

14. இத்தலையைத் தேற்றியன்றித் தரியாதவளவான பூர்த்திக்கு ப்ரகாசகமாய் மாசுச: என்று கொண்டு வைத்தஞ்சலென்ற கையும்,

15. இரண்டட்டத்திலும் மரகத கிரியைக் கடைந்து மடுத்தாற்போல் 'திண்ணியவாய்' "அலம்புரிந்து" என்கிறபடியே தனக்கு உபய விபூதியும் வழங்கி திவ்யாஸ்த்ர புஷ்பிதங்களான கற்பகக் காவன நற்பல தோள்களும்,

acharya.org

16. பெரிய பிராட்டியாருக்குக் கோயில் கட்டணமாய் நித்யாநுபவம் பண்ணச்செய்தேயும் இறையுமகலகில்லேனென்று அவளைப் பிச்சேற்றக் கடவதாய், கோலமாமாமணியாரமும் முத்துத்தாமமும் ஸ்ரீகௌஸ்துபமுந் தொடக்கமான குருமாமணிப்பூண் குலாவித் திகழ்கிற திருமார்பினழகும்,

17. காளமேகத்தில் மின்னற் கொடி படர்ந்தாற்போல் திருமேனிக்கு பரபாகரஸாவஹமாய் அழகு வெள்ளத்துக்கு அணைகட்டினாற்போலிருக்கிற வெண்புரி நூலினழகும்,

18. ஸௌந்தர்ய ஸாகர மிட்டளப்பட்டுச் சுழித்தாற்போல் நெஞ்சையும் கண்ணையுஞ் சுழியாறு படுத்துகிற திருவுந்தியும்,

19. ஸந்த்யாராக ரஞ்சிதமான ஆகாசம் போலே திருமேனிக்குப் பரபாகரஸாவஹமாய்த் திருவரை பூத்தாற் போலிருக்கிற அந்திபோல் நிறத்தாடையும்,

20. ரம்பாஸ்தம்பாதி கம்பீரங்களான திருத்துடைகளும்,

21. அங்கராகம் ப்ரவஹிக்கும்போது இரண்டுகுமிழி நீரெழுந்தாற் போலிருக்கிற திருமுழந்தாள்களும்,

22. கள்ளச்சகடத்தைக் கலக்கழியச்சாடிக் கன்று மறித்தோடிக், காளியன் மீதாடிக் காளிந்தி நீராடிக், குரவை பிணைத்தாடிக், குடமேறிட்டாடிக், கருணையால் தூதோடிக், கன்னியரோடுடிக், கழகமிதித்தேறிச் சிற்றிலழித்தாடிச், சரணைகத் தந்தொழிந்த திண்கழலிருந்த அழகும்,

23. சீரியதோர் நிதிபோலே திருமுன்பே வீற்றிருந்த ஸ்ரீ சடகோபனிருந்த வழகும்,

srivatsam

1. இவ்வழகில் ஆழங்கால்பட்டு அலைகின்ற உலகெல்லாம் சூழ்ந்திருந்தேத்தும் அழகுமாய் நீராட எழுந்தருளியிருக்கும் அழகு இது ஏதேனும் சிந்தை மருளோ !
2. ஜகன் மோகன மந்த்ரப்ரபாவமோ!
3. ஸகலரஸகுளிகாவிலாஸமோ!
4. ஸர்வபோக சிந்தாமணி பிரகாசமோ!
5. ஸகல ஜநஸுக்ருத விபாகமோ!
6. நிகிலபலகல்பலதா ப்ரஸரமோ!
7. அகில ஜகஜ்ஜீவன மூலமோ!
8. அதுலாநந்தகந்தாவதாரமோ!
9. ஸமஸ்த ஸம்பத்ஸாம்ராஜ்ய வேஷமோ!
10. ஸர்வ மங்கள ஸந்தான ப்ரஸவமோ!
11. ஸகலகலா ரஹஸ்ய ஸர்வஸ்வமோ!
12. ஈதெல்லாம் திரண்டெழுந்து கொண்டதோர் வடிவோ!
13. இதுவுமன்றியில் அப்ரமேய தேஜஸ்ஸோ!

14 நாங்கள் ஏதென்றறியா இவ் வழகுடன் தேவரீர் ஊழிதோறும் ஊழிதோறும் வாழ்ந்திடுக வாழ்ந்திடுகவே: யதுஸார்வபௌமனே! திருமஞ்சனங் கண்டருளவே: ஜயவிஜயீபவ!

acharya.org

ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸஹஸ்ரதாரைத் திருமஞ்சனம்

நாயந்தே! நாயந்தே!

த்வம்மே அஹம்மே குதஸ்தத் ததபி தவகுதோ வேத மூலப்ரமாணாத்.

ஏதச்சாநாதி ஸித்தாதநுபவ விபவாத் தர்ஹி ஸாக்ரோச ஏவ|

க்வாக்ரோச: கஸ்ய கீதாதிஷு மமவிதித: கோத்ரஸாக்ஷீ ஸுதி: ஸ்யாத்

ஹந்த த்வத்பக்ஷபாதீஸ இதி ந்ருகலஹே

ம்ருக்ய மத்த்யஸ்த்தவத்தவம்.

ஸஇதாநீமபிமுநே த்ருச்யதே தத்ரமாநவை;

ருக்மிண்யாசா நிருத்தேந ப்ரத்யும்நேந ச ஸேவித;

ஹலாயுதே ந ஸஹிதஸ்ததா ஸாத்யகி நா ஸஹ

பார்த்தஸாரதி ரித்யேவ விஸ்ருதோ ஜகதீபதி:

பராக்-பராக்! ஸ்வாமீ! பராக்

1. அன்றிய வாணனாயிரந்தோளுந் துணிய அன்றுழிவிடுத்த அசைவோ?
2. கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்து ஆநிரைமேய்த்த அசைவோ?
3. கும்பமிகுமதயானை மருப்பொசித்துக்கஞ்சன் குஞ்சிபிடித்தடித்த அசைவோ?
4. வம்பவிழும் மலர்க்குழலாளாய்ச்சிவைத்த தயிர்வெண்ணெய் உண்டுகந்த அசைவோ?
5. பாழியில் மிக்க பார்த்தனுக்கு அறுமூன்றும் அளித்துரைத்த அசைவோ?
6. ஆழியாலன்றங்கு ஆழியை மறைத்து ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்ட அசைவோ?
7. அடியார்கள் வினைத்தொடரை அருளென்னும் ஒள்வாள் உருவி வெட்டிக்களைந்த அசைவோ?
8. வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை மண்மகள் இடவருகுமிருக்க நடுவாக வீற்றிருக்கும் இவ்வழகுடன் தேவரீர் ஊழிதோறும் ஊழிதோறும் வாழ்ந்திடுக வாழ்ந்திடுகவே: ஸ்ரீ பார்த்தஸூதனே! திருமஞ்சனங் கண்டருளவே: ஜய விஜயீபவ!

என்னையாளுடையப்பனுடைய கட்டியம்

"த்வம்மே அஹம்மே" இத்யாதி "வாழ்ந்திடுகவே."

மாகமாஸே மஹாதேஜா: த்வாதச்யாம் ஸஹரிஸ்ஸவயம்

ப்ராதுராஸ ப்ருகோஸ் தஸ்ய ஹ்யாச்ரமே புண்யகர்மண:||

யதோ மந்நாத இத்யாஹ வேதவல்லீ ஸுசிஸ்மிதா|

ததோ மந்நாத இத்யேவ விஸ்ருதோ புவநத்ரேய||

என்னையாளுடையப்பனே! திருமஞ்சனங் கண்டருளவே:

ஜயவிஜயீபவ.

acharya.org

சக்ரவர்த்தித் திருமகனுடைய கட்டியம்.

''த்வம்மே அஹம்மே'' இத்யாதி ''வாழ்ந்திடுகவே.''

கேநசித்த்வத காலேந த்யாய தஸ்தஸ்ய வை முநே: ।
உதங்முகஸ்ய புரத: ப்ராதுராஸீஜ் ஜகத்குரு :॥

யாத்ருகாஸீத் புராராமோ ராஜ்ஞோ தசரதஸ்யஹி ।
ப்ராத்ரு பிஸ்ஸஹிதஸ் தாத்ருக் ஸஸீத : ப்ரத்யத்ருஸ்யத ॥

வடிவாரும் மாமலராள் வல வருகும் மற்றை
இலக்குமன் இடவருகும் இருக்க நடுவாக வீற்றிருக்கும்
இவ்வழகுடன் தாசரதிதேவனே ! திருமஞ்சனங் கண்டருளவே :
ஜயவிஜயீபவ.॥

கஜேந்திர வரதனுடைய கட்டியம்

''த்வம்மே அஹம்மே'' இத்யாதி வாழ்ந்திடுகவே''.

ஸோபி ஸம்ப்ரதி ஸர்வேஷாம் ப்ராணிநாம் கோசரீபவந்।
வரதோ நாம தேவேசோ த்ருச்யதே தத்ர வைஸ்வயம்॥

கஜேந்திரவரதனே! திருமஞ்சனங் கண்டருளவே:
ஜயவிஜயீபவ॥

srivatsam

அழகிய சிங்கருடைய கட்டியம்.

''த்வம்மே அஹம்மே'' இத்யாதி ''வாழ்ந்திடுகவே.''

ஸ ததர்ச விமாநஸ்ய மத்யே பாஸ்கரரோசிஷ: ।
ஆஸீநம் பரமம் தேவம் நரஸிம்ஹ ஸ்வரூபிணம்॥

சாரதாப்ரப்ரதீகாசம் சாரதேந்து ஸமாநநம்
ரக்தோத் பலதலாபாக்ஷம் ஜடாபடலபீஷணம்

தெள்ளியசிங்க தேவனே ! திருமஞ்சனங் கண்டருளவே:
ஜயவிஜயீபவ॥

acharya.org

ஸ்ரீ எம்பெருமானார் திருமஞ்சன கட்டியம்

ஸ்தபநத்தின்போது

நாயன்தே! நாயன்தே!

காஷாயசோபி-கமநீய-சிகாநிவேசம்
தண்டத்ரயோஜ்ஜ்வலகரம் விமலோபவீதம்।
உத்யத்-திநேசநிப முல்லஸதூர்த்த்வபுண்ட்ரம்
ரூபம் தவாஸ்து யதிராஜ! த்ருசோர் மமாக்ரே ॥

அப்பனுக்குச் சங்காழி அளித்தருளும் பெருமாள்!
அறமிகுநற் பெரும்பூதூர் அவதரித்த பெருமாள்!
அறுசமயச் செடியதனை அடியறுத்த பெருமாள்!
"அருளாழி வரிவண்டே!" என்று ஆழ்வார் அழைக்கும் பெருமாள்!
அருள்மாரி யடியிணைக்கீழ் அன்பு பூண்ட பெருமாள்!
அஞ்சுகுடிக்கொரு சந்ததியாம் ஆண்டாள்தமக்கும் அண்ணரான பெருமாள்!

அரங்கர்மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள்
தொல்லருளால் தாழ்வின்றி வாழும் பெருமாள்!
அடியார்கள் வினைத்தொடரை அருள் என்னும் ஒள்வாள்
உருவிக் கிட்டிக் கிழங்கொடு வெட்டிக் களைந்த பெருமாள்!
நம் தேசிகர்சிகாமணிப் பெருமாள்!

1, தேவரீர் திருவடித் தாமரைகளின் தாஸ்யார்ஹ-ஸாரஸ்ய-தாநார்த்தமாக ஆஸநாரவிந்தத்தில் அழுத்தியிட்ட இடது கழலும்,

2. இடத் துடையின்மேல் வளர்த்திக் கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குக் காட்டியிட்ட வலது கழலும்,

3. ஸாக்ஷாத் மந்மத-மந்மதாயமான மதுமதந-விஜய-தூணீர யுகளம்போல் இணைத்து வைத்த கணைக்கால்களும்,

4, கீழ்நோக்கும் ஒளிவெள்ளம் மறியுண்டு சுழித்தாற்போல் இரண்டருகும் திரண்டுருண்டு மடியுண்ட முழந்தாள்களும்,

5. கந்தளித-கதலீ-காண்ட-கரிகர-கரபகங்கள் போல் பருப்பருத்த திருத்துடைகளும்

6. திருவரையில் பாங்காக ஆஜங்கம் தழைத்துடுத்த அந்திபோல் நிறத்தாடையும்,

7. நிலை நின்ற மின்னல் கொடி போல் அதினிடையில் நிரு நிகு என்ன பொன்னரை நாண் பூண்ட அழகும்.

acharya.org

8. ஸௌந்தர்ய-துக்தஸிந்தூதரம் நடுக்குழித்திட்ட சுழிபோல் ஸுந்தரமாம் உந்தி மலரும்,

9. லாவண்ய தரங்கிணியில் அலையொழுங்கு விழுந்தாற் போல் திகழ்கின்ற திரிவளிகளும்,

10. அலர்கின்ற தாமரைபோல் அஞ்சலித்த தடக்கைகளும்,

11. தங்க வளைமேல் தங்கித் தொங்குகின்ற சங்கிலிகளோடு இணக்கமுற்ற கணைக் கைளும்,

12. முறுக்கிட்ட முன்கையோடு உள்விம்பிப் புறங்குவிந்து மடியுண்ட முழங்கைகளும்,

13. கநகமய குலதரங்களைக் கடைந்தெடுத்து மடுத்தாற்போல் இரண்டருகும் திரண்டு நீண்ட பாஹுதண்டங்களும்,

14. ப்ரஹ்மபுர கோபனுர்த்தமிட்ட ஹாடகமய கவாடம் போலப் பளபள வென்று அகன்று காடவ்யூடமாய்த் திகழ்கின்ற திருமார்பின் அழகும்,

15. அம்மார்பின் அழகில் அழுந்துவார்க்கோர் அவலம்ப ஸூத்ரம்போல் இலங்கு கின்ற முந்நூலழகும்,

16. ஸேச்வரவிபூதித்வயமும் இளைப்பாறும் நிழல்தடமாய் வளர்ந்துயர்ந்த திண்டோள் களும்,

17. கண்டவ்யஸ்த-தாராக்ஷரங்கள் புறம்பொசிந்து காட்டினுற்போல் ரேகாத்ரயவிபக் தாங்கமாய் வலம்புரியின் சுழி ஒழுங்கைப் பழித்தெழுந்த திருக்கழுத்தின் அழகும்,

18. மறுக்கழற்றிய சந்த்ர மண்டலத்தையும், அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவையும் அதஃகரித்துக் கிட்டினுரை மையலேற்றி மயக்கும் மாயமந்திரமாய் விளங்குகின்ற ஸ்மயமாந - முகாரவிந்தமும்,

19. இசைந்து கனிந்த த்ராக்ஷாத்வயம்போல் வகுப்புண்ட சுபுக - விகாஸமும்,

20. ஸாகூத வார்த்தோத்யுக்தமாய் துடிப்பது போல் விளங்குகின்ற திருப்பவளங் களும்,

21. அவ்யக்த மதுர மந்தஹாஸ விலாஸமும்,

22. ஸ்படிகமய-முகுர-மண்டலங்கள்போல் தளதளென்ற திவ்ய கபோலங்களும்,

23. கநகநக மகரகுண்டல த்வயத்தால் தழைந்து, வளர்ந்து, படிந்து, வடிவிட்டுச் சுருண்டு நீண்டு, தோளளவும் தொங்குகின்ற கர்ணபாசங்களும்,

24. "மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ? கொழுந்தோ?" என்று நித்யஸந்தேஹ ஜநகமான கோலநீள் கொடிமூக்கின் அழகும்,

25. மிதோபத்த-ஸ்புரித-சபரத்வந்த-லலிதங்களாய்ப் புடைபரந்து, மிளிர்ந்து, நீண்ட தண்டாமரைக் கண்களும்,

acharya.org

26. குணோத்கர்ஷ குண்டலிதமான திருச்சார்ங்கம்போல் வளைந்த திருப்புருவ வட்டங்களும்,

27. அஷ்டமீசந்த்ரனின் அம்ருதப்ரவாஹங்கள் கற்பகக் கொடியடியில் பெருகிவந்து தேங்கினாற்போல், திருநுதல்மேல் இலங்குகின்ற நாஸிகாமூல-த்ருத-ஸ்ரீராமாநுஜ தீப்யத்-திவ்யோர்த்வபுண்ட்ர விசேஷமும்,

28. அதினிடையில் உபயவிபூதி - ஸாம்ராஜ்யபட்டாபிஷேக - லக்ஷ்மீவிஹார - நிக்ஷிப்த-பதகமல-லாக்ஷாபங்கம்போல், சிவந்து படிந்து விளங்குகின்ற ஸ்ரீசூர்ண ரேகையும்,

29. உயர்ந்து மலர்ந்த திருமுடியும்,

30. வளர்ந்து, மடிந்து, வ்யக்தாவ்யக்தமாய் விளங்குகின்ற திருக்குழல் ஒழுங்கும்,

31. சுற்றிச் சுழற்றிக் குழைத்திட்டு முடித்துத் தொங்கவிட்ட சிகாபந்தமும்,

32. பின்னெடுத்த பிடரி யழகும்,

33. திருவனந்தாழ்வான் பின்படம்போல் நடுப்பதிந்து விசாலமாய் நெரித்திட்ட திருமுதுகும்,

34. வலவருகின் கைமேலும் மார்பிலுமாய் முன்னூட்டித் தாங்கியிட்ட த்ரிதண்டாக்ரமும்

35. சீரியதோர் நிதிபோலே திருமுன்பே நோக்கிக்கொண்டிட்டு வைத்த திருவடி நிலைகளுமாய்,

இப்போது தேவரீர் திருமஞ்சனம் கொண்டருள எழுந்தருளியிருக்கும் அழகிது,

srivatsam

ஏதேனும் சிந்தை மருளோ?
ஜகந்மோஹந மந்த்ர ப்ரபாவமோ?
ஸகல ரஸகுளிகா விலாஸமோ?
ஸர்வபோக சிந்தாமணி ப்ரகாசமோ?
ஸகலஜன ஸுஹ்ருத விபாகமோ?
நிகில கல்பலதா ப்ரஸரமோ?
அகில ஜகஜ்ஜீவந மூலமோ?
அதுலாநந்த கந்தாவதாரமோ?
ஸமஸ்தஸம்பத் ஸாம்ராஜ்ய வேஷமோ?
ஸர்வமங்கள ஸந்தான ப்ரஸவமோ?
ஸகலகலா ரஹஸ்ய ஸர்வஸ்வமோ?
ஸர்வேச்வர ஆபத் தநமோ?
ஈதெல்லாம் திரண்டெழுந்து கொண்டதோர் வடிவோ?
இதுவுமன்றி, அப்ரமேய தேஜஸ்ஸோ?

நாங்கள் ஏதொன்றறியா இவ்வழகுடன் தேவரீர் ஊழிதோறும் ஊழிதொறும் வாழ்ந்திடுகவே! யதிஸார்வபௌமனே! திருமஞ்சனம் கண்டருள்கவே! ஜயவிஜயீ பவ!

acharya.org

திருமஞ்சன கட்டியம்

பாஷண்டத்ருமஷண்ட-தாவ-தஹந: சார்வாக சைலாசநி:
பௌத்வத்வாந்தநிராஸ வாஸரபதி: ஜைநேப-கண்டீரவ: ।
மாயாவாதிபுஜங்கபங்க-கருடத்ரைவித்ய சூடாமணி:
ஸ்ரீரங்கேச ஜயத்வஜோ விஜயதே ராமாநுஜோயம் முநி: ॥

பராக், பராக்! தர்சந-ஸ்தாபநாசார்யா பராக்!

அத்திகிரி அருளாளர் அனையிணைக்கு
அத்தாணிச்சேவகம் செய்த வேர்வை ஆறவோ
அருசமயச் செடியதனை அடியறுத்து வென்றி
கொண்ட வேர்வை ஆறவோ
அடர்ந்துவரும் குதிர்ட்டிகளை அறத்துறந்து
ஸ்ரீபாஷ்யம் அளித்துரைத்த வேர்வை ஆறவோ
அன்புடன் கோட்டியூர் நம்பி அடிபணிந்து
உலகுய்ய மந்திரம் கொண்ட வேர்வை ஆறவோ
அறுபதுமீரேழு சிங்காஸனத்திற்கு எண்நான்கு
மனுஉரைத்த வேர்வை ஆறவோ
அணிஅரங்கர் வண்புகழ்மேல் ஆன்றதமிழ்
ஆயிரமும் வளர்த்திட்ட வேர்வை ஆறவோ
அலர்மகள் கோன் திருப்பதிகள் நூற்றெட்டும்
சேவித்து பாவித்த வேர்வை ஆறவோ
ஹாரீத குல ப்ரபவ நம் தர்சன ஸ்தாபநாசார்யா!
தர்சனம் தழைத்திடுகவே,
ஜகமேழும் குளிர இன்று திருமஞ்சனம் கண்டருளவே,
ஜயவிஜயீ பவ.

srivatsam

ஸ்ரீஉடையவர் மங்களாசாஸந எச்சரிகை

ஸ்ரீபார்த்தஸாரதி ஸந்நிதியில்

ஸ்ரீபார்த்தஸாரதி - க்ருபா - லப்த - நிஜாவதார - வைபவா! எச்சரிகை.
அப்பனுக்குச் சங்காழி அளித்துகந்த தேவா! எச்சரிகை.

ஸ்ரீவேதவல்லித் தாயார் ஸந்நிதியில்

ஸ்ரீவேங்கடேச்வர - ச்வசுரபிதாநா! எச்சரிகை.

வேங்கடக்கோன் மார்புறையும் மங்கையைப்
பெற்றளித்த தேவா! எச்சரிகை.

acharya.org

ஸ்ரீதேவப் பெருமாள் ஸந்நிதியில்

அத்திகிரி அருளாளர் அத்தாணிச் சேவகத்தால்
பெருந்தேவியாருடைய பெருந்தாகம் தீர்த்த தேவா! எச்சரிகை.

அருளாளர் ஆறுவார்த்தை அரும்பொருளால் மறைவிரித்துப்
பெரும்புகழ்படைத்த தேவா! எச்சரிகை.

ஸ்ரீதிருமழிசைப் பிரான் ஸந்நிதியில்

ஸ்ரீபக்திஸார - பாதயுகள - பக்திஸாரா! எச்சரிகை.

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக் கிறைவன் இணையடி
அடைந்துய்ந்த தேவா! எச்சரிகை.

ஸ்ரீஅழகிய சிங்கர் ஸந்நிதியில்

ஸ்ரீப்ரஹ்லாதாஹ்லாதந – ஹிரண்ய - பயங்கரவரேண்ய -
ந்ருஸிம்ஹ - சரண்யா! எச்சரிகை.

பள்ளியில் ஓதி வந்த ஒள்ளிய சிறுவனுதி தெள்ளிய
சிங்கத்தின் பள்ளியரவான தேவா! எச்சரிகை.

ஸ்ரீஆண்டாள் ஸந்நிதியில்

ஸ்ரீமந் – நந்த - நந்தந - ஸுந்தரீ - ஸோதரீ - பாவ - பாவிதா! எச்சரிகை.

அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்த சுரும்பார்
குழற்கோதை, "நம் கோயிலண்ணனே" என்ற தேவா! எச்சரிகை.

ஸ்ரீ ஆளவந்தார் ஸந்நிதியில்

முடங்கிநின்ற யாமுனர்தம் மூவிரலும் நிமிர்த்து
முக்குறையும் நீக்கி மும்மறை விளக்கி
முக்குறும்பறுத்து முக்கோல் தரித்து
மூவுலகும் ஏத்த நின்ற தேவா! எச்சரிகை.

யதிகட்கிறைவன் யமுனைத் துறைவன்
இணையடியாம் கதி பெற்றவர்க்கு
நாம் ஏகலவ்யன் என்ற தேவா! எச்சரிகை.

ஸ்ரீநம்மாழ்வார் ஸந்நிதியில்

ஸ்ரீமாதாவாங்ரி ஜலஜத்வய நித்யஸேவா
ப்ரேமாவிலாஸய பராங்குச பாதபக்தா

பூமன்னுமாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த பாமன்னு
மாறன் அடிபணிந்துய்ந்த தேவா! எச்சரிகை.

acharya.org

ஸ்ரீமணவாள மாமுநிகள் திருமஞ்சன கட்டியம்

ஸ்தபநத்தின்போது

நாயன்தே ! நாயன்தே !

ஸ்ரீமத்ரங்கம் ஜயது பரமம் தாமதேஜோ நிதாநம்
பூமா தஸ்மிந் பவது குசலீ கோபி பூமாஸஹாய: ।
திவ்யம் தஸ்மை திசது விபவம் தேசிகோ தேசிகாநாம்
காலே காலே வரவரமுநி : கல்பயந் மங்களானி ॥

1. இப்புவியில் அரங்கேசர்க்கு ஈடளித்த பெருமாள் !
2. எழில் திருவாய்மொழிப்பிள்ளை இணையடியாம் பெருமாள் !
3. ஐப்பசியில் திருமூலத்து அவதரித்த பெருமாள் !
4. அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும் பெருமாள் !
5. எப்புவியும் ஸ்ரீசைலம் ஏந்த வந்த பெருமாள் !
6. ஏராரும் எதிராசர் என உதித்த பெருமாள் !
7. முப்புரிநூல் மணிவடமும் முக்கோல் தரித்த பெருமாள் !
8. மூதறியும் மணவாள மாமுனியாம் பெருமாள் !

நம்தேசிகர் சிகாமணிப் பெருமாள்!

1. தேவரீர் திருவடித்தாமரைகளில் . . . . (35) முடிய—எம்பெருமானார் திருமஞ்சனக் கட்டியம்,

இப்போது தேவரீர் திருமஞ்சனம் கொண்டருள எழுந்தருளியிருக்கும் அழகிது.

ஏதேனும் சிந்தை மருளோ . . . . தேஜஸ்ஸோ—எம்பெருமானார் திருமஞ்சனக் கட்டியத்தில் போல்,

ஸஹஸ்ரதார திருமஞ்சனக் கட்டியம்

நாயன்தே ! நாயன்தே !

ஸத்யம் ஸத்யம் புநரிதி புரா ஸாரவித்பிர் யதுக்தம்
ப்ரூமச் ச்ரோத்ராத் ச்ருணுத ஸுதியோ மத்ஸரம் வர்ஜயித்வா
தத்வம் விஷ்ணு : பரமநுபமம் தத்பதம் ப்ராப்ய மேவம்
தத்ஸம் ப்ராப்தௌ வரவரமுநிர் தேசிகோ தீர்க்கதர்சீ ॥

பூத்வா பூயோ வரவரமுநிர் போகிநாம் ஸார்வபௌம :
ரக்ஷயத் யஸ்மாந் ரகுகுலபதே ராச்ரிதோ பத்ரபீடம் ।
தம்த்வம் கத்வா வ்ரஜ சரண மித்யாதிசத் ராகவோயம்
ஸ்வப்நே ஸோயம் வரவரமுநிஸ் ஸம்ச்ரியோ மாத்ருசாநாம் ॥

acharya.org

1. செந்தமிழ் வேதியர் சிந்தை மகிழ்ந்திட ஈடுரைத்த அசைவோ ?
2. சிருலகாரியர் நற்கலை உண்மை விரித்துரைத்த அசைவோ ?
3. மந்த மதிப்புவி மானிடர் உய்ந்திட வந்தளித்த அசைவோ ?
4. மாசறுஞானியர் சேர் எதிராசரை மண்டி வாழ்த்தும் அசைவோ ?
5. கந்த மலர்ப் பொழில் குருகாதிபன் அந்தமிழ் சிந்தை செய்த அசைவோ?
6. காரமர் மேனி அரங்கரை நாடொறும் கண்டு போற்றும் அசைவோ ?

சங்கொடு மஞ்சளும் எண்ணெய் புளிப்பழம் அஞ்சனமாம் இவையாம் மஞ்சனமாடி மகிழ்ந்தருளீர்—மணவாள மாமுனியே ! ஜயவிஜயீ பவ.

ஸ்ரீமணவாள மாமுனிகள் மங்களாஸாஸந காலத்தில் அநுஸந்திக்கும் கட்டியம்

1. உடையவர் ஸந்நிதியில்—ஸ்ரீமத்யதீந்த்ரப்ரவணாபிதாந-எச்சரிகை.
உபநிஷத்கிரி குஹோ பகூடயதிவர தத்வவிதக்ரேஸா—எச்சரிகை.

2. தாயார் ஸந்நிதியில்—ஸ்ரீமத்ப்ருகு முனிதப : பலாவதார வேதவல்லி கடாக்ஷ பாத்ரபூத—எச்சரிகை.
வேதார்த்த மறுதியிடும் நூலாதிப் ப்ரகரணத்தால் வேதவல்லி புகமூனைத்தும் ஓதியுணர்ந்துரைத்த தேவ—எச்சரிகை.

3. தேவப் பெருமாள் ஸந்நிதியில்—ஸ்ரீதேவராஜ ப்ரவர்த்தித ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரவ்ருத்திகார எச்சரிகை.
ஆனையின் துயரந் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்றாழி தொட்டானை அடைந்துய்ந்த தேவ—எச்சரிகை.

4. திருமழிசைப்பிரான் ஸந்நிதியில்—ஸ்ரீபக்திஸார பாதயுகள பக்திஸார—எச்சரிகை.
இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவ னடியிணை அடைந்துய்ந்த தேவ—எச்சரிகை.

5. அழகிய சிங்கர் ஸந்நிதியில்—ப்ரஹலாதாஹ்லாதந ஹிரண்ய பயங்கர வரேண்ய ந்ருஸிம்ஹசரண்ய—எச்சரிகை.
பள்ளியிலோதி வந்த வொள்ளிய சிறுவனுதித் தெள்ளிய சிங்கத்தின் பள்ளியரவான தேவ—எச்சரிகை,

6. ஆண்டாள் ஸந்நிதியில்—ஸ்ரீமத்கோதா க்ரஜாவதார—எச்சரிகை.
திருப்பாவை முப்பதையும் விருப்பா லுரைத்த சுரும்பார் குழற்கோதை திருப்பாதம் பணிந்த தேவ—எச்சரிகை.

srivatsam
acharya.org

7. ஆளவந்தார் ஸந்நிதியில்—யாமுநார்யமஈ: காமநா கல்பதரோ—எச்சரிகை.

எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாங் கதி பெற்றவர்க் கன்பு பூண்ட தேவ—எச்சரிகை.

8. பார்த்தஸாரதி ஸ்வாமி ஸந்நிதியில்—ஸ்ரீவசநபூஷணவ்யாக்யாவ்யக்தீக்ருத பாண்டவ தூதவைபவ—எச்சரிகை.

போர்ப்பாகுதான் செய்த தேர்ப்பாகனுர்க்கே தீப்பாரையாமினியை ஓர்ப்பாலுரைத்த தேவ—எச்சரிகை.

9. நம்மாழ்வார் ஸந்நிதியில்—இப்புவியிலரங் கேசர்க்கு ஈடளித்த தேவா—எச்சரிகை.

க்ருஷ்ணத்ருஷ்ணுதத்வாவதாராயித சடமதநசரணும்புஜ யதிவர சரண ப்ரவண—எச்சரிகை.

மணவாள மாமுனிகள் ஏகாந்த ஸேவையில் அனுஸந்திக்குமது

முன்னிலும் பின்னழகிய தேவ—எச்சரிகை. அஞ்சுகுடிக்கொரு சந்ததியாம் ஆண்டாள் தமக்கும் அண்ணரானவர்க்கு அன்பு பூண்டதேவ—எச்சரிகை.

ஸ்ரீ பாராங்குசார்ய திவ்யஸூக்தி ஷட்த்ரிம்ஸத் ஹஸ்ரவ்யாக்யா ப்ரவர்த்தந—எச்சரிகை.

பவபயாபிதப்த ஜநபாகதேயவைபவ பாவிதாவதரண—எச்சரிகை.

அகிலஜகத்திதாநுஸாசந ப்ரவ்ருத்த ச்ருதிசிகர நிகராந்தர் ஜ்வர பிஷ்க்வர—எச்சரிகை.

ஸ்ரீபகவத் பாஷ்யகாராவதார—எச்சரிகை. ஸ்ரீரங்கராஜ ப்ரகடித நிஜபத்ய வைபவ—எச்சரிகை.

சாத்துமுறையன்று திருக்கைத்தல ஸேவையில் பெருமாளுக்கு அனுஸந்திக்கும் கட்டியம்

ஸுராஸுர முகுட சூடாரஞ்ஜித பாதாரவிந்தயுகல—எச்சரிகை.

அன்றியவாணன் ஆயிரந் தோளுந் துணிய அன்றாழிவிடுத்த தேவ—எச்சரிகை.

குந்தீஸுதரதாச்வ குரரஜோதூஸரித கேசபாச—எச்சரிகை.

பாழியால் மிக்க பார்த்தனுக்கறமுன்று மளித்துகந்த தேவ—எச்சரிகை.

கம்பீராம்பஸ்ஸமுத்பூதஸம்ம்ருஷ்ட நாளரவிகர விகஸித புண்டரீகதளாமலாயதேக்ஷண—எச்சரிகை.

நாச்சியாருடைய கட்டியம்—ஸ்வாமிநீ எச்சரிகை.

acharya.org

(1981) ஸ்ரீரங்கம் நம்பெருமாள் இயல் கோஷ்டி

srivatsam

1980 திருப்பதி இயல் கோஷ்டி

acharya.org

பெருமாள்கோவில் (காஞ்சிபுரம்) இயல் கோஷ்டி 1969 முறையேஸ்ரீ.

முதல்வரிசையிலுள்ளவர் : ப்ர அனந்தாசாரியார் T. T. பாஷ்யகார், காவல்கழனி ஸ்வாமி, முதலியாண்டான் ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர் எம்பெருமானார் ஜீயர், P. B. A. ஸ்வாமி, வரதாசாரியர் (Forest Dept.,) அழகிய மணவாள ஜீயர், சிங்கராசாரியார் ஈச்சம்பாடி சடகோபாசாரியர்.

srivatsam

ஸ்ரீபெரும்பூதூர் இயல் கோஷ்டி (1971) (1) ஸ்ரீ. உ. வே. திருமணி ஸ்வாமி. (2) எம்பெருமானார் ஜீயர், (3) P. B. A. ஸ்வாமி, (4) ஆழ்வார் திருநகரி கற்குளம் ஸ்வாமி காணலாம்.

acharya.org



1961-இல் இயல் கோஷ்டி. T. A. ரங்காசாரியர், சிரோன் மணி நரஸிம்மாசாரியர், காந்தூர் ரங்கஸ்வாமிஐயங்கார், C. ஸ்ரீனிவாஸவரதாசாரியர், V. A. கோபால ஐயங்கார், K. V. அனந்தாசாரியர்.

srivatsam

acharya.org

1959 இயல் கோஷ்டி (1) அழகியமணவாள ஜீயர், (2) பிள்ளை லோகம் பாஷ்யகார்.

srivatsam

1962 இயல் கோஷ்டி

(1) ப. ரங்கப்பங்கார் (2) காந்தூர் ரங்கஸ்வாமி ஐயங்கார்,

acharya.org

1963-இல் இயல் கோஷ்டி (1) பழனூர் ரங்கப்பங்கார், (2) P. K. ஸ்ரீராம ஐயங்கார்.

srivatsam

1965 இயல் கோஷ்டி

acharya.org

திருவல்லிக்கேணி மணவாளமாமுனிகள் சாற்றுமுறை
(குடைநிழலில் பார்த்தசாரதிஸ்வாமி)

Srivaisam

ப. ரங்கப்பங்கார். (2) காங்தூர் ரங்கஸ்வாமி ஐயங்கார்,
(3) நல்லப்பா நரசிம்மாசாரியர்.

acharya.org

1980 இயல் கோஷ்டி

1981-இல் வேதபாராயண கோஷ்டி

srivatsam

acharya.org



1982–ல் நிர்வாகிகள் கோஷ்டி (தொடக்கதாரர்கள்)

srivatsam

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீபெரும்பூதூர் ஜீயர் ஸ்வாமி

acharya.org